கல்கி



KALKI 1·2·59

30 நயா பைசா

யந்திரங்களின் வெற்றி ஒலி...


1957ல் ப்ஹ்ரீனிலிருந்து ஸ்ரீ பல்பீர்சிங் ஜம்ஷெட்பூர் வந்த போதுதான் ரூ 100 மில்லியன் செலவில் புதிய ப்ளுமிங் மில் நிறுவுவதற்கான இடம், சிறுமலையை வெட்டி, காடு களை அழித்துச் சமதளமாக்கப்பட்டிருந்தது. இது, டாடா ஸ்டீலின் 2 மில்லியன் டன் விரிவான திட்டத்தின் ஓர் முக்கிய அமிசமாகும்.

இன்று இப்புதிய 46" ப்ளுமிங் மில் இந்தியாவிலே மிகப் பெரியது. இது, 2 மில்லியன் டன் உற்பத்தி செய்யும் சக்தி வாய்ந்தது; ப்ளூம்கள், ஸ்லாப்கள் மூலம் தண்டவாளங்கள், ப்ளேட்டுகள், தகடுகள், கட்டிட நிர்மாண எஃகுப் பொருள்கள் ஆகியவற்றையும் இன்னும் பிற பல பொருள் களையும் உற்பத்தி செய்வதற்குத் தயாராக விருக்கிறது.

சூயஸ் தகராறு காரணமாக, வெளியிலிருந்து முக்கிய சப்ளை வருவதில் தாமதம், பிற கஷ்டங்கள் ஆகியவை ஏற்பட்டிருந்தும், சிரத்தை மிகுந்த ஸ்ரீ பல்பீர்சிங் போன்ற பலரின் பெரு முயற்சியால் இப்ப்ளுமிங் மில் துரிதமாகப் பூர்த்தி பெற முடிந்தது. இந்த வகையில் அவரும் நூற்றுக் கணக்கான இந்தியர்களும், அமெரிக்க, ஜெர்மானிய தொழில் நிபுணர்களின் உதவியோடு இம்மகத்தான ப்ராஜெக்ட் மூலம் எஃகுப் பொருள்கள் உற்பத்திக்கும், இந்தியப் பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதற்கும் இரவு பகலாக உழைத்தார்கள்.

டாடா ஸ்டீல்

இரு மில்லியன் டன் உற்பத்திக்கு



The Tata Iron and Steel Company Limited


TN 3132

கல்கி

பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.




ஜனவரி
30
முதல்
விஜயாவின்
கடன் வாங்கி கல்யாணம்
டைரக்ஷன்: பிரசாத் • தயாரிப்பு: நாகிரெட்டி & சக்ரபாணி



மலர் 18 இதழ் 27	தமிழ்த்திரு நாடு தன்னைப் — பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்	விளம்பி௵ தை மீ 19

ஜனவரி முப்பது

இந்தத் தேதி இந்திய மக்கள் உள்ளத்துக்கு மிகப் புனிதமான தேதியாகும். காந்தி மகான் முப்பது கோடி இந்திய மக்களின் வாழ்வோடு ஒன்றிப் பிணைந்து விட்டார். காந்தி மகான் எந்த லட்சியத்துக்காக வாழ்ந்தார் என்பதை மறக்காமல் இருப்பதற்காக ஜனவரி முப்பதாம் தேதியன்று பிரார்த்தனைக் கூட்டங்கள் நடத்தி அவரது லட்சியங்களை நினைவுறுத்திக் கொள்கிறோம்.

காந்தி மகானின் லட்சியங்கள் இந்திய நாட்டுக்கு மட்டும்தான் உகந்தவை" என்பதல்ல. உலக அரசியல் விவகாரத்திலும், உலக மக்கள் நடவடிக்கைகளிலும் வெற்றிகரமாகப் பயன்படுத்தலாம் என்று நிரூபித்தவர் ராஜாஜி. ஒரு நல்லப் பட்சமாக அணுகுண்டு சோதனைகளை நிறுத்த முடியுமா என்று உலகில் பலர் கேட்டுக் கொண்டிருந்தபோது, ருஷ்யாவை அப்படி நிறுத்தம் செய்தார் ராஜாஜி. அகில உலக விவகாரத்துக்குக் காந்திய முறைகள் எடுபடும் என்பதை எடுத்துக் காட்டினார் ராஜாஜி.

ருஷ்யா செய்த நற்செய்கை எதிர்பார்த்த பலனை விளைவிக்கவில்லை யெனினும் ராஜாஜி விடாமற் அந்த முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார். சத்தியத்தையும் அன்பையும் நம்பி எடுக்கும் பணிகளுக்குத் தோல்வி என்பதே கிடையாது. இப்பொழுது அமெரிக்க மக்களுக்கு மீண்டும் ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கிறார். அது ஜனவரி 18-ம் தேதி நியூயார்க் டைம்ஸ்' பத்திரிகையில் வெளியாகியுள்ளது. அது பின்வருமாறு:

> ஜனவரி மாதத்தில் இந்தியா முழுதும் பிரார்த்தனைக் கூட்டங்கள் நடத்தி, காந்தி மகான் நமக்கு என்ன கற்றுத் தந்தார் என்பதை நினைவுபடுத்திக் கொள்கிறோம். பதினேறு ஆண்டுகளுக்கு முன் ஜனவரி முப்பதாம் தேதியன்று, ஒரு ஹிந்து இளைஞன், காந்தி மகான் முஸ்லிம்களுடன் அன்பு செலுத்தி நல்லெண்ணத்துடன் வாழுங்கள் என்று சொல்லி வந்ததைப் பிடிக்காமல் அவர் வாழ்வை முடித்து விட்டான்.
>
> அமெரிக்க ஜனாதிபதிக்குக் குருஷேவ் விடுத்துள்ள செய்தியும், நிபந்தனைகளும், மிக்கோயன் அவர்கள் நேசப்பான்மையுடன் அமெரிக்காவில் சுற்றுப் பிரயாணம் செய்வதும், இங்கே எங்களுக்குப் புது நம்பிக்கையை யுண்டாக்கியிருக்கின்றன. இனி உலக விவகாரங்களில் பொறுமையும், புகைச்சலும், சந்தேகமும் காண்பதற்குப் பதில் நல்லெண்ணம் காணப்படும் என்ற நம்பிக்கையை உண்டாக்கியிருக்கின்றன. இந்தச் சந்தர்ப்பத்தில் 1948-ம் ஆண்டு பிப்ரவரி 17-ந் தேதி இங்கிலாந்து வெஸ்ட்மின்ஸ்டர் கோயிலில் ஸர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ் சொன்னதைப் படித்துக் கொள்வது அமெரிக்கர்களுக்கு நல்லது என்று நினைக்கிறேன்.
>
> "உலகம் அவருடைய (காந்தி மகானுடைய) வாழ்க்கையிலிருந்து அடிப்படை உண்மைகள் சிலவற்றையாகிலும் கற்றுக் கொள்ளலாகாதா? பூரண அழிவிலிருந்து நம்மைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமென்றால் ராணுவ பலத்தையும் பலாத்காரத்தையும் நம்பிப் பயனில்லை; நம்மைக் காப்பாற்றக்கூடிய மகத்தான ஆயுதம் அன்பின் சக்தியே என்பதையாகிலும் தெரிந்து கொள்ளலாகாதா? அவ

ருடைய உண்மையான தத்துவத்தைத் தாமஸ் ஏ கெம்பஸ் அவர்களுடைய மொழிகளைவிட வேறு ஒன்றும் விளக்காது .'அன்பு எதையும் சுமையாகக் கருதுவதில்லை ; எதையும் இடையூறாகக் கருதுவதில்லை. தன் சக்திக்கு மிஞ்சிய காரியத்தையே சாதிக்க முயல்கிறது. எதையும் செய்ய முடியாது என்று சமாதானம் சொல்வதில்லை. ஏனெனில் எல்லாம் நியாயம் என்றே அன்புக்கு படுகிறது ; சாதிக்க முடியாத காரியங்களையெல்லாம் சாதிக்கலாம் என்று அன்பு தைரியமாக நினைக்கிறது.' அதனால் எல்லாக் காரியங்களையும் அது சாதிக்க முடிகிறது. நடக்க முடியாது என்ற பணிகளையெல்லாம் முடித்துவைக்கிறது. அன்பற்றவன் சோர்வடைந்து கையாலாகாது என்று விடும் பணிகளை அன்புள்ளவன் வெற்றிகரமாக முடித்துக் காண்பிக்கிறான்'''

அகில உலக ராஜதந்திர விவகாரங்களிலும் அன்பு என்னும் அற்புத ஆயுதத்தைச் செலுத்தி வெற்றி காணலாம் என்பதை ராஜாஜி வற்புறுத்துவதை அமெரிக்காவில் பிரசித்தமான பத்திரிகை தன் பத்திகளில் இந்தச் சமயம் பிரகரித்திருப்பது கவனிக்கத் தக்க விஷயம்.


மிக்கோயன் விஜயம்


ருஷ்யாவின் உதவிப் பிரதமர் அனஸ்டாஸ் மிக்கோயன் அமெரிக்காவுக்கு விஜயம் செய்து, ஒரு பெரும் வெற்றியைச் சம்பாதித்துக் கொண்டு அமெரிக்க சர்க்காரைத் திருதிருவென்று விழிக்கச் செய்து விட்டு ஊர் திரும்பி விட்டார்.


மிக்கோயன் ருஷ்யாவின் ஆதரவாகவோ, உத்தியோக முறையிலோ வரவில்லை. தமது ஓய்வு நாட்களை அமெரிக்காவில் கழிக்க வருவதாகத்தான் சொன்னார். அமெரிக்க மக்களையும் தேசத்தையும் சுற்றிப் பார்க்க வருவதாகத்தான் கூறினார். வந்தவர், ஒரு அரசாங்க அந்தஸ்து பெற்ற ஆதர் சாதிக்க முடியாத காரியத்தைச் சாதித்து விட்டுப் போய்விட்டார். அமெரிக்க சர்க்காருக்குப் பிடிக்காத அளவில் அமெரிக்கப் பொதுமக்களின் உள்ளங்களைக் கொள்ளைகொண்டு போய் விட்டார்!

மிக்கோயன் அமெரிக்காவில் பொது மக்களுடன் பழகினார். பொதுமக்கள் வியா

அரசியல் கிரிக்கெட்!







பாரம் செய்யும் இடங்களுக்குச் சென்றார். சினிமா தொழில் ஸ்தாபனங்களுக்குச் சென்றார். அமெரிக்கத் தொழிலாளர்களுடன் கலந்து பேசினார். போர்டு மோட்டார் தொழிற்சாலைகளுக்குச் சென்று பார்வையிட்டார். "அமெரிக்கத் தொழில் பிரமுகர்கள் யுத்தம் விரும்புகிறார்கள் என்பதை இனி என்னால் நம்ப முடியாது. ஏனெனில் யுத்தம் வந்தால் தொழிற்கூடங்கள், இயந்திரங்கள் எல்லாம் நசித்துப் போகுமல்லவா? இதை எந்தத் தொழிற் பிரமுகர் விரும்பமுடியும்?

"ருஷ்யா—அமெரிக்கா இரு நாடுகளிடையே நிலவும் தவறான எண்ணங்களைப் போக்க வேண்டும்!" என்றார். சிக்காகோ நகரில் ஒருபஸ் டிரைவரின் இல்லத்துக்குச் சென்று குசலம் விசாரித்தார்.

இப்படிப் புலப் பல முறைகளில் ருஷ்யர்களும் தம்மைப்போல் மனிதர்கள் என்ற உணர்ச்சியை அமெரிக்க மக்களிடத்தில் உண்டாக்கி விட்டுப் போய் விட்டார்.

ஆனால் அமெரிக்க ஜனாதிபதியோ, மீண்டும் பழைய பல்லவியையே பாடுகிறார். 'ருஷ்யர்கள் எத்தனை முறை எத்தனை ஒப்பந்தங்களை அலட்சியப்படுத்தியிருக்கின்றனர்!' என்று பழங் கணக்கை எடுத்துச் சொல்கிறார்.

ருஷ்யாவின் பழைய நிலைக்கும் புதிய நிலைக்கும் எவ்வளவோ வித்தியாசம் உண்டு.

முன்பு ருஷ்யாவைவிட அமெரிக்கா ராணுவத்துறையில் முன்னணியில் நின்றது. ஆனால் இப்பொழுது, ஸ்புட்னிக்குகளும் லூனிக்குகளும் வானத்தில் பறக்க விட்ட பிறகு, ருஷ்யா விஞ்ஞானத் துறையில் ராணுவ பலத்தில் அமெரிக்காவையே மிஞ்சி விட்டது என்பதைச் சந்தேகமற நிரூபித்து விட்டது. இந்நிலையில் ருஷ்யா, அமெரிக்காவின் நட்பைக் கோருகிறது என்றால், அதைச் சந்தேகக் கண்கொண்டு பார்க்க வேண்டியதில்லை. அமெரிக்க சர்க்கார் சந்தேகத்துடன் பார்த்தாலும், அமெரிக்க மக்கள் முன்னளவு அமெரிக்க சர்க்காருடன் ஒத்துப்போக மாட்டார்கள். இந்த மன மாறுதலை மிக்கோயன் விஜயம் சாதித்து விட்டது!

குமாய், மாட்சு தீவுகள் சம்பந்தமாக அமெரிக்க சர்க்கார் முரட்டுப் பிடிவாதமாகச் சியாங்கே ஷேக்கை ஆதரித்து நின்றதானது, ஆளும் கட்சியாகவுள்ள குடியரசுக் கட்சிக்குப் பெருந் தோல்வியைத் தேடித் தந்தது.

மிக்கோயன் விஜயத்துக்குப் பிறகும் அணுகுண்டு ஜலஜ குண்டு விஷயத்தில் அமெரிக்க சர்க்கார் பழைய பல்லவியையே பாடினால் அமெரிக்க மக்கள் பொறுத்துக் கொண்டு சும்மா இருக்க மாட்டார்கள்!

ஆகவே, விரைவில் ருஷ்ய சர்க்காருடன் இவ்விஷயத்தில் உடன்படிக்கை செய்து கொண்டேயாகவேண்டும்.

நல்லவேளையாக ராணுவ தளவாட பரிகரணமும் அணு-ஜலஜகுண்டு நிறுத்தமும் சேர்த்துப் பேசாமல் தனித்தனியே இப்பொழுது பிரித்துப் பேசத் தலைப்பட்டிருக்கிறார்கள். அத்துடன் ஜலஜகுண்டு சோதனைகளைக் கால வரம்பின்றி ஒழித்து விடுவதா அல்லது ஒரு வருஷத்துக்கு நிறுத்தி வைத்து விட்டு, பிறகு அடுத்த

வருஷமும் அந்த ஒப்பந்தத்தைப் புதுப்பித்துக் கொள்வதா என்ற யோசனையில் ஆழ்ந்திருக்கிறார்கள்.

ஆண்டுதோறும் புதுப்பித்துக் கொள்ளும் ஜலஜகுண்டு சோதனைகளை நிறுத்தத் திட்டமே ஏற்றுக் கொள்ளலாம் என்று அமெரிக்க சர்க்கார் சொல்லுகிறார்கள். காலவரம்பின்றி நிறுத்தவேண்டும் என்று ருஷ்ய சர்க்கார் கேட்கிறார்கள். காலவரம்பின்றி நிறுத்திவிட்டு, காரணம் ஏற்பட்டால், அந்தக் காரணத்தைப் பகிரங்கமாகச் சொல்லி விளக்கி, எந்த வல்லரசும் ஒப்பந்தத்தை மறுதளித்து விடலாம் என்கிற நிபந்தனை வைத்துக்கொண்டு இரு சாராரும் உடன்படிக்கை செய்துகொள்ளலாம் என்று ராஜாஜி ஒரு யோசனை சொல்லிவருகிறார். இப்படி நடந்துவிட்டால் உலகத்துக்கு க்ஷேமமாகும்.

கதம்பக் கவிமலர்கள்

ஈகைக் குணம் படைத்தவனுக்குச் செல்வம் பெருகினால் எவ்வளவு நல்லதோ, அவ்வளவு நல்லது கலைஞனுக்கு நல்ல அனுபவங்கள் கிடைப்பது. கவி, சிற்பி, ஓவியன், கதாசிரியன் இவர்கள் அடையும் இன்ப துன்ப அனுபவங்களால் உலகத்துக்குப் பெரிய நன்மை கிடைக்கிறது.

சராசரி மக்களுக்கு அனுபவங்களில் சிக்கி உழலும் வெறும் மானிடப் பண்பு மட்டுமே இருப்பதால் அவற்றில் கலை மெருகேற்றிச் சொல்லவோ, எழுதவோ, அவர்களால் முடிவதில்லை. கலையுள்ளம் படைத்தவர்கள் தம் அனுபவங்களையே விலகி நின்று கலைக் கண் கொண்டு நோக்கிச் சுவையாக்க முடியும். மனக் கூர்மையுள்ளவர்களுக்கு, வாழ்க்கை அனுபவங்கள் எத்தனை சுவையான கதைகளை அளிக்கின்றன. பழைய தலைமுறையில் வாழ்வின் சுவையான அனுபவங்களைப் பாடல்களாகப் பாடி வைத்தார்கள் புலவர்கள். புறநானூற்றுக் காலத்திலிருந்து பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தில் வாழ்ந்த கவிராயர்கள் வரை ஏராளமான புலவர்கள் ஒரு சம்பவத்தைக் கதைபோலச் சித்திரிக்கும் அழகான பாடல்களைப் பாடியுள்ளனர். ஐந்து ஆறு வரிப் பாடலில் சம்பவத்தை நயமாக அமைத்துக் காட்டினார்கள் அந்தப் பெரும் புலவர்கள்.

எல்லோராலும் எழுத முடிந்ததும், எல்லோராலும் படிக்க முடிந்ததுமான உரை நடையில் எழுதுவதைவிட எல்லோராலும் எழுத முடியாத — எல்லோராலும் எளிதில் உணர்வதற்கரிய — கவியில் கதை போலச் சம்பவத்தைச் சித்திரித்தார்கள் என்றால் அது பெருந் திறமைதானே? கதம்பப் பூமாலையில் விரவிய பல நிறத்துப் பூக்களைப் போல் அந்தக் கவி மலர்களில் எத்தனை விதங்கள்! எத்தனை சுவைகள்! எத்தனை நயங்கள்! எத்தனை அழகு!

புலவர்களின் சொந்த அனுபவங்கள் சில, வள்ளல்களின் பண்புகள் கூறுபவை சில, வீரம், காதல், சோகம், நகைச்சுவை என்று சுவைகளைக் கூறும் கதைகள் சில. இடைக்காலத்துப் புலமை வாழ்க்கையின் பல்வேறு நிலைகளைச் சுவைபடக் காட்டும் கதம்பக் கவி மலர்ச் சோலைக்குள் புகுந்து விட்டால் திரும்ப மனமே வராது.

தனிப் பாடல்கள், பெருந்தொகை முதலிய நூல்களிலிருந்தும் பிறவற்றிலிருந்தும் தொகுக்கப்படும் இந்தக் கவிமலர்க் கதம்பம் இந்த இதழிலிருந்து ஆரம்பமாகிறது. 'திருமண விருந்து' என்னும் முதல் கதம்பக் கவி மலர் 37-ம் பக்கத்தில் பிரசுரமாகியிருப்பதைக் காணலாம்.

பக்தர் தியாகராஜர்

பக்தி பண்ணிக் கொண்டிருந்தால்
முக்தி பெறலாமே!

— கோபாலகிருஷ்ண பாரதியார்

ராமனை அன்பனாயும் நண்பனாயும் குருவாயும் மன்னனாயும் பலப் பல வழிகளில் பாடிப் பரவசமானார் தியாகராஜர்.

தமிழர்கள் பரந்த மனப்பான்மை உள்ளவர்கள். தமிழர்கள் தமிழ்ப் பாடல்களையே கேட்க வேண்டும் என்று ஆசைப்பட்டாலும், பக்தர்கள் என்று வந்து விட்டால் அவர்கள் எந்த மொழியில் பாடினாலும் அந்தப் பக்திக்குத் தலைவணங்கிக் கேட்பார்கள். தியாகராஜ சுவாமிகளின் ராமபக்திக்குத் தலை வணங்காத தமிழர்களே கிடையாது.

தமிழகத்தின் தனிச் சொத்து கர்நாடக சங்கீதம். இதன் நுணுக்கங்களை ஆராய்ந்து அனுபவித்து இந்தக் கலையை வளர்த்த பெரியார்கள் பலர். ஆனால் யாருடைய பெயர் கவனத்துக்கு வந்தாலும் வராவிட்டாலும் மும்மூர்த்திகளில் முதன்மையான தியாகய்யருடைய பெயர் மட்டும் எல்லோருக்கும் தெரியும். இசை என்று எங்கெல்லாம் ஒலிக்கிறதோ, ஹார்மோனிய ஓசையும் தம்புரா நாதமும் எங்கெங்கெல்லாம் கேட்கின்றனவோ, கிருதிகள் என்று எங்கெல்லாம் பாடப்படுகின்றனவோ, பஜனைக் கூடமானாலும் சரி, கச்சேரி மேடையானாலும் சரி, அங்கெல்லாம் தியாகப்பிரும்மத்துக்கு அஞ்சலி செய்வார்கள்.

அவர் விதேக கைவல்யம் அடைந்த தை மாத பகுள பஞ்சமி தினம் ஆராதனை தினமாக நாடெங்கும் கொண்டாடப் படுகிறது. ஜனவரி 31-ந் தேதி அவருடைய இவ்வருஷத்திய ஆராதனை தினம். இதையொட்டி இம்மகானின் திருவுருவத்தை இவ்வார இதழின் அட்டையில் வெளியிட்டு அஞ்சலி செலுத்துகிறோம்.



உஷ்ணத்தினால் உருக்கப்பட்ட நெய்யை நிறமற்றதாகக் காண்கிறோம். அதே நெய் குளிர்ந்தவுடன் வேறு நிறத்தை அடைகிறது. ஈசனை உருவமற்றவர், அரூபி என சாஸ்திரங்கள் கூறுகின்றன. ஆனால் பக்தர்களின் உள்ளத்தில் ஈசனிடம் அன்பு பரிபூரணமாகப் பொங்கி வழியும் போது அந்தக் குளிர்ந்த நிலையில் உருவமில்லாத கடவுளும் அவர்களின் பக்திக்குக் கட்டுண்டு அவர்களை உய்விக்க ஒரு உருவத்தை அடைகிறார். அவ்விதம் பல உருவங்களில் ஈசன் நம்மைக் காத்து வருகிறார்.

ஒரு இடத்தில் ஆபரணம் எதுவுமின்றி இயற்கை எழிலுடன் ஈசன் பிக்ஷாண்டார் மூர்த்தியாகத் திருக்கோலம் கொள்ளுகிறார். மற்றொரு புறம் அழகே உருக்கொண்ட சுந்தரேசுவரராகக் காட்சி யளிக்கிறார். அதே கடவுள் வீரத்தைக் காண்பிக்கும் வகையில் வீரபத்ரராகக் காட்சி அளிக்கிறார். மற்றொரு சமயம் பயத்தைப் போக்கி அபயம் அளிக்கும் பைரவ மூர்த்தியாகத் திகழ்கிறார். தேவர்கள், சனந்த சனகாதி முனிவர்களுக்கு ஆனந்தத்தைக் கொடுக்கத் திருச்சிற்றம்பலத்தில் நர்த்தனம் செய்கிறார். எல்லாவற்றிலும் உயர்ந்த தான ஞானத்தைக் கொடுக்கும் தெய்வமாகத் தக்ஷிணாமூர்த்தி வடிவத்துடன் அமர்ந்து முனிவர்களுக்கு ஞானோபதேசம் அருளுகிறார். இவைகளெல்லாம் பரமசிவனின் திருக்கோலங்கள். உலகத்தைச் சிருஷ்டி செய்யும் முறையில் பிரும்மா வென்றும், பரிபாலனம் செய்யும் வகையில் விஷ்ணு என்றும், சம்ஹாரம் அல்லது தம்முள் அடக்கி வைத்துக் கொள்ளும் முறையில் சிவன் என்றும் மூன்று நாம ரூப பேதங்களை முழு முதல் சக்தியான சர்வேசுவரன் அடைந்திருக்கிறார்.

அம் மூர்த்தி ரூபங்களில் பரமசிவனுக்கே அதிக கருணை என்று தோன்றுகிறது. சிருஷ்டி வேலையில் கருணை தேவையில்லை. மகா விஷ்ணுவோ மக்களின் புண்ணிய பாபங்களுக்குத் தகுந்தவாறு ரக்ஷிப்பது, சிக்ஷிப்பது என்று சுக துக்கங்களை அளவிட்டே கொடுக்கிறார். ஆனால் பரமசிவனோ பாபம் புரிந்தவன், புண்ணியவான், ஞானி, அக்ஞானி என்றும் பாகுபாடின்றி, பிரளய காலத்தில் உலகம் முழுவதற்கும் ஓய்வு அளித்து அவர்களைச் சுக துக்கங்களினின்றும் விடுதலை செய்கிறார். அவரே கிருபாசாகரம், கருணை வள்ளல். முதலாழ்வார்கள் கூடப் பரமசிவனை 'முக்கண்ணப்பா' என மனமுருகிப் பாடியுள்ளார்கள். தாயுமானவர் ஈசனை 'அம்மையப்பா' எனப் பரிவுடன் அழைக்கிறார். இவ்விதம் எல்லா ஜீவராசிகளுக்கும் அடைக்கலமாக அமைந்திருக்கும் ஈசனது நாளைக் கொண்டாடுவது சிவராத்திரி. ஆதியும் அந்தமுமற்ற லிங்கோத்பவ மூர்த்தியாக நள்ளிரவில் விசுவரூபம் எடுத்த நன்னாள் சிவராத்திரி. இந்த உருவத்தின் முடியைக் காண பிரும்மா அன்னப்பறவையாகவும் மகாவிஷ்ணு பன்றி உருவத்துடன் பாதாளம் வரை சென்றும் இவ்விருவராலும் காண முடியாத எல்லையற்ற சொரூபமாக விளங்குகிறார் பரமசிவன்.

ஜோதி வடிவத்திலிருந்து லிங்கமாக வெளிவந்த பின்னர் லாவண்ய சொரூபத்தை அடைந்த புனித நாள் சிவராத்திரி. இந்தப் புண்ணிய காலத்தில் சர்வேச்வரனைத் தியானித்து, உபவாசம் இருந்து, நித்திரையைத் தவிர்த்துச் சிவாலயங்களில் அவரது லிங்க வடிவைத் தரிசித்து வழிபட்டு, அவருடைய அருளுக்குப் பாத்திரமாகி, என்றும் குறைவற்ற சௌக்கியத்தை அடைய வேண்டும்.

உலகில் உத்கிருஷ்ட வஸ்துக்களையெல்லாம் திரட்டி நானாக உனக்குக் காட்டுகிறேன். அழகு, ஐசுவரியம், சாந்தம், கருணை, வாசனை முதலிய ஒப்பற்ற குணங்களை உருவாக்கி நான் உனக்குக் காட்டுகிறேன் என்று பகவான் நாரதரிடம் சொல்லியிருக்கிறார். ஆகையால் இப்பேர்ப்பட்ட சந்திரமௌளீசுவரனை வணங்கி எல்லோரும் ஆனந்தத்தை அடைய வேண்டும்.


ஸ்ரீ சங்கராச்சாரியார் ◆ காஞ்சி காமகோடி பீடம்

தேர்தல் பிரசாரம்!

இலங்கையின் முன்னாள் பிரதம மந்திரியும் யு. என். பி. என்ற ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் ஆட்சிப்பீடத்தைக் கைப்பற்றப் பகீரதப் பிரயத்தனங்கள் செய்து வருபவருமான ஸ்ரீ டட்லி சேனநாயகா என்பவர் இவ்வாரம் நிகழ்த்திய ஒரு சொற்பொழிவில் இலங்கையிலே ஜனநாயகம் செத்து வருவதாயும் சர்வாதிகாரம் மேலோங்கி வருவதாயும் முதலைக் கண்ணீர் வடித்திருக்கிறார். யு. என். பி. கட்சி ஆட்சியிலிருந்தபோதுதான் இந்நாட்டில் ஜனநாயகம் தழைத்ததாம். யு. என். பி. கட்சியை முறியடித்தவர்களுக்கு இப்போது தாங்கள் செய்த பெருந் தவறு புரிந்து விட்டதென்றும் அடுத்த தேர்தலில் பண்டாரநாயகா கட்சி முறியடிக்கப்பட்டுத் தமது கட்சி இந்நாட்டில் அதிகாரத்துக்கு வருவது நிச்சயமென்றும் அவர் கூட்டத்துக்குக் கூட்டம் பிரசாரம் செய்து வருகிறார். இதை ருசுப்படுத்த, தம்முடன் பிரதமர் தேர்தலில் போட்டியிட்டுப் பார்க்கட்டுமென்று அவர் சவால் விடுத்திருக்கிறார்.

இலங்கையிலே ஒரு பெரும் சமுதாயத்தினரான பத்து லட்சம் இந்திய வம்சாவளியினர்களின் ஓட்டுரிமையைப் பறித்து அவர்களை அரசியல் அடிமைகளாக்கிய புண்ணியவான்கள் இந்தச் சேனநாயகாவின் யு. என். பி. கட்சியினர்தான்.

கொழும்பு, ம. பொ. சி. மன்றத்தினர் இவ்வாரம் மன்றத்தின் ஆண்டு விழாவையும், பொங்கல் விழாவையும் ஒரு தமிழ் விழாவாகச் சிறப்புடன் கொண்டாடியபோது, தமிழரசுக் கட்சியின் முன்னாள் தலைவரும் கோப்பாய்த் தொகுதியின் பார்லிமெண்ட் அங்கத்தினருமான திரு. கு. வன்னிய சிங்கம் தமிழ் மக்களுக்கு ஒரு முக்கியமான வேண்டுகோள் விடுத்தார். சில தமிழ் ஆசிரியர்கள் சிங்களத்தில் பிறரைக் கொண்டு கடிதம் எழுதச் செய்து அரசாங்கக் காரியாலயங்களுக்கு அனுப்புவதாயும் இது தங்களையும் தமிழன்னையையும் அவமதிப்பதற்கு ஒப்பாகுமென்றும் கூறி, இந்த வெட்கக்கேட்டுக்கு உடனே முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். சிங்களத்தில் கடிதம் எழுதினால்தான் விரைவில் பதில் கிடைக்குமென்ற தவறான எண்ணத்துடன் சில தமிழர்கள் பிறரைக் கொண்டு சிங்களத்தில் கடிதம் எழுதும் வழக்கத்தைக் கையாண்டு வருகிறார்கள். இதனால் சிங்களம் நிலைத்துப் போய்த் தமிழை ஒதுக்குவதற்குத் தமிழரே உடந்தையாவது ஒருபுறமிருக்க, பல்வேறு அரசாங்க இலாக்காக்களிலும் தமிழில் மொழி பெயர்க்கும் வேலை அதிகமில்லையென்று வேலைகளில் இருக்கும் தமிழர்களுக்குச் சீட்டு கிழித்து வருகிறார்கள். —ரஜனி



சென்னை பக்கிங்ஹாம் அண்டு கர்னாடிக் கம்பெனியின் டைரக்டரும், முன்னாளில் சென்னை 'ஷெரீப்' பதவி வகித்துப் பணியாற்றியவருமான திரு பி. டி. வி. ராமஸ்வாமி நாயுடுவின் புத்திரன் சிரஞ்சீவி வெங்கடரத்தினத்துக்கும் சௌபாக்யவதி பரிமளா தேவிக்கும் சென்ற ஜனவரி 21உ பார்க் டவுன் பைராகி மடம் கோயிலில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. திருமண வைபவத்துக்குச் சென்னையிலிருந்தும் வெளியூர்களிலிருந்தும் பல பிரமுகர்கள் வந்திருந்து மணமக்களுக்கு ஆசி கூறிச் சிறப்பித்தனர். வாழ்க, மணமக்கள்!

22. பிரஹ்லாத சரிதம் — பக்தன் பட்டபாடு

வரம் வாங்கிய ஹிரண்யகசிபு தனது தம்பியைக் கொன்ற ஹரியினிடம் பகையை வளர்த்து வந்தான். திசைகளுக்கெல்லாம் அதிபதியாகி, மூவுலகை அடக்கி, தேவர், அசுரர், மானிட மன்னர், கந்தர்வர், கருடர், நாகர், சித்தர், சாரணர், வித்யாதரர், முனிவர், பித்ருக்களுள் முதலோர், மனுக்கள், யக்ஷர், ராக்ஷசர், பிசாசர், ப்ரேதர், பூதர் மற்றும் வேறு உயர்வாய்ந்தவருக்குத் தலைவர் எல்லோரையும் தன் வசமாக்கி, லோக பாலகர்களுடைய பதவியையும் அபகரித்துக் கொண்டான். விண்ணுலகைத் தனதாக்கினான்.

நந்தனம் என்ற தெய்வீகப் பூங்காவால் அழகேறியதும், மூவுலகச் செல்வமும் ஓரிடத்தே திரண்டதெனத் தோன்றுவதும், பவழப் படிக்கட்டும், மரகதத் தளமும், பளிங்குச் சுவரும், வைடூர்யத் தூண் வரிசையும், கெம்பிழைத்த ஆசனமும், முத்துக் குவியல் மாலை சூழ்ந்து பால் நுரையை வென்ற வெண் மஞ்சமும் மலிந்த இந்திரனுடைய மாளிகையில் வாழலானான். அங்கு, சிலம்போசை சலசலக்க நடமாடும் அரம்பையர் தம் வதனத்தைக் கல் இழைத்த தரையில் நோக்கிக் களிப்புறுவார். ஹிரண்யனுக்குத் தேவர்கள்தான் தொட்டுத் தொண்டாற்றினர். உட்கொண்ட மதுமணம் வெகு தூரம் வீச, செம்புரித்த கண்ணிரண்டும் ஓயாமல் உருள, தவப்பயனால் மேலேறிய அரக்கனை, மூவரைத் தவிர மற்றெல்லோரும் பரிசேந்திய கையுடன் முன்வந்து வணங்கி நின்றனர். வல்லமையால் இந்திரனின் பதவியில் அமர்ந்தவனைக் கந்தர்வரும் தும்புருவும் நானுமே (நாரதர்) பாடித் துதித்து வந்தோம். பல்வேறு சாதியரின் வேள்விகளின் ஆஹுதியைத் தனக்கே பறித்துக் கொண்டான். உழவின்றிப் பூமியும் பண்டங்களைத் தந்தது. ஆகாயமும் விரும்பியதைச் சொரிந்தது. எழு கடலும் பல நதியும் ரத்தினக் குவியலை அலைமீது வாரி வழங்கின. மலைச்சாரல்கள் விளையாட இடம் தந்தன. மரங்களும் மாதம் தவறாது பூவையும் கனியையும் கொட்டிக் கொடுத்தன. ஆயினும் நிகரற்ற போகங்களை அனுபவித்தும், மனத்தையும் புலனையும் வெளியேற்றி விளையாடிய ஹிரண்யனுக்கு நிம்மதி மட்டும் ஏற்படவில்லை.

இவ்விதம் பல்லாண்டுகள் கடந்தன. கொடுங்கோலால் குன்றிப் புகலிடம் தெரியாது தவித்து, மூவுலகோர் அனைவருமே ஹரியைச் சரண்புகுந்து புகழ்ந்தனர்.

"மீளாத எவ்விடத்தை மாசற்ற
மனதுடையோர்
அடைந்து நீங்கப்பாரோ,
ஆளுக்குள் ஆன்மாவாய்ப்பரவிய
பெருமானின் அவ்விடத்திற்
கடிபணிந்தோம்."

எனத் தோத்திரம் செய்தார்கள்.

அப்பொழுது அசரீரி வாக்கு கேட்டது. "இவ்வரக்கனின் கொடுமையை நான் அறிவேன். அதற்கு வேண்டிய சாந்தி செய்கிறேன். அதுவரை பொறுத்திருங்கள். எவன் மனத்தில் தேவரிடமும், ஆவினத்திடமும் மறையிடமும் மறைவோதுவோரிடமும், தர்மத்தினிடமும் என்னிடமும், பகை வளருகிறதோ, அவன் தாமதமின்றி அழிந்து போவான். தன் மகன் பிரஹ்லாதனை ஹிரண்யன் துன்புறுத்தத் துணிந்ததும், அவனை நான் கொல்வேன்"

இரண்யனுக்கு நான்கு மைந்தர்கள். அவர்களுள் பிரஹ்லாதன் நற்குணங்களுக்கு இருப்பிடமாய் அனைவருக்கும் அன்பனாய் விளங்கினான். சேவகனெனப் பெரியோர் சேவடி வணங்கி நிற்பான். தந்தையெனத் தனியரிடம் தயை கொள்வான்; இணைந்தவருடன் உடன் பிறப்பென நட்புறுவான்; மூதியவரைத் தேவரெனத் தொழுவான். மதி இருந்தும் மதமற்றவன்; பெரும்பேறிருந்தும் பெருமை இல்லாதவன். இன்பத்தில் இச்சை வைக்காது மனத்தை அடக்கி ஆசையை அகற்றினவன். அரக்கனாய்ப் பிறந்தாலும் தேவரும் புகழும் பெரியோன்.

நல்லவன் என்ற சொல்லுக்கு உவமையாய் நின்றவன். கண்ணன் என்ற கிரகத்தால் கட்டுண்டவன். சிறுமையிலே விளையாட்டை விட்டவன். பித்தனைப் போல் பிரமத்தில் பதிந்தவன். பார்த்த விடமெல்லாம் பரமனைக்கண்ணுற்றவன். அனந்தனால் அணைக்கப்பட்டு உண்ணுவதும் உறங்குவதும், பேசுவதும், நடமாடுவதும் என்னவென்றெண்ணாது செய்து வந்தான். எம்பிரான் எங்கே என்றேங்குவான்; தோன்றிய தேவனைப் பாடிப் பரவசம் அடைவான்; களித்துக் கூத்தாடுவான். தன்னையும் அவனாகக் கருதியே தெய்வீக லீலை செய்வான்; அல்லது, வேற்றுமை விலகி, மெய் சிலிர்த்துக் கண்ணீர்பெருகி கடவுளென்ற அன்புருவில் ஆழ்ந்திருப்பான். பக்தரோடு பழகித் திருமாலின் திருவடியைத் தேடித் தானும் நிம்மதி அடைந்தவன்; துன்புற்ற மற்றவருக்கும் அமைதியை அளிப்பவன். இத்தகைய மகாபாகவதனும் மகாத்மாவுமான மைந்தனுக்கு ஹிரண்யகசிபு தீங்கிழைத்தான்.



அசுரகுருவான சுக்ராச்சாரியருக்கு இரண்டு புதல்வர்கள் இருந்தனர். அவர்களுக்கு சண்டன் என்றும் அமர்க்கன் என்றும் பெயர். அவர்களையே அரசன் பிரஹ்லாதனுக்கு ஆசிரியர்களாக நியமித்தான். மண்ணுலக வித்தைகளை வேந்தன் மகனுக்கும் மற்றப் பிள்ளைகளுக்கும் அவர்கள் புகட்டினர்; ஆனால் பிரஹ்லாதனுக்கு 'நண்பன்' என்றும் 'எதிரி' என்றும் வேற்றுமைநிரம்பிய நியாயமே உண்மையெனத் தோன்றவில்லை. ஒரு நாள் ஹிரண்யன் தன் மகனை வரவழைத்து மடி மீதிருக்கச் செய்து, "மைந்தனே! மாந்தருக்கு நலம் தருவது எது?" என்று வினவினான். அதற்குப் பிரஹ்லாதன் பதில் உரைத்தான்.

"கொற்றவனே கேட்டிடுவாய்
நலமென்பதொன்றே!
பற்றென்ற பாழ்கிணற்றில் வீழாது
தேறி
மற்றதெல்லாம் பொய்யென்று
திண்ணமாய் எண்ணி
குற்றமிலாக் கண்ணனிடம்
சரணடையும் பேறே."

எதிரி என்று கருதிய ஹரியைப் புகழும் இப் பேச்சைக் கேட்ட ஹிரண்யன் நகைத்தான். "மற்றோர் சூழ்ச்சியால் மயங்கியது சிறுவன் மதி" யென்றான். மாறு வேடம் பூண்ட மாதவன் ஆட்களான அந்தணர் இவனை அணுகாது காத்திடுமாறு கட்டளையிட்டான். ஆசிரியர்கள் பாலகனைக் கூப்பிட்டு ஆசை காட்டிப் பேசினார்கள். "அப்பனே! மற்றவருக்கில்லாத இம்மாறான புத்தி உனக்கெங்கிருந்து வந்தது? உண்மையை உரைத்திடுவாய். இந்தப் புத்தி பேதம் தானாகத் தோன்றியதா, வேறொருவர் வளர்த்ததா?" என்றனர்.

பிரஹ்லாதன் பதிலுரைத்தான்: "நான் என்றும் நீ என்றும் பிரிந்திருக்கும் புத்தியெல்லாம் பரமனின் மாயை. அவன் அருள் புரிந்தால் பேதமெல்லாம் பொய்யென்று தெரியும். இத்தெளிவை எனக்களித்தவன் அவனன்றி வேறில்லை. இரும்பை இழுக்கும் காந்தமென என் மனத்தை ஏனென்று தெரியாமல் கண்ணனே கவர்ந்துவிட்டான்" என்று மொழிந்தான்.

அரசனுக்குச் சேவகனான ஆசிரியனுக்குச் சினம் பொங்கியது. "கொண்டு வா கம்பை, இச் சிறுவனை அடித்துத்தான் திருத்த வேண்டும். திருபெற்ற குலமென்ற சந்தனக் காட்டிலே முள் புதர் போல் தோன்றிய அறிவிலி. அக்காட்டையே அழிக்க வந்த கோடாலிக்காம்பு" என்று பாலகனைப் பயமுறுத்தினான். அறம், பொருள், இன்பம் என்ற மூன்றை மட்டும் பிரஹ்லாதனுக்குப் பாடம் சொன்னான். சிறுவனைச் சீர்திருத்தம் செய்து விட்டோம் என்று எண்ணிக்கொண்டு இரும்பவும் அரசனிடம் அழைத்துச் சென்றான்.

தந்தையைக் கண்டதும் பிரஹ்லாதன் விழுந்து வணங்கினான். மைந்தனைத் தூக்கி மடிமேல் வைத்து மன்னவனும் மகிழ்ச்சியுற்றான். "அருமைப் புதல்வனே! நன்றாகப் படித்து நீ அறிந்து கொண்டதில் உத்தமமான தொன்றை எனக்கு எடுத்துரைப்பாய்" என்றான்.

இந்தக் கேள்விக்குப் பிரஹ்லாதன் கூறிய பதிலை பக்தியோகத்தின் சாரம் என்று பெரியோர் கருதுகின்றனர். இன்றைக்கும் பக்தி செய்வது எவ்விதம் என்ற கேள்விக்கு பிரஹ்லாதன் கூறிய

வழியையே பதிலாக அளிப்பது வழக்கமாயிருக்கிறது.

"விஷ்ணுவின் கதைகளைக் காதாரக்
கேட்க வேண்டும்
விஷ்ணுவின் செயல்களை வாயாரச்
சொல்ல வேண்டும்.
விஷ்ணுவை மனதிலே எப்பொழுதும்
எண்ண வேண்டும்.
விஷ்ணுவின் சேவையைச்
சாலவும் செய்ய வேண்டும்.
விஷ்ணுவின் பூசையில்
காலத்தைக் கழிக்க வேண்டும்.
விஷ்ணுவை வந்தனம்
செய்வதில் களிக்க வேண்டும்.
விஷ்ணுவின் தொண்டனாய்த்
தன்னையே கருத வேண்டும்.
விஷ்ணுவின் நட்பினை
நாடியே நிற்க வேண்டும்
தன்னையும் தனதையும் விஷ்ணுவுக்
கர்ப்பணம் செய்ய வேண்டும்.

தந்தையே! இவ்வொன்பது விதமாக பக்தி செய்வதுதான் நிகரில்லாத கல்வி.''

இச்சொற்களைக் கேட்ட ஹிரண்யனுக்குச் சினத்தால் உதடு துடித்தது. ஆசிரியனை நோக்கினான். "அறிவு கெட்ட அந்தணா! என்னைப் புறக்கணித்து என் எதிரியை ஏற்றி வைத்து விளங்கும் இதென்ன பைத்தியப் படிப்பு? தீச்செயலின் பயனைப் போல் தகாத நட்பு ஒரு நாள் தெரியாமல் போகாது'' என்றான்.

அந்தணன் பயந்தான். "அரசே! இப்படிப்பு நாங்கள் கற்பித்ததும் அல்ல, மற்றவர் புகட்டியதும் அல்ல; உங்கள் மகனிடம் தானாகத் தோன்றியிருக்கிறது'' என்று மொழிந்தான். ஹிரண்யன் பிரஹ்லாதன் பக்கம் திரும்பினான், "குரு முகத்தால் அல்லாது எங்கிருந்து இக் கொடும் சொற்களைக் கற்றாய்?'' என்று வினவினான். அதற்குப் பிரஹ்லாதன் பணிவுடன் பதில் உரைத்தான். இன்பங்களில் பற்றுண்டு உழலுவோருக்குக் கண்ணனிடம் தானாகவோ, பிறர் சொல்லியோ, பக்தி வராது. முற்றிலும் துறந்த தொண்டரடிப்பொடியை நாடுவோருக்குத்தான் அந்தப் பாக்கியம் கிடைக்கும்'' என்றனன்.

இச்சொற் கேட்டு ஹிரண்யன் தன் மகனை மடியினின்று உதறிக் கீழே தள்ளினான். "இக்கொடியவனை உடனே கொன்று விடுங்கள். தன் சிற்றப்பனை மாய்த்த மாதவனிடம் அடிமையென நடக்கிறான். எதிரியின் மைந்தனானாலும் நலம் செய்பவனே நல்மருந்து. தன் மகனானாலும் தீயவன் பெரும் பிணி'' என்று கதறினான்.

அரசனுடைய ஆணைக்கிணங்கி அரக்கர்கள் பிரஹ்லாதனைப் பல விதத்தில் கொல்ல முயன்றனர். இவை விஷ்ணு புராணத்தில் விரிவாக எடுத்துரைக்கப் பட்டுள்ளன. பாகவதத்தில் சுருக்கமாகச் சொல்லப் பட்டுள்ளன. முதலில் "வெட்டு, கொல்லு'' என்று, சூலத்தாலும் ஈட்டியாலும் பிரஹ்லாதனுடைய உடலைத் தாக்கினார்கள். இறைவனிடம் ஒன்றாய்க் கலந்து களித்திருக்கும் பாலகனிடம் அவ்வாயுதங்கள், பாவி செய்த



நற்செயலெனப் பயனற்றுப் போயின. பிறகு திக்குகளைக் காத்து வரும் யானைகளை மகன் மீது ஏவினான். யானைகளின் கொம்புகள் முறிந்து போயின. பாம்புகளைக் கொண்டு கடிக்கச் செய்தான். பாம்புகளின் பற்கள் சிதறிப் போயின. நஞ்சை ஊனுடன் கலந்தளித்தான். பரமனை உள்ளே கண்ட குமாரன் உண்ட நஞ்சும் ஊனுடன் ஜரித்து விட்டது. மலைமீதிருந்து தரை மீது தள்ளினான். தேடி வந்த மகனைப் பூதேவி முன் வந்து தாங்கினாள். மாயாவியைக் கொண்டு மிரட்டினான். மாயாவி மறைந்து போனான். ஓமம் செய்து பேயை

வரவழைத்தான். பிரஹ்லாதனை அணுகுவதற்கு அஞ்சின பேய் ஓமத்தை வளர்த்த அந்தணரை அறைந்து கொன்று விட்டது. கடல் நடுவே பாறைகளை வைத்து மூடினர். மூடியும் சிதறி விட்டது. இவ்விந்தையைக் கண்டு ஹிரண்யன் வியந்தான். எவ்விதத்திலும் சாகாமல் தப்பி வரும் மைந்தன் திறத்தின் காரணத்தைத் தெரியாது தவித்தான். தான் செய்த தீமைகளை மறவாது நிற்பானோ வென்று அஞ்சினான். பிரஹ்லாதனைப் பகைத்ததினால் தான் இறக்க வேண்டுமென்று எண்ணினான்.

இவ்வாறு முகம் குனிந்து, சீர் அழிந்து சிந்தையில் ஆழ்ந்திருக்கும் அரசனைச் சுக்ராச்சாரியின் இரு புதல்வரும் அண்டி, ''புருவம் அசைந்தால் புவி அசையும் பெருமை பொருந்திய வள்ளலே! உங்களுக்கு ஏது கவலைக்கிடம்? சிறுவர் செயலைப் பொருட்படுத்துவதில் பயன் இல்லை. எங்கள் தந்தை திரும்பும் வரையில் இவனைக் கட்டி வைப்பீர். பின்னர் பார்ப்போம்'' என்று கூறினர்.

பிரஹ்லாதன் திரும்பவும் குருமகன் வீட்டுக்குச் சென்று கல்வி பயிலலானான். முன் போலவே அறம், பொருள், இன்பம் இம்மூன்றை மட்டும் அவனுக்குப் புகட்டினார்கள். ஒரு நாள் ஆசிரியர் வேறு வேலையாய்ச் சென்றிருந்த பொழுது பிரஹ்லாதன் மற்றப் பிள்ளைகளைக் கூப்பிட்டு அவர்களுக்கு நல்லுபதேசம் செய்தான்.

''பிள்ளைகளே! மனிதனாய்ப் பிறப்பது அரிது. நூறாண்டுகள் நமக்கு வாய்த்த காலம். அதில் நேர் பாதி உறக்கத்தில் வீணாகி விடுகிறது. இருபது ஆண்டுகள் அறியாத சிசுவாகவும் விளையாடும் சின்னவனாகவும் கடந்து போகின்றன. இருபது ஆண்டுகள் தள்ளாத கிழத்தனத்தில் கழிகின்றன. எஞ்சிய சில காலத்தையும் சிற்றின்பத்திலே சிதற விடுவதா?

''மனைவியிடம் மயங்கி, மக்கள் மழலையில் மகிழ்ந்து, செல்வத்தையும் சுற்றத்தாரையும், பசுவையும் பணிவிடை செய்வோரையும் தனதென்று கருதிக் கட்டுண்டு களிப்பதும் வாழ்வோ? பயன் வேண்டுமென்று பல விதத்தில் பாடுபடுகிறான். பட்டுப்பூச்சி யென வெளியேற வழியின்றித் தன்னைச் சுற்றிச் சிறையைக் கட்டிக் கொண்டு வயிற்றையும் பெண்ணாசையையும் வளர்த்து வளர்த்து அனுபவித்தும் திருப்தியை அடைவதில்லை. இவ்வாறு சேமிப்பிலும் செலவிலும் வாழ்நாளெல்லாம் வீணாக்குபவன் ஆன்மாவை எவ்வாறு அறிவான்? ஆகவே, இன்பங்களில் இச்சை கொண்ட அரக்கரின் வழிகளை விட்டு அகலுவீர். நாராயணனைச் சரண் புகுவீர். அவனே ஆதி தேவன். அவனே அடைய வேண்டிய வீடு.

''மேலும், இறைவனைக் களிப்புறச் செய்வது எளிது. அவன் களிப்புற்றால் எதுதான் கிடைக்காது?''

அசுர குமாரர்களுக்குப் பிரஹ்லாதன் வார்த்தைகள் முற்றிலும் விளங்கவில்லை. ''நாம் அறிந்த ஆசிரியர்கள் சுக்ராச்சாரியின் புதல்வரான இவ்விருவரே. நீயோ, கருவிலிருக்கையில் நாரதர் உபதேசத்தைக் கேட்டதாகக் கூறுகிறாய். இதை விளக்க வேண்டும்'' என்று கேட்டனர்.

பிரஹ்லாதன் புன்சிரிப்புடன் அவர்களுக்குப் பதில் அளித்தான். ''என் தந்தை தவம் செய்யும் பொருட்டு மந்தர மலைக்குச் சென்ற சமயம், இதுவே வாய்த்த தருணமென்று தேவர்கள் எங்களை எதிர்த்தனர். அச்சமயம் இந்திரன் அரண்மனையில் புகுந்து என் தாயைத் தூக்கிச் சென்றான். போகும் வழியில் நாரதர் இந்திரனைச் சந்தித்துக் குற்றமற்ற மற்றவன் மனைவியை அபகரிப்பது அநீதி யென்று எச்சரித்தார். 'இவள் கருத்தரித்திருக்கிறாள். இரண்யனுக்கு மகன் பிறந்தால் எங்களை மேலும் துன்புறுத்துவான் என்று அஞ்சுகிறேன்' என்றான் இந்திரன்.

'கருவிலிருப்பவன் ஹரியின் பக்தன். நீ அவனைக் கொல்ல முடியாது' என்று நாரதர் கூறினார். இந்திரனும் என் தாயை விட்டு விட்டான். நாரதர் அவளைத் தம் ஆசிரமத்துக்கு அழைத்துச் சென்றார். என் தாயும் முனிவருக்குப் பணிவிடை செய்து வந்தாள். அவளுடைய துயரைத் துடைக்கவும் என்னுடைய நன்மைக்காகவும் நாரதர் என் தாய்க்கு ஞான யோகத்தையும் பக்தி யோகத்தையும் எடுத்துரைத்தார். அப்பொழுது கேட்டதை நான் மறக்கவில்லை. என் சொல்லைக் கேட்பீராகில் உங்களுக்கும் அந்த பக்தியும் மெய்யறிவும் வேரூன்றிப் பயன் தரும்.''

இதற்குமேல் பிரஹ்லாதன் அவர்களுக்கு அனேக தத்துவங்களை எடுத்து உபதேசம் செய்தான். இறுதியில் பக்தர்களின் தன்மையை விவரித்தான். இறைவனைப் பாடியும் பூஜை செய்தும் இவர்கள் அடையும் பரவசத்தை வர்ணித்தான். இச்சையற்றுத் திருமாலை வழிபடுமாறு வேண்டினான். மாசற்ற பக்தி ஒன்றே மாதவனுக்கு மனமுவந்தது; மற்றதெல்லாம் வீண் என்று வற்புறுத்தினான்.

பண்டிட் P.S. ராமசர்மாவின்

சக்தி சஞ்சீவி

குழந்தைகளின்

ஈரல், குலைக் கட்டிகளுக்கு.

எமது வைத்யரின் மாதாந்திர சுற்றுப் பிரயாண விவரம்

தங்கும் இடங்கள் வழக்கம்போல். மற்ற விபரங்களுக்கு எழுதவும்


ஊர்	தேதி	நேரம்	ஊர்	தேதி	நேரம்
தாராபுரம்	1	காலை 8-30 to 9-30	கோவில்பட்டி	12	காலை 8 to 9
பழனி	1	காலை 10-30 to 11-30	திருநெல்வேலி ஜங்.	12	மாலை 3 to 5
உடுமலைப்பேட்டை	1	மாலை 3 to 4	திருநெல்வேலிடவுன்	12	மாலை 5 to 6
பொள்ளாச்சி	1	மாலை 5 to 6	அம்பாசமுத்திரம்	13	காலை 8 to 9-30
பாலக்காடு	2	காலை 9 to 11	தென்காசி	13	மாலை 3 to 5
,,	2	மாலை 3 to 5	ராஜபாளையம்	14	காலை 9 to 10
கோயமுத்தூர்	3	காலை 9 to 11	ஸ்ரீவில்லிபுத்தூர்	14	காலை 10-30 to 11-30
,,	3	மாலை 2 to 4	பெரியகுளம்	14	மாலை 3 to 4-30
மேட்டுப்பாளையம்	3	மாலை 5 to 6	திண்டுக்கல்	15	காலை 8 to 9-30
சத்தியமங்கலம்	4	காலை 8 to 9	நாமக்கல்	15	மாலை 3 to 4-30
கோபி	4	காலை 10 to 11	ராசிபுரம்	15	மாலை 5-30 to 6-30
பவானி	4	மாலை 2 to 3	சேலம்	16	காலை 9 to 11
மேட்டூர் அணை	4	மாலை 4-30 to 5-30	,,	16	மாலை 3 to 5
ஈரோடு	5	காலை 9 to 11	தருமபுரி	17	காலை 9 to 10-30
திருப்பூர்	5	மாலை 4 to 5-30	கிருஷ்ணகிரி	17	மாலை 3-30 to 5
திருச்சி	6	காலை 11 to மாலை 6	மல்லேஸ்வரம் }	18	காலை 9 to 11
தஞ்சாவூர்	7	காலை 7 to 9	பெங்களூர் - 3 }		மாலை 3 to 5
கும்பகோணம்	7,17,27	காலை 10 to மாலை 5	திருப்பத்தூர் (N.A.)	18	காலை 8-30 to 10
சீர்காழி	8	காலை 7 to 8-30	குடியாத்தம் (N.A.)	18	மாலை 2 to 3-30
மாயூரம்	8	காலை 9 to 11	சித்தூர் (ஆந்திரா)	18	மாலை 5 to 6-30
நன்னிலம்	8	மாலை 2 to 3	வேலூர் (N.A.)	19	காலை 9 to 11
நாகப்பட்டினம்	8	மாலை 5 to 6-30	பெரிய காஞ்சிபுரம்	19	மாலை 3 to 5
திருவாரூர்	9	காலை 7-30 to 9-30	சென்னை	20	காலை 9 to 11
விஜயபுரம்	9	காலை 10 to 11	,,	20	மாலை 3 to 5
திருத்துறைப்பூண்டி	9	மாலை 2 to 3-30	செங்கற்பட்டு	21	காலை 9 to 10-30
பட்டுக்கோட்டை	9	மாலை 4-30 to 6-30	திண்டிவனம்	21	மாலை 2-30 to 4
புதுக்கோட்டை	10	காலை 8 to 10	விழுப்புரம்	21	மாலை 5 to 6
பொன்னமராவதி	10	காலை 11-30 to 12-30	திருவண்ணாமலை	22	காலை 8-30 to 10
தேவகோட்டை	10	மாலை 2-30 to 3-30	திருக்கோவிலூர்	22	காலை 11 to 12
காரைக்குடி	10	மாலை 4-30 to 6	கடலூர் (N.T.)	22	மாலை 4 to 5-30
பரமக்குடி	11	காலை 8 to 10	சிதம்பரம்	23	காலை 9 to 10-30
ராமனுதபுரம்	11	மாலை 3-30 to 4-30	விருத்தாசலம்	23	மாலை 3-30 to 5
சிவகங்கை	11	காலை 8-30 to 10	கள்ளக்குறிச்சி	24	காலை 8-30 to 9-30
மதுரை	11	காலை 11 to 12-30	ஆத்தூர்	24	காலை 11 to 12
,,	11	மாலை 3 to 6	துறையூர்	24	மாலை 3-30 to 5

ஸ்ரீ சக்தி விலாஸ வைத்யசாலை

H. O. கரூர்

கிளைகள் : 1. 94, டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்
2. கணேஷ் பில்டிங்ஸ், 2/2, லிங்க் ரோடு, பெங்களூர் - 3

குறிப்பு : குழந்தைகளுக்குக் கட்டி வராமல் தடுக்கவும், கக்குவான் இருமலைக் குணப்படுத்துவதற்கும், தொண்டை சதை வளர்ச்சியை (TONSILS) ஆபரேஷன் இல்லாமல் குணப்படுத்துவதற்கும் எங்களிடம் நல்ல மருந்துகள் கிடைக்கும்.



கனவு நிறைவேறியது

தம்பி சீனிவாசன்

இந்த வருஷம் பொங்கல் தினம் வெறும் பொங்கல் தினமாக நின்று விடாமல் கம்ப ரசிகர்களுக்கு மகிழ்ச்சியைப் பொங்கச் செய்யும் தினமாக அமைந்து விட்டது. கம்பன் பிறந்த தேரழுந்தூர், பொங்கல் தினத்தில் ஒரு புதுப் பொலிவு பெற்றிருந்தது. நாட்டரசன் கோட்டையில் கம்பன் சமாதியில் ஒரு பரபரப்பு காணப்பட்டது. இருபத்தோரு ஆண்டுகளாகக் கம்பன் புகழ்பாடிக் கன்னித் தமிழ் வளர்த்துவரும் கம்பன் கழகம் அமைந்துள்ள காரைக்குடி நகரமோ அன்று ஒரே ஆனந்த ஆரவாரத்துடன் காணப்பட்டது. பல ஆண்டு காலமாகத் தமிழ் அன்பர்கள், 'என்று நிறைவேறுமோ?' என்று கவலைப்பட்டு வந்த ஒரு பெருங் கனவு அன்று நிறைவேறியது. கம்பன் அருளிய 'இராமாவதாரம்' மற்றொரு புது அவதாரம் எடுத்தது!

கம்பன் தலைசிறந்த கவிஞன்; அவனது இராமாயணம் உலக மகா இலக்கியங்களுள் ஒன்று. இதில் யாருக்கும் அபிப்பிராயபேதம் இல்லை. உண்மையில் கம்பனை உயர்வாகப் பாராட்டுவதில்தான் தமிழறிஞர்கள் ஒருவரையொருவர் விஞ்ச விரும்புகிறார்கள்! கம்பன் வாழ்ந்தது எக்காலம்? 'எட்டாம் நூற்றாண்டு' என்கிறார் ஒருவர். 'இல்லை. பன்னிரண்டாம் நூற்றாண்டு!' என்பார் ஒருவர். 'இல்லவே இல்லை. பத்தாம் நூற்றாண்டுதான்' என்று இருவரையும் மறுப்பார் வேறொருவர். கம்பன் எப்போது பிறந்தவனாயிருந்தாலும் சரி, நமக்குப் பரவாயில்லை. அதைப் பற்றித் தமிழ் அறிஞர்கள் என்றாவது ஒரு முடிவுக்கு வரட்டும்.

ஆனால், நமக்குக் கம்பன் அமுதை எடுத்து ஊட்டி, அதன் சுவை உணரச் செய்து விட்டனர் கம்பன் கழகத்தினர். செல்வகேசவராய முதலியார், வ. வே. சு. ஐயர் போன்றோர் விதைத்த விதை கம்பன் இயக்கமாக முளைத்தது. மிகவும் பக்குவமாக இதை வளர்த்து விட்ட ரசிகமணி டி. கே. சி., ரா. பி. சேதுப்பிள்ளை, பி. ஸ்ரீ. ஆச்சாரியார் போன்றவர்கள் பத்திரிகைகளிலும், பிரசங்கங்களிலும் கம்பன் அமுதின் பகுதிகளை எடுத்துச் சொல்லி, கம்பனை முழுதும் படிக்க வேண்டும் என்ற ஆராப் பசியைப் பொதுமக்களுக்குத் தூண்டி விட்டிருக்கிறார்கள். எத்தனைவிதமான கம்பன் பதிப்பு வெளி வந்தாலும் போதவில்லை தமிழ் மக்களுக்கு. முழுப் பதிப்பு, சுருக்கல் பதிப்பு, உரைப் பதிப்பு, இலக்கிய விளக்கப் பதிப்பு ஆகிய பல வகைப் பதிப்புக்கள் இதுவரையில் வெளி வந்துள்ளன. இத்தனை பதிப்புக்களுக்கும் ஆதாரமான மூல பாடத்தை அனைவரும் எளிதில் படித்துப் புரிந்துகொள்ள உதவும் வகையில் ஒரு பதிப்பு தேவை என்ற நீண்ட நாள் அவாவைப் பூர்த்தி செய்தது, பொங்கல் திருநாளில் வெளியான இராமாவதார ஆராய்ச்சிப் பதிப்பு.

'தமிழ் இலக்கியச் செல்வம்' என்ற வரிசையில் சென்ற மூன்றாண்டுகளில் பத்தொன்பது நூல்களை வெளியிட்ட

சென்னை மர்ரே கம்பெனி அதிபர் திரு எஸ். ராஜம் இப்பதிப்பை வெளியிட்டிருக்கிறார். இப்போது பால, அயோத்தியா, ஆரணிய, கிஷ்கிந்தா, சுந்தர காண்டங்கள் ஐந்து தொகுதிகளாக வெளி வந்துள்ளன. யுத்த காண்டம் நான்கு தொகுதிகளாகவும் 'கம்பன் கருவூலம்' என்ற ஒரு தொகுதியும் இதைத் தொடர்ந்து வெளி வரும். இந்த வரிசையின் பிற பதிப்புகளைப் போலவே கம்பராமாயணத்தையும் சொற்களைத் தனித்தனியே பிரித்து, சந்தி பிரித்து, நிறுத்தல் குறியீடுகள் இட்டு, பாடல்களுக்கு ஏற்ற தலைப்புக்களைக் கொடுத்து வெளியிட்டிருக்கிறார்கள். தேரழுந்தூர் கம்பன் கோயிலிலும் நாட்டரசன் கோட்டை கம்பன் சமாதியிலும் ஏக காலத்தில் இந்நூல் பொங்கலன்று காலையில் சமர்ப்பிக்கப்பட்டது. வெளியீட்டு விழா காரைக்குடி கம்பன் கழகத்தில் நடைபெற்றது.

திரு அ. கி. பால் நாடார் விழாவைத் தொடங்கி வைத்ததும், பேராசிரியர் திரு அ. சீனிவாசராகவன் தலைமை வகித்ததும், புதுப் பதிப்பைத் திரு நயினார் முகம்மது வெளியிட்டு வைத்ததும் கம்பராமாயணம் என்ற இலக்கிய நூல் எல்லாச் சமயங்களுக்கும் பொது என்பதை உணர்த்தின!

கம்பன் கழகச் செயலாளர் திரு சா. கணேசன் தாம் ஆண்டுதோறும் நிகழ்த்தும் கம்பன் விழாவைப் போலவே இந்த வெளியீட்டு விழாவை மிகுந்த சிறப்புடன் நடத்தி வைத்தார்.


திரு கு. அருணாசலக் கவுண்டர், திரு எஸ். டி. ராமராசன், திரு என். கே. பட்சிராசன், திரு வி. மு. சுப்பிரமணிய ஐயர், திரு அமிர்தலிங்கம், திரு எஸ். ராமகிருஷ்ணன், தமிழ்க் கடல் ராய. சொக்கலிங்கம் ஆகியோர் பாராட்டுரை வழங்கினர். மலிவான விலையில் பிழை மலிவு இல்லாமல், ஆராய்ச்சிப் பதிப்பு வெளிவந்துள்ளதைப் பாராட்டினர். ஆழ்ந்த அறிவும், அனுபவமும், விடா முயற்சியும், அடக்கமும், பொறுமையும் நிரம்பிய பதிப்பாசிரியக் குழுவின் பணியைப் போற்றினர். கம்பனின் மேன்மை ஒளிவிடத் துணைபுரிந்த சடையப்ப வள்ளலைப் போல், கம்பன் காரியம் சிறந்த முறையில் வெளிவரத் துணை புரிந்த திரு ராஜத்தைப் போற்றினர்.

இதுவரை கம்பராமாயணப் பதிப்புகள் வெளியிட்ட பேரறிஞர்களுக் கெல்லாம் அஞ்சலி செய்தனர்.

என்றுவரும் நற்பதிப்பென்று எண்ணி
இருந்தோர் எல்லாம்
நன்று மகிழ்வடைய நண்ணிற்றே—
துன்றிய நூல்
கற்போர் அகம்மலரக் கம்பன் பெருநூலின்
நற்பதிப்பு வந்துலவும் நாள்!

என்ற திரு வி. மு. சுப்பிரமணிய ஐயரின் வாழ்த்துப் பாடல் கூடியிருந்தோரின் குரலாக ஒலித்தது.

இப்படியும் நடக்கலாம்!



Telegrams : "KALIBRAND" Telephone : 108

"காளி - பிராண்ட்"

எவர்சில்வர் பாத்திரங்கள்

o✻o

தயாரிப்பவர்கள் :

காளி - பிராண்ட்

கும்பேஸ்வரர் சன்னதி, கும்பகோணம்

எல்லா இடங்களிலும் கிடைக்கும்

சாஸ்திர முறையில் விக்ரகங்கள் செய்வதில் புகழ் பெற்றவர்கள்

எந்தவிதமான விக்ரகங்களும் எந்த உலோகத்திலும் ஆர்டருக்குச் செய்து தரப்படும்

ஏஜெண்ட்ஸ் : "ருக்மணி குக்கர்"

இந்தியன் பாங்க் லிமிடெட்

(ஸ்தாபிதம் : 1907)

இந்தியன் பாங்க் பில்டிங்ஸ், வடக்கு பீச் ரோடு, சென்னை-1

சென்னையில் 23 கிளைக் காரியாலயங்கள் உள்ளன

தென்னிந்தியா முழுவதிலும் கிளை ஆபீஸ்களும், பம்பாய், பூனா, புது டெல்லி கல்கத்தா, கொழும்பு, பினாங்கு, கோலாலம்பூர், மலாக்கா அன்டு சிங்கப்பூர் முதலிய இடங்களிலும் கிளைகள் உள்ளன

அதிகாரம் பெற்ற மூலதனம்	...	ரூ.	1,00,00,000
வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்	...	ரூ.	72,00,000
செலுத்தப்பட்ட மூலதனம்	...	ரூ.	66,19,625
ரிஸர்வ் & இதர நிதிகள் (ஷேர் பிரீமியம் உள்பட)	...	ரூ.	91,61,883
டிபாசிட்டுகள் (30-6-1958ல் உள்ளபடி)	...	ரூ.	38,00,96,415
அமுலிலுள்ள மொத்த நிதிகள்	...	ரூ.	46,05,11,811

வெளிநாட்டு பரிவர்த்தனையுள்பட சகலவித பாங்கிங் அலுவல்களும் ஏற்று நடத்தப்படும்

London Agents : WESTMINSTER BANK LIMITED
New Yark Agents : FIRST NATIONAL CITY BANK OF NEW YARK

D. P. பார்த்தசாரதி, காரியதரிசி



தங்கப் பதுமை

சிவாஜி கணேசனும் பத்மினியும் நடிக்கும் படம் என்றால் நல்ல நடிப்பை எதிர்பார்த்துப் பலரும் போய்ப் பார்க்க விரும்புவார்கள். அதுவும் ஜுபிடர் பிக்சர்ஸாரின் நீண்டகாலத் தயாரிப்பான இந்தப் படத்துக்கு நல்ல வரவேற்பு இருந்தால் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

ஆனால் ஒரு படத்தின் வெற்றிக்குச் சிறந்த நடிகர்களும் நல்ல நடிப்பும் மாத்திரம் இருந்தால் போதாது. கருத்துள்ள கதையும் வேண்டும். 'பொன்மலர் நாற்றமுடைத்து' என்பதுபோல், நல்ல நடிகர்களின் நடிப்பு நல்ல படத்தில் சேர்ந்தால்தான் நன்கு பரிமளிக்கும். திரைக்கதையில் வரும் பாத்திரங்கள் உயிரும் உணர்ச்சியும் கொண்ட பாத்திரங்களாயிருந்தால்தான் நடிகர்கள் அவைகளை மேற்கொண்டு பாவத்தோடு நடிக்க முடியும்.

பழைய பாத்திரங்களைப் புதுப்பிப்பது, பழைய கட்டடத்தைப் புதுப்பிப்பது, பழைய கதையைப் புதுப்பிப்பது என்ற பழைய பழக்கம் நம் நாட்டில் வெகு காலமாக இருந்து வருகிறது.

அந்தப் பண்டைக்கால முறையை ஒட்டி, 'தங்கப் பதுமை'யும் ஒரு புதுப்பிக்கப்பட்ட பழைய கதைதான். கோவலன் கதையை மனத்தில் நினைத்துக்கொண்டு, புதிதாக ஒரு கதையை ஆக்கியிருக்கிறார்கள். (கோட்டு தைப்பதாக எண்ணிக்கொண்டு, ஷர்ட் தைக்க ஆரம்பித்து, ஜிப்பாவாகத் தைத்து முடித்திருக்கிறார்கள் என்று சொல்லலாம்!)

கற்பு, கண்ணீர், பதி அன்பு, பரத்தையர் நேசம், பதியைப் பிரிந்த பத்தினி, பத்தினியைப் பிரிந்த பதிதன்—படம் பார்ப்பவர்கள் இவற்றுள் எதைப் பார்த்துக் கண்ணீர் விடுவார்கள் என்று சிந்தித்துச் சிரமப்படாமல் எல்லாவற்றையுமே சேர்த்துப் படமாக்கி விட்டார்கள். ஆகையினால் படத்தைப் பார்த்து உணர்ச்சி வசப்பட்டுக் கண் கலங்குவதற்குப் பதிலாகப் பல இடங்களில் மனம் குமுறிக் கதறி அழத் தோன்றுகிறது.

படம் பார்ப்பவர்கள் கண்ணீர்விட்டுக் கலங்கினால் மட்டும் போதாது; திரைக் கதையின் சுவாரஸ்யமான கட்டங்களை நினைவுகூர்ந்து ரஸிக்கவும் வேண்டும்; படம் பார்த்து முடிந்ததும், இன்னொரு முறை அவசியம் பார்க்க வேண்டும் என்னும் ஆவல் அவர்கள் உள்ளங்களில் நிறைந்திருக்க வேண்டும்.

"தங்கப் பதுமை" ஏற்கனவே வெளி வந்துவிட்ட படமோ என்று எனக்கு ஒரு சந்தேகம் தோன்றியது. காரணம், அது பல வருஷங்களாகத் தயாரிப்பில் இருந்ததுதான். நீண்ட காலமாகத் தயாரிக்கிறார்களே, மிகவும் பிரமாதமான படமாயிருக்கும் என்று எதிர்பார்த்தேன். ஆனால் அந்தப் பொல்லாத படம் என்னை ஏமாற்றி விட்டது. ஆரம்பத்தில் நல்ல படம்போல் பாய்ச்சல் காட்டி, "இடைவேளை"க்குள்ளாகவே என்னை முற்றிலும் மோசம் செய்துவிட்டது. அப்பொழுதே எழுந்து வந்துவிடலாம் என்று தோன்றினாலும், பத்மினியின் நடிப்பும், சிவாஜி கணேசனின் நடிப்பும் என்னைத் தடுத்து நிறுத்தின. அதுவும் பத்மினி ஆடிய வீர பத்தினியின் ஆவேசக் கூத்து என் நெஞ்சை விட்டு அகலவில்லை. விறு விறுப்பான அந்த நடனம் படத்தின் ஆரம்பத்தில் அமைந்திருப்பது படத்துக்குக் களை யூட்டுவதாயிருக்கிறது.

தாந்தன்

திரைக் கதையைக் கொஞ்சம் தெரிந்து கொள்ளுவது நல்லதில்லையா?

ஏழை வைத்தியரின் மகனாகப் பிறந்த மணிவண்ணன், தந்தையின் கட்டுப்பாடு களின் காரணமாக உலகம் அறியாத குழந்தையாகவே வளர்கிறான்; வணிகர் மகள் செல்வியின் கரம் பற்றின பாக்கியம் காரணமாகச் செல்வனாகிறான்; ஆடலழகியின் அழகில் மயங்கி இன்பக் கவிஞனாகிறான்; பிறகு, அரசிளங் குமரியின் ஆதிக்க ஆசையினால் வேதாந்தியாகிறான்; கடைசியாக, ஆசைக் குழந்தையின் அரவணைப்பினால் மனிதனாக மாறிவிடுகிறான். நல்லவேளை! இதற்குமேல் வேறு எதுவாகவும் மாறவில்லை! (18,449 அடிகள் அதற்குள் முடிந்து விடுகின்றன!)

வைத்தியர் மகன் மணிவண்ணனாக வரும் சிவாஜி கணேசனின் நடிப்பு ஆரம்பம் முதல் கடைசி வரையில் விறுவிறுப்புடன் நன்றாயிருக்கிறது. உலகம் அறியாத வைத்தியர் மகனாக வந்தபோது அவர் நடிப்பிலும், பேச்சிலும், நடை, உடை பாவனையிலும் அந்த உலகமறியாத தன்மையை நாம் முற்றிலும் காண முடிகிறது. செல்வியைக் கண்டதும் மணிவண்ணனின் முகம் போன போக்கு மனசில் பதிகிறது. செல்வியும் மணிவண்ணனும் ஒருவர் உள்ளத்தை ஒருவர் புரிந்துகொள்ளும் காட்சி மிகவும் சுருக்கமாகவும், சுவாரஸ்யமாகவும் நதிக்கரை ஸ்நான கட்டத்தில் நிகழுகிறது. கபால புரத்து இளவரசி ராஜவதனாவினால் கொலைக்குற்றம் சுமத்தப்பட்டு, கண்களையும் இழந்து விடுகிறான், மணிவண்ணன். அந்தச் சந்தர்ப்பத்தில் சிவாஜி கணேசனின் நடிப்பு மெய்சிலிர்க்கச் செய்கிறது.

ராஜ சபையில், நடந்ததைக் கூறும்படி வலியுறுத்திய செல்விக்குப் பதில் கூறுகிறான் மணிவண்ணன். "மனிதன் ஆரம்பமாவது பெண்ணுக்குள்ளே - அவன் ஆடி அடங்குவது மண்ணுக்குள்ளே..." என்ற பாட்டின் மூலம் அவளுக்கு மறுமொழியளிக்கிறான். சிவாஜி கணேசனுக்காக, சி. எஸ். ஜயராமன் மிக நன்றாகக் குரல் கொடுத்திருக்கிறார்; மிகவும் பாவத்தோடு அமைந்திருக்கும் அந்தப் பாட்டை இயற்றியவர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்.

செல்வியாக வரும் பத்மினியின் நடிப்பு படத்துக்கே பிரதானமாக விளங்குகிறது. மணிவண்ணனை மயக்கிய மாயமோகினியின் காதல் வார்த்தைகளை, கள்ளங்கபடு அறியாத மணிவண்ணன் செல்வியிடமே கூறுகிறான். அதைக்கேட்டு உள்ளங் குமுறிய செல்வி கண்ணீர் விட்டு அழுகிறாள். அப்பொழுது மணிவண்ணன் விஷயம் புரியாமல் சிரிக்கிறான். அந்தக் கட்டம் உடனே நினைவில் பதிகிறது.

பத்மினியின் நடிப்பு கணவனுக்காகப் பாண்டிய மன்னன் சபையில் நீதி கோரப் போன கண்ணகியை நினைவூட்டுகிறது. கண்ணகி சிலைக்கு எதிரில் கதறி அழுது சிலையின் கண்களில் பதிந்திருக்கும் ரத்தினங்களைப் பறித்துக் கொண்டு திரும்பும் போது படம் பார்ப்பவருடைய உள்ளங்களையும் பறித்துக் கொண்டு விடுகிறார்.

கபாலபுரத்து ராஜசபையில் பத்மினி, சிவாஜி கணேசன் இருவரும் நிகழ்த்தும் சொற்பொழிவு கொஞ்சம் அதிகம் என்பதைக் கூறாமல் இருப்பதற்கில்லை. குற்ற விசாரணைக்காக ராஜசபைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கும் குற்றவாளிக்கும் அவன் மனைவிக்கும் அத்தனை நேரம், பாடி, ஆடி, பேசி முடிக்க அவகாசம் அளித்திருப்பது மிகவும் விந்தையாயிருக்கிறது!

இந்தப் படத்தில் வில்லன் வருகிறான்; வில்லனால் ஏவப்பட்ட வில்லி வருகிறாள்; வில்லியையும் வில்லனையும் ஆட்டிவைக்கும் ஒரு வல்லியும் வருகிறாள்.

வில்லன் யார்? வழக்கமான வில்லன் எம். என். நம்பியார்தான். வழக்கம்போல் கனகச்சிதமாக நடிக்கிறார்.

வில்லி யார்? கபால்புரத்து ராஜநர்த்தகி மாயமோகினிதான். டி. ஆர். ராஜகுமாரி அந்தப் பாத்திரத்தை ஏற்றிருக்கிறார். தன் அழகைப் பற்றி அகம்பாவம்கொண்டு அழிந்து போகும் ராஜநர்த்தகியின் பாகம் அவருக்கு நன்றாய்ப் பொருந்துகிறது.

வில்லனையும் வில்லியையும் ஆட்டிவைக்கும் வல்லி யார்? நமக்குப் பழகிப்போன வில்லி எம். என். ராஜம்தான்; கபால புரத்து இளவரசியாக வருகிறார்.

காலஞ்சென்ற என். எஸ். கிருஷ்ணன் சிறிது நேரமே வந்து மறைந்தாலும், நம் மனத்திலிருந்து அவர் மறையவில்லை.

வி. ஆர். ராஜகோபால் படத்தின் ஹாஸ்யப் பகுதிக்குப் பெரிதும் உதவியாயிருக்கிறார். டி. பி. முத்துலக்ஷ்மி அவருக்கு உதவியாயிருக்கிறார்.

"முகத்தில் முகம் பார்க்கலாம்" என்ற பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தின் பாட்டு நன்றாயிருக்கிறது. தங்கப் பதுமையின் முதற்காட்சியாக வரும் வீரபத்தினியின் ஆவேசக் கூத்து நடனத்தையும், கடைசிக் காட்சியான நீதி மன்றத்து விசாரணையையும் பார்த்தால் போதும் — மனம் உருகி ரஸித்து மகிழலாம்.



சோக்ரதர் சம்வாதங்கள்

க. சந்தானம்

3. நீதியும் அநீதியும்

[சம்வாதத்தில் பங்கெடுத்துக் கொண்டவர்கள் : சோக்ரதர், சைமானிதீசன், பொலிமார்க்கேசன், தாசிமகேசன் முதலோர்]

சோக் : நீதி எவருக்கு என்ன செய்கிறது?

பொலி : நண்பருக்கு நன்மையும் விரோதிக்குத் தீமையும் செய்கிறது.

சோக் : ஆதலால், நண்பருக்கு நன்மை செய்வதும், எதிரிக்குத் தீங்கு செய்வதுமே உனது எண்ணத்தில் நீதியா?

பொலி : ஆம்.

சோக் : மக்கள் நோயால் வருந்துங்கால், நண்பர்களுக்கு நோய் தீர்த்து நன்மை செய்யக் கூடியவர் யார்?

பொலி : வைத்தியர்!

சோக் : கடலில் யாத்திரை செய்யும் பொழுது, அவர்களை அபாயத்திலிருந்து காப்பது யார்?

பொலி ; கப்பல் தலைவன்.

சோக் : அப்படியானால், எந்த விவகாரங்களில் நீதிமான் தனது நண்பர்களுக்கு நன்மையும் எதிரிகளுக்குத் தீமையும் செய்யக் கூடும்?

பொலி : யுத்தங்களிலும், அவற்றுக்குச் சாதகமான கூட்டும் உறவுகளிலு மென்று நினைக்கிறேன்.

சோக் : மிகவும் நல்லது. பொலிமார்க்கேசா, நோயில்லாத காலத்தில் வைத்தியர் வேண்டாமல்லவா?

பொலி : உண்மை.

சோக் : கடலில் போகாத பொழுது, கப்பல் தலைவனால் ஆக வேண்டியது ஒன்றுமில்லை யல்லவா?

பொலி : ஆம்.

சோக் : ஆனால், நீதியால் யுத்தமில்லாத காலத்திலும் பிரயோசன முண்டல்லவா?

பொலி : உண்டு.

சோக் : விவசாயத்தாலும் அப்பொழுது பயனுண்டா?

பொலி : நிச்சயமுண்டு.

சோக் : செருப்புத் தைப்பதும் அப்பொழுது பலன் கொடுக்குமல்லவா?

பொலி : அவசியம்.

சோக் : நீதியின் போக்கு என்ன? சமாதான காலத்தில் அதனால் என்ன பயன்?

பொலி : விவகாரங்களில் உபயோகப் படும்.

சோக் : கூட்டு வியாபாரம் போன்ற விவகாரங்களிலா, வேறு வழிகளிலா?

பொலி : கூட்டு வியாபாரங்களிலேதான்.

சோக் : நீ வீடு கட்டினால், கொத்தனைத் தேடுவாயா, நீதி புருஷனை நாடுவாயா?

பொலி : கொத்தனைத் தேடுவேன்.

சோக் : வீணை வாசிக்க விரும்பினால், வீணை வித்துவானை அணுகுவாயா, நீதிமானையா?

பொலி : பண விவகாரங்களில் மட்டும் நீதிமானை நாடுவேன்.

சோக் : நீ ஒரு குதிரை விற்பதானால், குதிரை வியாபாரியை அல்லவா உதவி கேட்பாய்?

பொலி : அதற்கென்ன சந்தேகம்?

சோக் : ஒரு கப்பலை வாங்கவோ, விற்கவோ விரும்பினால், கப்பல் கட்டுவோரின் உதவியல்லவா வேண்டும்?

பொலி : அதுவே புத்திசாலித்தனம்.

சோக் : அப்படியானால், எவ்விதமான பண விவகாரங்களில் நீதிமான் மற்றவர்களைக் காட்டிலும் அதிகமாக உதவி புரிவான்?

பொலி : என் பணத்தைப் பத்திரமாகப் பாதுகாப்பதில்!

சோக் : அதாவது பணத்தை உபயோகிக்கும் பொழுது அவன் பிரயோசனமில்லை. அது சும்மா கிடக்கும்பொழுதே நீதிமான் தேவைப்படுகிறான் அல்லவா?

பொலி : அப்படித்தான் புலப்படுகிறது.

சோக் : எந்தக் குறிப்பிட்ட காரியத்துக்கும் உனது நீதி பயன்படாது என்று வெளிப்படுகிறது. சரி! வேறொன்று விசாரிப்போம். குத்துச் சண்டையிலோ, வாட்போரிலோ எதிரியை எதிர்க்கவல்லவனே, அவன் அடிகளையும் தடுக்கத் திறமையுள்ளவன் அல்லவா?

பொலி : நிச்சயம்.

சோக் : வியாதியைப் போக்கச் சக்தியுள்ளவனே, பிறர் அறியாமல் அவர்களுக்கு அதை அதிகப்படுத்தவும் ஆற்றல் பெற்றிருப்பான் அல்லவா?

பொலி : ஆம்.

சோக் : நல்ல போர்வீரன் எதிரிகளை ஏமாற்றி அவர்களுடைய இரகசியங்களைத் திருடுவதிலும் சாமர்த்தியமுள்ளவனாக இருப்பானா?

பொலி : அதில் சந்தேகமில்லை.

சோக் : அப்படியானால், நீதிமான் பணத்தைப் பாதுகாப்பதில் கெட்டிக்கார

ளுக இருப்பின், அதைத் திருடுவதிலும் தேர்ந்திருக்க மாட்டானு?

பொலி: வாதத்தின் போக்கு அப்படித் தான் தோன்றுகிறது.

சோக்: நீதிமான் ஓர் சாதுர்யத் திருடன் போலும்! ஹோமர் எழுதிய பெருங்காவிய மான இலியத்திலும் உதிசன்மாமா, ஆதலி கேசன் திருட்டிலும், பிறரை ஏமாற்று வதிலும் நிகரற்றவன் என்று போற்றப் படுகிறான். ஆதலால், ஹோமர், சைமானி திசன், நீ எல்லோரும் நீதியை நண்பருக்கு உதவி செய்து எதிரிகளைத் துன்புறுத்தும் ஓர் சூது என்று எண்ணுகிறீர்கள். நான் கூறுவது தவறு?

பொலி: சத்தியத்தின்பேரில் ஆணை. இல்லவே இல்லை. நான் என்ன சொன் னேன் என்று எனக்கே இப்பொழுது விளங்கவில்லை.

இந்த சம்வாதம் நடந்து கொண்டிருக் கையில் தரசிமகேசன் இதில் புக முயற்சி செய்தான். ஆனல் மற்றவர்கள் அனு மதிக்கவில்லை. இப்பொழுது வாத விவா தத்தில் சிறிது ஓய்வு ஏற்பட்டதைக் கண்டு அவனல் பொறுக்க முடியவில்லை. எல்லோரையும் பார்த்து உரத்த குரலில் கூச்சலிட்டான்.

தரசி: உங்களுக்கெல்லாம் பைத்தியம் பிடித்து விட்டதா? சோக்ரதரே! நீதியின் தன்மையை நன்குணர வேண்டுமானல், மற்றவர் கூறுவதில் குற்றம் கண்டு பிடித் தால் மட்டும் போதாது. அதற்கு நீங்களும் உங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவிக்க வேண்டும். நீதியைக் கடமையென்றும், லாபமென்றும் கூறுவதை நான் ஏற்க மாட்டேன். தெளிவாகவும், ஐயமறவும் அதனை விளக்க வேண்டும்.

சோக்: எனக்கு அச்சமாகவிருக்கிறது. என்ன சொல்வது என்று புரியவில்லை. தரசிமகேசா! நான் ஏதாவது தவறுகக் கூறியிருக்கலாம். நாம் ஓர் பவுனைத் தேடிக் கொண்டிருந்தால் ஒருவரை யொருவர் ஏமாற்றி அதனை இழந்துவிட விரும்ப மாட்டோம் அல்லவா? செல்வத்தைக் காட்டிலும் உத்தமமான நீதியைத் தேடிக் கொண்டிருக்கிறோம். அது கிடைத்தால் விட்டு விடுவோமா? ஆனல் கிடைக்க வில்லை. என்ன செய்வது? உன்னைப் போன்ற சர்வக்ஞன் எங்கள்மீது கோபிக்க லாமா? எங்கள் நிலையைக் கண்டு அனு தாபம் கொள்ள வேண்டாமா?

தரசி: உமது குணம் எனக்குத் தெரி யுமே, சோக்ரதரே! இதுவே பிறரைப் பரிகசிக்கும் சூழ்ச்சி. நான் முன்னமே கூறவில்லையா? நீர் கேளில் எதற்கும் பதில் சொல்ல மாட்டீர். எப்படியாவது மற்ற வர் தலையில் பாரத்தைப் போட்டு விடுவீர்.

சோக்: நீ தத்துவ ஞானி, தரசிமகேசா! ஒருவனை, எந்த எண்கள் சேர்ந்து பன்னி ரண்டாகிறது என்று கேட்டு விட்டு, இரண்டு ஆறு, மூன்று நான்கு, நான்கு மூன்று என்று பதில் சொல்லக் கூடாது என்று உத்தரவு போட்டால், என்ன செய்ய முடியும்?

தரசி: இரண்டும் ஒரேமாதிரி போலும்?

சோக்: ஏன் இருக்கலாகாது? உண்மை எப்படியிருந்தாலும், உன்னல் தடுக்கப் பட்ட பதில் சரியானது என்று தோன்ற லாகாதா?

தரசி: நான் தடுத்த பதில்களில் ஒன்றை நீங்கள் ஏற்கப் போகிறீர்களா?

சோக்: நன்கு ஆலோசித்தபின் பொருத் தமென்று தோன்றினல், உனக்குப் பிடிக்காவிட்டாலும், அதையே கூற வேண்டி வரும்.

தரசி: அவைகளைத் தவிர்த்து நானே நீதியின் தன்மையை விளக்கினல், என்ன செய்வீர்?

சோக்: என்ன செய்ய வேண்டும்? நான் அறிவில்லாதவன். ஞானிகளிடம் கற்றுக் கொள்ள வேண்டியது முறையே.

தரசி: புத்திமதிக்கு வெகுமதி கொடுக்க மாட்டீர் போலும்?

சோக்: என்னிடத்தில் பணமிருந்தால் கூசாமல் கொடுப்பேன்.

தரசி: அது போகட்டும். நீங்கள் எப் போதும் பிறரைப் பேசவைத்து, அவர்கள் சொல்லுவதையெல்லாம் பிதற்றல் என்று நிரூபிப்பதை விட்டு விட்டு, நீங்களே ஒன்றும் உபதேசிக்க மாட்டீர்களா?

சோக்: என்ன செய்வது, நண்பனே! எனக்கு ஒன்றும் தெரியாது. அப்படித் தெரியாதென்றும் பறைசாற்றி வருகி றேன். ஏதோ அரைகுறையான எண் ணங்கள் இருப்பினும், உயர் பதவியில் இருப்போர் அவற்றைக் கூறலாகாது என்று தடுக்கிறர்கள். ஆதலால் தனக் குத் தெரியும் என்று உன்னைப் போன்ற உறுதியுள்ளவர்களிடம் கேட்டு அறிந்து கொள்வதே சரியான முறையல்லவா? எனக்காகவும், இங்கு இருக்கும் இதர நண்பர்களுக்காகவும், நீதியின் சொரு பத்தை விளக்கக் கடவாய்.

தரசி: அப்படியானல் கேளுங்கள். வல்லாரின் நலமே நீதி. இதை ஒப்புக் கொள்ள மாட்டீர்களா? ஏன், ஒப்புக் கொள்வீர்கள்.

சோக்: முதலில் நீ கூறியதை நன்கு புரிந்துகொள்ள வேண்டாமா? பலசாலி களின் நலமே நீதி என்கிறாய். அதன் பொருள் என்ன? குஸ்தி செய்யும் மல்லன் தனது உடல் வலிமைக்காக அதிக மாமிச உணவு விரும்புகிறான். அம்மாதிரிக் கொழுத்த உடல் பெருத நமக்கும் அதுவே நீதியாகுமா?

தரசி: உங்களுக்கு எவ்வித நேர்மையு மில்லை, சோக்ரதரே! எனது வாதத்தை எவ்வளவு கோணலாகத் திரிக்க முடி யுமோ, அப்படிச் செய்திருக்கிறீர்.

சோக்: இல்லை, நண்பனே! உனது கருத்தைத் தெளிவாகக் கூறுவாய்.

தரசி: சில நகரங்களில் ஏதேச்சாதி காரிகளும், மற்றவைகளில் ஜனநாயகமும், வேறு நகரங்களில் பிரபுவர்க்கங்களும் அதிகாரம் வகிப்பது உங்களுக்குத் தெரியாதா?

சோக்: நன்றாகத் தெரியும்.



காஞ்சி காமகோடி பீடம் ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் சென்ற டிசம்பர் 17 அன்று சென்னைக்கடுத்த ஆதம்பாக்கத்திலிருந்து மீனம்பாக்கம் செல்லும் மார்க்கத்தில் தங்கநல்லூர் வீடு கட்டும் கூட்டுறவு சங்கத்துக்கு விஜயம் செய்தபோது எடுத்த படம். சங்க நிர்வாகிகள் சுவாமிகளைப் பூர்ண கும்ப மரியாதைகளுடன் வரவேற்றனர். இந்தப் பகுதிக்குத் திருநகரி என்று பெயரிடும்படி அச்சமயம் ஆலோசனை கூறி; பக்த கோடிகளை ஆசீர்வதித்தார்.

தரசி: ஒவ்வோர் நகரத்திலும் அரசாங்கமே எஜமானனல்லவா?

சோக்: அதற்கென்ன சந்தேகம்?

தரசி: ஒவ்வோர் அரசாங்கமும் தனக்கு லாபகரமான சட்டங்களைச் செய்து கொள்ளுகிறது. ஜனநாயகம் பொதுஜனங்களுக்குப் பிரியமானவைகளையும், ஏதேச்சாதிகாரம் தனது அதிகாரத்தைப் பெருக்கும் சட்டங்களையும் செய்கின்றன. இவ்வாறு சட்டங்களை இயற்றுவதில் தங்களுடைய நன்மையே நீதியென்று தெளிவாக்குகின்றன. சட்டத்தை மீறுவோர் அநீதரென்று தண்டிக்கப்படுகின்றனர். இது எல்லா ஆட்சிகளுக்கும் பொருத்தமாகும். அரசாங்கத்துக்கு உகந்தது நீதியாகும். அரசாங்கமே வல்லமையுள்ளதாக இருப்பதால், வல்லான் வகுத்த வழியே நீதி என்று ஏற்படுகிறது.

சோக்: இதை ஆராய்வோம். அதிகாரிகளுக்குக் கீழ்ப்படிந்து நடப்பது நீதி அல்லவா?

தரசி: ஆமாம்.

சோக்: எல்லா நகரங்களிலும் அதிகாரிகள் சர்வக்ஞர்களா, ஒருபொழுதும் தவறு செய்ய மாட்டார்களா?

தரசி: சில வேளை தவறு செய்வார்கள்.

சோக்: அவர்கள் சட்டங்கள் இயற்றும் பொழுது சில சமயம் சரியாகவும், சில வேளை தவறாகவும் இயற்றுவார்களல்லவா?

தரசி: அப்படித்தான் செய்வார்கள்.

சோக்: சரியாகச் செய்யும் சட்டங்கள் அவர்களின் நலமா, தவறாகச் செய்பவைகளா?

தரசி: சரியாகச் செய்யப்பட்டவைகளே.

சோக்: பிரஜைகள் எல்லாச் சட்டங்களையும் அனுசரிக்க வேண்டியது நீதி அல்லவா? உன் வாதப்படி பலசாலிகளுக்கு லாபமானதை மட்டும் இல்லாமல், லாபமில்லாததையும் அனுசரிப்பது நீதியாகிறதே.

தரசி: இது என்ன குழப்பம்? உமது தந்திரங்களால் என்னை ஏமாற்றமுடியாது.

சோக்: அவ்வித எண்ணம் எதுவும் எனக்கு இல்லை. இவ்விதக் குழப்பம் ஏற்படாமலிருப்பதற்காக, உனது கருத்தைத் தெளிவாகக் கூறுவாய். வல்லவன் என்று சொல்லும்பொழுது அரசாளுவோனைக் குறிப்பிடுகிறாயா? அல்லது பலசாலியைப் பற்றிச் சொல்லுகிறாயா?

தரசி: அரசாளுவோனையே குறிப்பிடுகிறேன். இப்பொழுது உமது சாமர்த்தியத்தைக் காண்பிக்கலாம்.

சோக்: வைத்தியன் உண்மையில் நோய் தீர்ப்பவனா அல்லது பணம் சம்பாதிப்பவனா?

தரசி: நோய் தீர்ப்பவன்.

சோக்: அவனால் நோயாளிக்கு லாபமல்லவா?

தரசி: நிச்சயமாக.

சோக்: எந்தக் கலையும் தனது லட்சியத்தில் தேர்ச்சியடைவதற்குத் தானே முயலும்?

தரசி: உமது வினாவின் அர்த்தமென்ன?

சோக்: இதுவே. தேகத்தில் பிணக்கு ஏற்படுவதாலல்லவோ வைத்தியம் தோன்றியது?

தரசி: உண்மைதான்!

சோக்: தேகத்தின் பிணக்குகளுக்காகத் தானே வைத்தியம் வேண்டும். எக்கலையும் தன் பணி செய்வதைத் தவிர வேறு எதனையும் கோருவதில்லை. இதுவும் உண்மைதானே?

தரசி: அப்படித்தான் தோன்றுகிறது.

சோக்: எந்த விதத்திலும் வல்லவன் நலத்தைத் தேடுவதில்லை. தனக்குட்பட்ட

எளியோரின் நலத்தையே வல்லமை நாடுகிறதல்லவா?

மிகவும் அருவருப்புடன் தரசிமகோசன் இதை ஒப்புக்கொள்ள வேண்டியிருந்தது.

சோக்: அரசாளுவோரும் தமது கலையால் பிரஜைகளின் நன்மையையே நாட வேண்டுமல்லவா?

தனது வாதம் ஒடிந்து போவதைக் கண்டு தரசிமகோசனுக்கு ஆத்திரம் வந்தது.

தரசி: சோக்ரதரே! உமக்கு ஒரு நர்ஸ் இருக்கிறாளா?

சோக்: இதென்ன விந்தை? எனது கேள்விக்கு விடையளிக்காமல், இப்படித் தாறுமாறாகப் பேசலாமா?

தரசி: உமது வாதத்தின்படி, இடையர் ஆடுகளின் நன்மைக்காகவே மந்தைகளை மேய்க்கிறார்கள். உண்மையான அரசர்களும் தமது பிரஜைகளை ஆடுகள் போல் பாவிக்காமல், தமது நலத்தைக் கருதாமல் மக்களின் நன்மையையே நாடுவார்கள். ஒன்றுமே தெரியாத சோக்ரதரே! உமது நீதிமான் இவ்வுலகில் அநீதனுக்கு எதிரில் நிற்க முடியாதவன். ஒரு வியாபாரத்தில் இருவரும் பங்காளிகளானால், அநீதனின் லாபமே அதிகம் இருக்கும். இருவருக்கும் அதே வருமானமிருந்தால், நீதிமான் அதிக வரி செலுத்தவேண்டி வரும். உத்தியோகம் வகித்தால், நீதிமானுடைய சொந்தத் தொழிலும், சொத்தும் சுருங்கும். அநீதனுடைய சம்பத்து பெருகும். நீதிமானுடைய உறவினர் அவனை வெறுப்பார்கள். அநீதன் சொந்தக்காரர் அவனைச் சூழ்ந்து போற்றுவார்கள். ஏதேச்சாதிகாரி பலத்தாலும், வஞ்சனையாலும் கணக்கின்றிக் கொள்ளையடிப்பான். சிறியவர்கள் அப்படிச் செய்தால், அதைக் குற்றம் என்று கூறி அவர்களைத் தண்டிக்கிறார்கள். ஆனால் பெரும் போர் செய்து வெற்றி பெற்று மக்களின் செல்வத்தைக்கொள்ளையடித்து, அவர்களை அடிமை செய்வோனை அனைவரும் போற்றிப் புகழ்கின்றனர். சக்தியில்லாதவர்கள் அநீதியைத் தூற்றுகின்றனர். ஆனால் சோக்ரதரே! அந்த அநீதி வானளாவி ஓங்கினால் உமது நீதியைக் காட்டிலும் பன்மடங்கு பெருமையுடையது. ஆதலால் உண்மையான நீதி வல்லவனின் சுயநலம் என்று கூறினேன்.

சோக்: இந்தச் சம்வாதத்தில் நமக்கு அதிகப் பயனில்லை. பெரிய விருந்தில் எதனையும் சரியாகச் சாப்பிடாமல் ஒவ்வொன்றையும் ருசிப்பது போல், ஒரு வாதத்திலிருந்து மற்றோர் வாதத்துக்குத் தாவிக் கொண்டிருக்கிறோம். முடிவில், நீதியின் தன்மை விளங்கவில்லை. அதனை விட்டு, அது நன்மையா தீமையா என்று ஆராயப் புகுந்தோம். பின்னர் அதனால் யாருக்கு லாபம் என்று வாதித்தோம். கடைசியில் நீதி என்பது என்ன, அது நன்மையா தீமையா, நீதிமான் சுகப்படுவானா கஷ்டப்படுவானா என்ற எந்த வினாவுக்கும் சரியான விடை கிடைக்கவில்லை. இனி இந்தச் சம்வாதத்தை நிறுத்தி விடுவோம்.

கிளாக்கோனும், மற்றவர்களும் அதற்குச் சம்மதிக்கவில்லை. நீதியும், அநீதியும் சில சமயம் தனிமனிதனைச் சார்ந்ததாகவும், மற்றக் காலங்களில் ராஜ்யத்தின் குணங்களாகவும் கருதப்படுவதால், முதலில் அதற்கும் ராஜ்யத்துக்குமுள்ள சம்பந்தத்தை நிர்ணயிப்பது என்று முடிவு செய்தனர்.

பாண்டிமாதேவி

அத்தியாயம் 22

வீரர் திருக்கூட்டம்

அரண்மனைத் தோட்டத்து மாமரத்தடியில் யாருக்கும் தெரியாமல் தங்கை பகவதியைச் சந்தித்து விட்டுச் சென்ற தளபதி வல்லாளதேவன் நேரே கோட்டாற்றுப் படைத் தளத்துக்குப் போய் ஏற்பாடுகளைக் கவனிக்கத் தொடங்கி விட்டான்.

அன்றுவரை உண்பதும், உறங்குவதும், விளையாட்டான பொழுது போக்குகளில் ஈடுபடுவதுமாக இருந்த ஐந்நூறு பத்திப்படை வீரர்களுக்கும் தளபதியின் வரவு சுறுசுறுப்பூட்டியது. விரைவாகவும், தீவிரமாகவும் தளபதி செய்யும் ஏற்பாடுகளைக் கவனிக்கு முன் அந்தப் பிரும்மாண்டமான படைத்தளத்தில் ஒவ்வொரு பகுதியையும் சற்றே சுற்றிப் பார்த்து விடலாம்.

தென்பாண்டி நாட்டின் அறிவுக்கு முன்மாதிரியாக இடையாற்று மங்கலத்தைச் சுட்டிக் காட்டலாமென்றால் ஆண்மைக்கு முன்மாதிரியாகக் கோட்டாற்றுப் படைத்தளத்தைத் தான் சொல்ல வேண்டும். நால்வகைப் பெரும் படைகளும், படைக் கருவிகளும், ஆயுதச் சாலைகளும் நிறைந்த படைத் திருமாளிகை அது. தமிழ் நாட்டுப் பொதுவான படை வீரர்கள் தவிர மோகர், மழவர், யவனர் போன்ற சிறப்புப் பிரிவினரான வீரர்களும் அங்கு இருந்தார்கள். யானை, குதிரை, தேர்கள் உட்பட எல்லாப் படைவீரர்களும் அணிவகுத்து நிற்பதற்கேற்ற பெரும் பரப்புள்ள திறந்தவெளி முற்றம்தான் படைத்தளத்தின் முக்கியமான இடம்.

அதோ, சிற்ப வேலைப்பாடு மிக்க பளிங்குமேடையின் மேல் குன்று போல் பெரிய முரசம் ஒன்று வார்களால் இறுக்கிக் கட்டப்பட்டு விளங்குகிறதே, அது ஒலிக்கப்பட்டால் அந்த முற்றம் படைகளால் நிரம்பி வழியும்.

யானைகள் பிளிறும் ஓசை குதிரைகளின் கனைப்பொலி படைத்தளத்தில் எப்போதும் கேட்டுக் கொண்டே இருக்கும். படையைச் சேர்ந்த யானைகளுக்கும், குதிரைகளுக்கும் தனித்தனியே கொட்டடங்கள் அங்கிருந்தன. போருக்குரிய தேர்கள் ஒருபுறம் வரிசையாக அழகாக இலங்கின. அங்கிருந்த பெரிய ஆயுதச்சாலைக்குள் கோழைகள் நுழைந்தால் மயக்கம் போட்டுத் தலைசுற்றி விழுந்துவிட வேண்டியதுதான். அப்பப்பா! மனிதனுக்கும் மனிதனுக்கும் பகை ஏற்பட்டால் ஒருவருக்கொருவர் போரிட்டுக் கொள்வதற்கு எத்தனை கருவிகள்! ஒளியுறத் தீட்டிச் செம்மை செய்யப்பட்ட வாள்கள் பல்லாயிரக்கணக்கில் குவிந்து கிடக்கின்றன. வேல்கள் ஈட்டிகள் வில் அம்பறாத்தூணிகள். கேட-


நா. பார்த்தசாரதி



யங்கள் இரும்புக் கவசங்கள் இன்னும் எத்தனையோ வகைப் போர்க்கருவிகள் குன்று குன்றாகக் குவிக்கப் பட்டு நிறைந்திருக்கிறது. கோட்டாற்றுப் படைத் தளத்தில் ஆயுதச்சாலை எல்லாக் கேடயங்களிலும் அவற்றை எதிர்த்துப் பிடிக்கும் பக்கத்துக்குப் பின்னால் இருந்த குழிவில் ஒரு சிறு கண்ணாடி பதித்திருந்தது. கேடயத்தைப் பிடித்துக் கொண்டு போர் புரியும்போது முறையற்ற விதத்தில் எவரேனும் பின்புறமாகத் தாக்க வந்தால் அதில் பதித்திருக்கும் கண்ணாடியின் மூலம் போரிடுபவன் அதைத் தெரிந்து கொள்வான். வீரர்களின் வசதிக்காக இந்தப் புதிய நுணுக்கத்தை அறிந்து கேடயத்தில் பொருத்தியிருந்தனர்.

போர்வீரர்கள் முழக்கும் துடி, பறை, கொம்பு, வளை, வயிர் முதலிய போர்க்கால வாத்தியங்களும் கோட்டாற்றுப் படைக் கோட்டத்தில் குறைவின்றி இருந்தன. யானைகளுக்குப் போர்த்தும் முக படாங் களும், அவற்றை அடக்கும் அங்குசங்களும், அவற் றின் மேல் வைக்கும் அம்பாரிகளும் ஒர்புறம் பெரு கிக் கிடந்தன. குதிரைகளை அலங்கரிக்கும் நெற்றிப் பட்டங்களும் கடிவாளங்களும், சேணங்களும் மற்றோர் புறம் நிறைந்திருந்தன. கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளோடு முன் தோன்றி மூத்த குடிப் பெருமை அந்தப் பெரும்படைச் சாலையின் ஆயுதங் களில் விளங்கிற்று.

எத்தனை போர்களில் எத்தனை வீரர்களுடைய தசையைத் துளைத்துக் குருதியைக் குடித்திருக்கும் இந்த ஆயுதங்கள்? இன்னும் எத்தனை போர்களில் அப்படிச் செய்ய இருக்கின்றனவோ? மண்ணைக் காப்பதற்குச் சில போர்கள். மண்ணைப் பறிப்பதற் குச் சில போர்கள். பெண்ணைக் காப்பதற்குச் சில போர்கள். பெண்ணைப் பறிப்பதற்குச் சில போர்கள்.





ரிபார் செய்யத் தெரிந்த நாளிலிருந்து ஆயுதங்கள் புதிது புதிதாக வந்தன. ஆயுதங்கள் புதிது புதிதாக வந்த நாளிலிருந்து போர்களும் புதிது புதிதாகப் புதுப் புதுக் காரணங்களுக்காக உண்டாகி விட்டன.

தளபதி வல்லாள தேவன் அன்று படைத்தளத்துக்கு வந்தபோது அங்கிருந்த எல்லாப் பிரிவுகளிலும் பரபரப்பும் வேகமும் உண்டாயின. மேல் மாடத்தில் கோட்டையின் உயரமான கொடி மரம் அமைந்திருந்த மேடையில் ஏறி நின்று பார்த்தால் பரி மாளிகை (குதிரைகள் இருக்குமிடம்) கரி மாளிகை (யானைகள் இருக்குமிடம்) உட்பட யாவும் நன்றாகத் தெரியும். வீரர்களையும், படைத் தலைவர்களையும் ஒன்றுகூட்டி நிலைமையை விளக்கி ஏற்பாடுகள் செய்வதற்காக அங்கே வந்திருந்த தளபதி கொடி மரத்து மேடையில் ஏறி நின்றுகொண்டு அன்றுதான் புதிதாகப் பார்க்கிறவனைப் போல் அந்தப் படைத்தளத்தின் மொத்தமான தோற்றத்தைப் பார்த்தான். படைத்தளமே ஒரு சிறிய நகரம் போல் காட்சியளித்தது.

“தென்பாண்டி நாட்டையும், மகாராணியையும் காப்பாற்றும் விதியின் வலிமை இந்தப் படைக் கோட்டத்திலும் இதில் நான் செய்யப் போகிற ஏற்பாடுகளிலும் அடங்கியிருக்கின்றன. ஆனால் தம்முடைய சூழ்ச்சியிலும் சிந்தனைகளிலும் அடங்கியிருப்பதாக மகா மண்டலேசுவரர் நினைத்துக் கொண்டிருக்கிறார்”—என்று அதைக் காணும் போது ஒரு நினைவு அவன்

மனத்தில் உண்டாயிற்று: மகாமண்டலேசுவரர் இல்லாத இடத்தில் அவரைப் பற்றி அசூயையும், காழ்ப்பும், காய்ச்சலும் தன் மனத்தில் உண்டாவதை அவனால் தடுக்க முடியவில்லை. ஆனால் அவரை நேரில் பார்த்துவிட்டாலோ பயம், அடக்கம், பணிவு எல்லாம் அவனையும் மீறி அவனிடத்தில் வந்து பொருந்திக் கொண்டுவிடுகின்றன. துணிந்து ஓரிரு முறை அவரை எதிர்த்துப் பேசியிருக்கிறானென்றாலும் அவ்வாறு பேசி முடித்த பின் 'ஏன் பேசினோம்' என்று தன்னை நொந்து கொண்டிருக்கிறான். ஆழமும் அழுத்தமும் நிறைந்த அவருடைய கண்களின் முன் அவன் தனக்குத் தானே சிறுபிள்ளையாய்ப் போய் விடுவான். அவருடைய பார்வைக்கு முன்னால் அவனுக்கு உண்டாகிற தாழ்வு மனப்பான்மையை அவன் தவிர்க்க முடிவதில்லை. கணவனின் முகத்தைக் காணாதபோது ஏற்பட்ட ஊடல் அவனைப் பார்த்துவிட்டதுமே மறைந்து விடும் பலவீனமான பெண் மன நிலையைத்தான் அவனுக்கு உவமை கூற வேண்டும்.

அவருடைய கட்டளைக்குத்தான் அவன் கீழ்ப்படிந்தான். அவன் என்ன? மகாராணியே அப்படித்தானே? ஆனால் எவருடைய கண்களுக்கு முன்னால் அவன் தலை குனிவானோ, எவருடைய கட்டளை அவனை ஆளுமோ, எவருடைய அறிவு அவனை மலைக்க வைத்ததோ; அவர் மேலேயே அவன் சந்தேகப்பட்டான்; பொறாமை கொண்டான். பிறருக்குத் தெரியாமல் அவர் நடவடிக்கைகளை நேரிலும், தன்னைச் சேர்ந்தவர்களைக் கொண்டும் இடைவிடாமல் கண்காணித்தான்.

பெரிய அரசன் அரண்மனையில் ஒரு மூலையில் தூங்கிக் கொண்டிருந்தாலும் அவனுடைய ஆற்றலின் ஒளியால் அவனால் ஆளப்படும் நாட்டின் பல காதப் பரப்புக்குள்ளும் அவன் ஆணைகள், சட்டதிட்டங்கள் ஒழுங்காக நடப்பதற்குக் காரணம் என்ன? அவன் ஆளுமிடம் எங்கும் அவனுடைய ஆற்றல் ஒளி காக்கிறது.

“உறங்குமாயினும் மன்னவன் தன்னொளி
கறங்கு தெண்டிரை வையகம் காக்குமால்” —

என்ற சிந்தாமணியாசிரியர் கூறிய தொடர்தான் மகா மண்டலேசுவரரைப் பொருத்த மட்டில் தளபதியின் தத்துவமாக இருந்தது. மகா மண்டலேசுவரர் தென்பாண்டி நாட்டின் மன்னர் இல்லை. ஆனால் இடையாற்று மங்கலத்திலோ, அரண்மனையின் ஒரு மூலையிலோ இருந்து கொண்டு தம் எண்ணத்தின் ஒளியால் நாடு முழுவதும் காத்துக் கண்காணிக்க முடிகிறது அவரால். மந்திரவாதிகளுடைய கண் பார்வைக்கு எதிராளியைக் கட்டிவிடும் ஆற்றல் இருப்பது போல் அவரிடம் ஏதோ ஒரு அதிக ஆற்றல் இருப்பதாகத் தளபதிக்குப் பட்டது. கோட்டாற்றின் மாபெரும் படைத்தளத்தின் தலைவனாக இருந்தும் மகாமண்டலேசுவரரின் அந்த ஈடு இணையற்ற சதுரப்பாட்டில் காலில் ஒரு பங்கு கூடத் தனக்கு வரவில்லையே என்ற புகைச்சல் அவனுக்கு உண்டாயிற்று.

கண்ணுக்கு மையெழுதும் எழுதுகோலைத் தொலைவில் இருக்கும்போது கண்ணால் பார்க்க முடிகிறது. அதே எழுதுகோலால் கண்ணுக்கு மைதீட்டும்போது கண்களாலேயே அதைக் காண முடிவதில்லை. மகாமண்டலேசுவரரைக் காணாதபோது பொறாமையைக் கண்ட தளபதி அவரை நேரில் கண்டால் அவரது பெருமை தான் தெரிந்தது.

கொடி மரத்து மேடையில் நின்று கொண்டு கண் பார்வையில் படுமிடம் வரை பரவியிருக்கும் அப் பெரும் பட்டாளத்தைப் பார்வையிட்ட போதும் மகாமண்டலேசுவரரைத்தான் அவன் நினைக்க முடிந்தது. தன் சிந்தனை அத்தனை பெரிய பட்டாளத்தையும் அந்த ஓரே ஒரு மனிதரையும் சமமாக நிறுத்துப் பார்ப்பது ஏனென்றே அவனுக்குப் புரியவில்லை.

அதோ! பூண் பிடித்த எடுப்பான தந்தங்கள் ஒளிரக் கருமலைகள் போல் நூற்றுக் கணக்கான யானைகள், வெண்பட்டுப் போல் பளபளக்கும், கொழுத்த உடல் வனப்புள்ள குதிரைகள், தேர்கள் — அவ்வளவையும் ஆளும் அந்த வீரத் தளபதியும் ஓரே மனிதரின் அறிவாழச் சூழலை நினைக்கும்போது கொஞ்சம் நினைவு துவளாமல் இருக்க முடியவில்லை. உடலின் வன்மையால் வாழத் துடிக்கிறவனுக்கு எப்போதாவது ஏற்பட்டே தீரவேண்டிய சோர்வு அது.

கோட்டாற்றிலுள்ள ஆயுதச்சாலையில் இருந்தது போல் முன்பு தான் இடையாற்றுமங்கலத்து விருந்தினர் மாளிகையில் தங்கிய இரவில் அதன் அடியில் கண்ட பாதாள மண்டபத்தில் மகா மண்டலேசுவரர் ஆயுதங்கள் சேர்த்துக் குவித்து

வைத்திருந்ததை நினைவு படுத்திக் கொண்டான் வல்லாளதேவன்.


மனத்தில் நிகழும் போராட்டத்துக்கு ஒரு ஏற்பாடும் தோன்றாமல் நாட்டுக்கு வரப் போகும் போராட்டத்தைத் தாங்க வேண்டியது செய்வதற்காகக் கொடி மரத்து மேடையிலிருந்து கீழிறங்கிப் படைமுற்றத்துக்கு வந்தான் அவன். ஐநூறு பத்தி (பத்தியென்பது குறிப்பிட்ட தொகையினரைக் கொண்ட படையணி) வீரர்களின் சிறு தலைவர்களும் முரச மேடையைச் சுற்றி நின்று கொண்டிருந்தனர் அவர்கள் தன்னை வணங்கி வரவேற்ற வரவேற்பை ஏற்றுத் தளபதி படைகளை முற்றத்தில் வகுத்து நிறுத்த வேண்டுமென்று கட்டளை யிட்டான்.

கட்டளை பிறந்த அடுத்த கணம் ஊழிக்காலப் பேரிடிகள் ஏக காலத்தில் முழங்கிச் சாடுதல் போல் அந்த மாபெரும் முரசு முழங்கியது நான்கு பக்கமும் நெடுந்தூரத்துக்குப் பரந்திருந்த படைக் கோட்டத்துப் பகுதிகளில் எல்லாம் அம்முரசொலி கேட்டது. பக்கத்துக்கு ஒருவராக இருபுறமும் நின்று கொண்டு அந்த முரசை முழக்கிய வீரர்கள் கை ஓயுமட்டும் முழக்கினர்

அரை நாழிகைக்குள் அந்த முற்றம் பத்தி பத்தியாக அணிவகுத்த வீரர்கள் திருக் கூட்டத்தால் நிறைந்து விட்டது. முரச முழக்கம் நின்றதும் அமைதி சூழ்ந்தது. ஆயிரக் கணக்கான வீரர்கள் அணிபெற்று நிற்கும் அந்தப் படை வெள்ளத்தில் ஊசி விழுந்தால்கூட ஓசை கேட்கும். அவ்வளவு நுண்ணிய அமைதி பரவி நின்றது முரச மேடையில் அணிகளின் சிறு தலைவர்களோடு ஏறி நின்று கொண்டு படைகளை நிதானித்துப் பார்த்தான் தளபதி வல்லாளதேவன்.

பாண்டியனுக்கும் அவனோடு சேர்ந்திருக்கும் வடதிசையரசர்களுக்கும் உள்ள படைகளின் மொத்தமான தொகையை மனம் அனுமானித்துக் கொண்டபடி ஒப்பு நோக்கித் தன் கண்ணெதிர் நிற்கும் படைப் பரப்போடு இணை பார்க்க முயன்றான் அவன். இணை பொருந்தவில்லை. ஏதாவது வெளியிலிருந்து படைஉதவி கிடைத்தாலொழியத் தென்பாண்டிப் படை வடதிசைப் பெரும் படைகளின் கூட்டணியைச் சமாளிக்கப் போதுமானதாக இருக்காதென்று அவன் மதிப்பில் தோன்றியது தன்னைச் சூழ்ந்து கொண்டு நின்ற அணித் தலைவர்களை நோக்கி அவன் ஆவேச உணர்ச்சியோடு பேசலானான்:

"நண்பர்களே! வெற்றியும், தோல்வியுமாகப் பலபோர்களில் அனுபவப் பட்டுள்ள நாம் இப்போது மலைப்பு அடைய வேண்டிய நிலையில் இருக்கிறோம். வடக்கே சோழப் பேரரசின் படை பெரிது. அதோடு கொடும்பாளூர்ப் படை, கீழைப் பழுவூர்ப்படை ஆகிய சிறுபடைகளும் ஒன்று சேரப் போகின்றன. ஐந்து அரிய திறமைசாலிகள் ஒன்றுபட்டுக் கூட்டுப் படையணியாக அது அமையலாம். சோழ கோப்பரகேசரி பராந்தகனும், கொடும்பாளூரானும், கீழைப்பழுவூர் கண்டன் அமுதனும் பரதூருடையானும், அரசூருடையானும்.-ஒவ்வொரு வகையில் போர் அனுபவம் மிகுந்தவர்கள் அவர்கள் ஒன்றுபட்டுக் கூட்



டாகப் படை யெடுக்கும் இந்தப் போரை வன்மம் பாராட்டிக் கொண்டு செய்யப் போகிறார்கள்.

"நாம் எல்லோருமே கடமையிற் கருத்துள்ள வீரர்கள் தாம். போர் செய்து மார்பிற் புண்களைப் பெறுத நாட்களெல்லாம் நம் வாழ்க்கையிலேயே பயனற்றுக் கழிந்த நாட்களென்று கருதுபவர்கள் தாம். கண்களுக்கு நேரே வேலை ஓங்கினால் இமைகள் மூடினும் அதையே தோல்வியாக எண்ணி நாணப்படும் அளவுக்குத் தன்மானமும், மறப்பண்புமுள்ள மகா வீரர்களும் நம்மில் அநேகர் இருக்கின்றனர்

"கொற்கை, கரவந்தபுரம் பகுதிகளில் வடதிசையரசர்கள் மறைமுகமாக நடத்திய குழப்பங்களைக் கொண்டு விரைவில் படையெடுப்பு நிகழலாமென்ற பயம் ஏற்பட்டிருக்கிறது. கரவந்தபுரத்துக் கோட்டையில் பெரும் பெயர்ச்சாத்தனிடமுள்ள படையும்

தயாராகவே இருக்கிறது. வடக்கு எல்லையில் போர் தொடங்கும் என்ற தகவல் உறுதிப் பட்டவுடன் எந்தக் கணத்திலும் நமது பெரும் படை வடக்கே புறப்படத் தயாராயிருக்க வேண்டும். இப்போது வடக்கேயிருந்து ஒற்றுமையாகச் சேர்ந்து படையெடுக்கும் இந்த வடதிசையரசர்கள் முன்பு தனித் தனியாகப் போர் செய்தபோது நாம் பல முறைகள் வெற்றி பெற்றிருக்கிறோம். ஆனால் அப்போதெல்லாம் குமாரபாண்டியர் உடனிருந்து போருக்குத் தலைமை தாங்கியதனால் நமக்கு உற்சாகமும், நம்பிக்கையும் இருந்தன. இப்போதோ குமார பாண்டியரும் நம்முடன் இல்லை. ஒரு வேளை போர் தொடங்கும் நாள் நீடித்தால் அவர் வந்து விடலாம். உறுதி இல்லை. வந்தால் நமது நல்வினையாகும்.

"எப்படியிருப்பினும் குறைவோ, நிறைவோ, நமது அவநம்பிக்கைகளை மறந்து ஊக்கமோடு போரில் ஈடுபடுகிற வீரம் நம்மை விட்டு ஒருபோதும் போய் விடாது. என்னைப் பொறுத்த வரையில் இந்த நாட்டுக்காக என் உயிரைக் கொடுக்க எந்த விநாடியும் நான் தயாராயிருக்கிறேன். செஞ்சோற்றுக் கடனும், செய்ந்நன்றிக் கடனும் பட்டிருக்கிறோம் நாம். இந்தப் போரில் எவ்வளவு ஊக்கத்தோடு நீங்கள் ஈடுபடுவீர்களென்பதை இப்போது நீங்கள் செய்யும் வீரப் பிரமாணம் மூலமும் குறுரை மூலமும் நான் அறியப் போகிறேன்" என்று சொல்லி நிறுத்தினான் தளபதி.

அவன் பேச்சு நின்றது. வீரர்கள் வாளை உருவி வணங்கி வீரப் பிரமாணம் செய்தனர். "செஞ்சோற்றுக் கடன் கழிப்போம், செய்ந்நன்றி மறவோம்" என்ற குறுரைக் குரலொலி கடல் ஒலி போல் எழுந்தது.

தளபதி நின்றுகொண்டிருந்த முரசு மேடைக்கு நேரே படைக் கோட்டத்தின் தலைவாயில் இருந்தது. தற்செயலாக வாயிற்பக்கம் சென்ற பார்வை அங்கே நிலைத்தது தளபதிக்கு. ஆபத்துதவிகள் தலைவன் குதிரையில் கனவேகமாக வந்து இறங்கித் தன்னைத் தேடிப் படைக் கோட்டத்துள் நுழைவதைத் தளபதி பார்த்தான். அவன் மனத்தில் ஆவல் துள்ளி எழுந்தது.

அத்தியாயம் 23

கருணை வெள்ளம்

காந்தளூர் மணியம்பலத்திலிருந்து இருளில் புறப்பட்ட சிவிகைப் பயணம் தொடர்ந்தது. பல்லக்குத் தூக்குகிறவர்களுடைய துவண்ட நடையையும், வாடித் தொங்கினாற் போல இருந்த புவனமோகினியின் முகத்தையும் கவனித்த போதுதான் மகாராணிக்குத் தான் செய்துவிட்ட பெருந் தவறு புரிந்தது.

தன் ஒருத்தியோடு போகாமல் காலையில் புறப்பட்டதிலிருந்து அவர்கள் வயிற்றைக் காயப் போட்டு விட்டோமே என்ற உணர்வு அப்போதுதான் அவர் நெஞ்சில் உறைத்தது. அவருடைய மிக மெல்லிய மனம் வருத்தமுற்றது. அரண்மனையிலிருந்து சுசீந்திரத்துக்கும், சுசீந்திரத்திலிருந்து காந்தளூருக்கும் காந்தளூரிலிருந்து மீண்டும் அரண்மனைக்குமாகப் பல்லக்குத் தூக்கும் ஆட்களை இழுத்தடித்து அலைய வைக்கிறோம் என்ற உணர்வைத் தாங்கிக் கொள்ளக்கூட முடியவில்லை.

"எனக்குத்தான் ஏதேதோ கவலைகளில் பசியே தோன்றவில்லையென்றால் எல்லோருக்குமா அப்படி இருக்கும்? இதோ இந்த வண்ண மகளின் முகத்தில் பசியின் சோர்வுக் களை படர்ந்து பரிதாபகரமாகத் தோற்றுகிறதே. என்னிடம் பசியைச் சொல்வதற்குப் பயப்பட்டுக் கொண்டு பேசாமல் உட்கார்ந்திருக்கிறாளென்று தெரிகிறது. பல்லக்குத் தூக்கிகள் — பாவம்! மகாராணி சொல்லும்போது மறுக்கக் கூடாதேயென்று பயத்தினாலும் பதவி, பெருமை, காரணமாக உண்டாக்கிக் கொண்ட மரியாதைகளாலும் பசியை, நடையை,- சுமைக் களைப்பைக் கூறாமல் ஏவியபடி நடக்கிறார்கள். அடடா! சில பேர் பதவியினாலும், அறிவு மிகுதியாலும், வயது மூத்ததினாலும், மற்றவர்களுடைய துன்பங்களையும், எண்ணங்களையும் பொருட்படுத்தாமல், புரிந்து கொள்ளாமல், தங்களை அறியாமலே பிறருக்குத் துன்பம் தருவது போல நானும் நடந்து கொண்டு விட்டேனே,. அழுதாலும், வாய் விட்டுக் கதறினாலும் தான் துன்பமா? அழாமலும் கதறாமலும் விளாம் பழத்துக்கு உள்ளுக்குள்ளேயே வரும் நோய் போல் நெஞ்சிலேயே ஏங்கி மாய்ந்து

வேதனைப்பட்டுக் கொண்டிருப்பவர்கள் இந்த உலகில் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள்?''

மகாராணி பல்லக்கை நிறுத்தச் சொல்லி விட்டு அதைச் சுமப்பவர்களை விசாரிப்பதற்காகத் தலையை வெளியே நீட்டிக் கேட்டார்: ''அப்பா! நீங்களெல்லாம் எப்போது சாப்பிட்டீர்கள்? எனக்குப் பயந்து கொண்டு ஒளிக்காமல் மறைக்காமல் உங்கள் துன்பங்களைச் சொல்லுங்கள் உங்களுக்குக் களைப்பும் பசியும் அதிகமாயிருக்குமே?''

''தாயே! நாங்கள் காலையில் அரண்மனையிலிருந்து புறப்பட்ட போது சாப்பிட்டதுதான். பசியையும், களைப்பையும், பற்றி நாங்கள் கவலையே படவில்லை மகாராணியாருக்குப் பணி புரியும் பாக்கியமே போதும்'' என்று வினயமாக மறுமொழி கூறினான் பல்லக்கின் முன் கொம்பைச் சுமந்து கொண்டு நின்ற இருவரில் ஒருவன்.

''புவனமோகினி! உன் முகத்திலும் பசிக் களை படர்ந்து விட்டது. நீ சொல்லாமல் இருந்தாலும் எனக்குத் தெரிகிறது 'மகாராணியோடு இனிமேல் எங்குமே வெளியில் புறப்பட்டு வரக் கூடாது. வந்தால் வயிறு காய வேண்டியதுதான்' என்று உன் மனத்துக்குள் என்னைத் திட்டிக் கொண்டிருப்பாய்'' என்றார் மகாராணி.

''தாங்களே வெறும் வயிற்றோடு இவ்வளவு இடமும் சுற்றிக் கொண்டிருக்கும் போது நாங்கள் அப்படியெல்லாம் நினைக்க முடியுமா? பயண அலுப்பினால் கொஞ்சம் தளர்ந்து போனேன். வேறொன்றுமில்லை'' என்று சிறிது வெட்கத்தோடு தலை தாழ்த்திக் கொண்டு பதில் சொன்னாள் புவனமோகினி.

''இவர்களுடைய பசிக்கு ஏதாவது வழி செய்துதான் ஆக வேண்டும். இல்லா விட்டால் பெரும் பாவத்தைச் செய்தவள் ஆவேன்'' என்ற உடனடியான உணர்ச்சித் துடிப்பு மகாராணியின் மனத்தில் ஏற்பட்டது. அந்தக் காந்தளூர் நெடுஞ்சாலையில் ஓர் கேந்திரமான இடத்தில் நான்கு கிளை வழிகள் பிரிந்தன நான்கில் எந்த வழியாகச் சென்றாலும் பாதை சுற்றி அரண்மனைக்குப் போய்ச் சேர முடியும் வழிகள் பிரிகிற இடத்துக்கு வந்ததும் ''முன்சிறை வழியாக அரண்மனைக்குச் செல்லும் பாதையில் செல்லுங்கள்'' என்று ஏதோ ஒரு தீர்மானத்துக்கு வந்த கருத்தோடு சுமப்பவர்களிடம் கூறினார் மகாராணி.

புவனமோகினி குறுக்கிட்டு அதைத் தடுக்க முயன்றாள்:—

''முன்சிறை வழியாகச் சுற்றிக் கொண்டு சென்றால் அரண்மனையை அடைவதற்கு நள்ளிரவு ஆகிவிடுமே! வேண்டாம்; தேவி! எங்களுடைய பசியைப்பற்றி ஏதோ நினைத்துக் கவலைப் பட்டுக் கொண்டு நீங்கள் முன்சிறைப் பாதையாகப் போகலாமென்று சொல்கிறீர்கள் போலிருக்கிறது. இந்தப் பசி ஒன்றும் பிரமாதமில்லை. இதை எங்களால் தாங்கிக் கொள்ள முடியும். நாங்களாவது ஒருவேளை சாப்பிட்டிருக்கிறோம். பச்சைத் தண்ணீரால் கூட வயிற்றை நனைத்துக் கொள்ளாமல் மகாராணியாரே எங்களோடு வரும்போது எங்கள் பசியும், களைப்புமா எங்களுக்குப் பெரிது?''

''இல்லை, அம்மா! நீ சொல்வது தவறு என்னையறியாமலே இன்று காலையிலிருந்து இந்தக் கணம்வரை உங்களையெல்லாம் துன்புறுத்திக் கொண்டிருந்து விட்டேன் நான். நீங்கள் எல்லாம் பசியும், களைப்பும் அடைந்திருக்கிறீர்கள் என்பதை நான் உணராமலும், நினைக்காமலும், இருந்தது எவ்வளவு பெரிய தவறு?''

''தேவி! தங்கள் கவலைகள் ஆயிரமாயிரம். அவற்றுக்கிடையிலும் கருணையும், இரக்கமும், எங்கள் மேலிருக்கின்றன என்று அறியவே எங்களுக்கெல்லாம் வயிறு நிறைந்த மாதிரி. முன்சிறைக்குப் போய் நேரத்தை வீணாக்க வேண்டாம். தவிர நமது சிவிகை போய்ச் சேருகிற நேரத்துக்கு அறக் கோட்டத்தில் உணவு வைத்திருப்பார்களா என்பது சந்தேகம்தான்!''

''எல்லாம் வேண்டிய உணவு இருக்கும். என் சொற்படி கேளுங்கள். தடுத்துப் பேசாதே. முன் சிறைக்கே செல்லுங்கள்!''—என்று உறுதியான குரலில் மகாராணி உத்தரவிட்டபின் புவனமோகினியால் தடுக்க முடியவில்லை. சிவிகை வழி மாறி விரைந்தது வெள்ளம்போற் பெருகும் இந்தக் கருணை உள்ளத்தை நினைத்த போது சிவிகை சுமப்பவர்களுக்குக் கூட மனம் உருகியது அதிகாரம் செய்பவர்களுக்கு அனுதாபப்படும் பண்பு குறைவாயிருக்கும் ஆனால் மகாராணி வானவன்மாதேவிக்கு அனுதாபப்படும் பண்பு அதிகமாக இருந்தது. அதிகாரம் செய்யும் பண்பு மிகக் குறைவு என்பது அவரோடு சிறிது நேரம் பழகினாலும் தெளிவாகத் தெரிந்து விடும். (தொடரும்)



நேற்று இருந்தான்! எத்தனை விஷயங்களை அவன் பற்றிக் கொண்டு நின்றான்! எத்தனை விஷயங்கள் அவனைப் பற்றிக் கொண்டு நின்றன! இன்று அவன் இருந்த இடம் தெரியாமல் மாயமாய் மறைந்து போனான். நிலைபெற்று நிற்கும் மனிதனைத் தோற்றம் காட்டிய அந்தப் பொருளும், பற்றிய பற்றுக்களும், எல்லாம் இன்று சூன்யமாகிப் போயின! இப்படி இருப்பது போல் இருந்தவர்கள் மறைந்து போவதைத் தினமும் பார்க்கிறோம். இந்த உலகத்தின் விநோதக் காட்சிகளுள் இதுவே பெரிய விநோதம்.

நெருநல் உளன்ஒருவன்
இன்றுஇல்லை என்னும்
பெருமை உடைத்துஇவ்
உலகு.

நெருநல்—நேற்று

* * *

நேற்று இருந்தவன் இன்று இல்லை என்பதுபோக, அடுத்த நிமிஷம் கூட உயிருடன் இருப்பது நிச்சயம் இல்லை. ஆயினும் நாம் போடும் திட்டங்களோ பல்லாயிரம்.

ஒருபொழுதும் வாழ்வது
அறியார் கருதுப
கோடியும் அல்ல
பல.

ஒருபொழுதும்—ஒரு நிமிஷ காலத்தளவு. வாழ்வது அறியார்-இருப்போம் என்று உறுதியாக நினைப்பதற்கு இடமில்லை.
கோடியும் அல்ல பல-கோடிக்கும் மேலாக. கருதுப-திட்டம் போடுவார்கள்.

இன்பங்களும் பொருள்களும் சம்பாதிப்பதற்காகவும், கோபத்தைத் தீர்த்துக் கொள்வதற்காகவும் திட்டங்கள் போடுவார்கள், அடுத்த நிமிஷம் உயிருடன் இருப்பது நிச்சயமில்லையாயினும்.

* * *

குடம்பை தனித்தொழியப்
புள்பறந்து அற்றே
உடம்போடு உயிரிடை
நட்பு.

குடம்பை என்றால் முட்டை என்று பரிமேலழகர் உரை.

பறவை தனக்கென்று செய்து கொள்ளும் கூடு என்பது மணக்குடவர் உரை.

இந்த இரண்டில் எதை எண்ணி வள்ளுவர் குறளைப் பாடினார் என்று சொல்வது கஷ்டம். எதுவாயினும் பொருள் ஒன்றே.

முட்டைக்கும் அதனுள் உண்டாகும் குருவிக்கும் என்ன சம்பந்தமோ அவ்வளவே உடலுக்கும் உயிருக்கும்.

சில நாட்களுக்காகக் கூடு கட்டுகிறது, தாய்ப் பறவை. குஞ்சு பறக்கும் தகுதியடைந்ததும் அதைவிட்டொழித்துப் பறந்து போகிறது. அதைப் போலவே உயிரும் ஒரு உடலைத் தன் கர்மத்தால் உண்டாக்கிக் கொள்கிறது. அதில் வாழ வேண்டிய நாட்கள் வாழ்கிறது. பிறகு அதை விட்டுப் போய் விடுகிறது. பறவைக் குஞ்சு கூட்டை விட்டுச் சந்தோஷமாகப் பறந்து போவதுபோல் ஆன்மாவும் உடலை விட்டுப் பறந்து போகிறது.

* * *

புக்கில் அமைந்தின்று
கொல்லோ உடம்பினுள்
துச்சில் இருந்த
உயிர்க்கு.

தனக்கு நிரந்தரமாக ஓர் இடம் இல்லாத நாடோடி இங்கே ஒருநாள் அங்கே ஒரு நாளாகப் படுத்துக் காலம் கழிப்பான். அதைப் போலவே உயிர் பல உடல்கள் எடுத்துக் காலம் கழிக்கிறது. தனக்கு உரிமையில்லாத வீட்டுத் திண்ணைகளில் இரவில் தங்கும் நாடோடியின் நிலைமையை உடலின் உயிர் யாத்திரைக்கு உவமையாகச் சொல்கிறார்.

துச்சில்—தங்கும் இடம். ஒதுக்கிடம்.
தங்குவது—தங்குவது.
புக்கில்—உரிமையுடன் குடியிருக்கும் இல்லம்.

'புக்கில்' இல்லையானபடியால் இங்கும் அங்கும் ஒதுக்கிடம் கண்டு காலத்தைக் கழிக்கிறான் நாடோடி. அந்த நிலைமையே உயிரின் உண்மை நிலை. 'புக்கில்' எது என்றால் உயிர் நிரந்தரமாய் அடைய வேண்டிய வீடு—மோக்ஷ நிலை.

மன்னர் மாளிகையில் மகாத்மா

சாவி

ஒரு தேசத்தின் வரலாற்றில் சில சிறிய சம்பவங்கள்கூடப் பெருமை படைத்து தேசிய உணர்ச்சிக்கு எடுத்துக்காட்டாகச் சுடர் விட்டுப் பிரகாசிக்கின்றன. அத்தகைய ஒரு சம்பவம் 1931-ம் ஆண்டு நவம்பர் 5-ல் நடந்தது. அன்றுதான் இரண்டாவது வட்டமேஜை மகாநாட்டுக்கு லண்டன் சென்றிருந்த மகாத்மா காந்தி அடிகள் தனது மாமூலான அரை வேஷ்டியுடனும் போர்த்திய சால்வையுடனும் பக்கிங்ஹாம் அரண்மனைக்குள் புகுந்து ஐந்தாம் ஜார்ஜ் மன்னருடன் தேநீர் அருந்தச் சென்றார். அதன் மூலம் நமது நாட்டின் வருங்காலத்திய வரலாற்றில் ஒரு புதிய சகாப்தத்தையே துவக்கி வைத்தார்.

ஐந்நூற்றுக்கு மேற்பட்ட இந்திய மகாராஜாக்களில் எவரும் நினைக்கக் கூடாத செயலை, பிரிட்டிஷ் பிரபு வர்க்கம் செய்யத் துணியாத ஒரு செயலை ஒரு தனி மனிதர் செய்து காட்டினார். பிரிட்டிஷ் கன்சர்வேடிவ் கட்சி "துரோகத்துடன் மன்னர் தேநீர் அருந்தினார்" என்று விவரித்த இந்தச் சம்பவத்தைப் பற்றிய குறிப்புகளை நேரில் பார்த்தவர்கள் எழுதி வைத்திருக்கின்றனர். இவை ருசிகரமானவை.

அன்றைய பிரிட்டிஷ் மந்திரி சபை அங்கத்தினர்கள் முதலில் வட்டமேஜை மகாநாட்டில் மன்னர் கலந்து கொள்ளுவதை விரும்பவில்லை. வட்டமேஜை மகாநாடு முறிந்து போனால் மன்னர் கௌரவத்துக்கு ஹானி அல்லவா? பிறகு எப்படியோ மன்னரை இணங்க வைத்தனர்.

1930-ல் நடந்த முதல் வட்டமேஜை மகாநாட்டில் காந்திஜி கலந்து கொள்ளவில்லை என்பது தெரிந்ததே. இர்வின் பிரபு தலையிட்ட பிறகு காந்திஜி இங்கிலாந்து செல்ல ஏற்பாடாயிற்று. இதைக் கேட்ட கன்சர்வேடிவ் கட்சியினர் இர்வின் பிரபுவின்மீது சீறினர். இவர்களில் ஒருவரான டப்கூப்பர், "காந்திக்குக் கொடுக்கக் கூடிய தண்டனை, வைஸ்ராய் பவனி வரும் யானையைக் கொண்டு அவர் தலையை மிதித்து, உருட்டுவதுதான்" என்று ஒரு சமயம் கூறினார். ராதர்மியர் பிரபு, "காந்திஜி ஒரு மாயாஜாலக்காரர்" என்று வர்ணித்தார். சர்ச்சில் ஒரு வசைபுராணமே பாடினார்.

மன்னர் மாளிகையிலோ 1922-ல் இளவரசர் விஜயத்தின் போது காந்திஜியின் தலைமையில் நடந்த பகிஷ்காரம் மனத்தை விட்டு அகலவில்லை. இதைக் கண்டு கவலையடைந்த இர்வின் பிரபு நிலைமையைச் சரிப்படுத்த மன்னருக்கு ஒரு சமாதானக் கடிதம் எழுதினார்.

1931-ம் ஆண்டு மார்ச் 13ல் எழுதிய அந்தக் கடிதத்தில், "காந்திஜியைச் சந்திக்கும் எவரும் அவருடைய நடத்தையைப்பற்றி உயர்வாகவே எண்ணும்படிதான் தோன்றும். அவரிடமுள்ள கவர்ச்சி அப்படித்தான் என்னை எண்ண வைத்தது. பூர்ண ஸ்வராஜ்தான் தம்முடைய லட்சியம் என்று அவர் சொல்லிக் கொண்டிருந்தாலும், பிரிட்டிஷாரின் உதவி தேவைப்படத்தான் செய்யும் என்று அவர் கருதுவதாகவே நான் மதிக்கிறேன். மாட்சிமை தங்கிய தங்களது சாம்ராஜ்யத்தைச் சிதைக்க வேண்டுமென்று அவர் எண்ணுவதாகப் பலர் சொல்லுவது முற்றிலும் தவறு என்பதே என் நம்பிக்கை" என்று காந்திஜிக்காகப் பரிந்து பேசினார்.

வட்டமேஜை மகாநாடு எதிர்பார்த்தபடியே முறிந்து போயிற்று. வந்திருந்தவர்களுக்கு ஆறுதல் அளிக்கும் வகையில் மன்னர் ஒரு தேநீர் விருந்துக்கு ஏற்பாடு செய்தார். நவம்பர் 5-ந் தேதி இது நிகழவிருந்தது.

இந்தியக் காரியதரிசியாக இருந்த ஸர் ஸாமுவேல் ஹோர் 'செருப்பும் வேஷ்டியும்' அணிந்திருக்கும் காந்திஜியை அரண்மனைக்குள் எப்படி அனுமதிப்பதென்று மிகவும் கவலையில் ஆழ்ந்தார். ஆனால் அவரை விலக்கி விட்டு விருந்து நடப்பதென்பது நினைக்கக் கூடாதது. எனவே மன்னருடன் பேசிச் சரிக்கட்ட நினைத்தார். அவர் விஷயத்தை ஆரம்பித்த போதே மன்னர் முகம் கோபத்தால் சிவந்தது.

"என்ன?......என் அதிகாரிகளையெல்லாம் தாக்கிய இந்தக் கலகக்காரப் பிச்சைக்காரனை அரண்மனைக்குள் விடுவதா?" என்று ஸர் ஸாமுவேல்ஹோரைப் பார்த்துச் சீறினார். சிறிது நேரத்துக்குப் பின் கோபம் தணிந்து முணுமுணுப்பாக மாறியது.

வாய் விட்டுச் சொல்லாவிட்டாலும், காந்திஜியை அனுமதிப்பதை மன்னர் ஏற்றுக் கொண்டு விட்டார். அழைப்பு அனுப்பப்பட்டது. கூடவே "உடையை மாற்றிக் கொண்டால் தேவலை" என்று நாசூக்காகவும் அவர் காதில் ஓதப்பட்டது. வெகு கண்யத்துடன் காந்திஜி நிபந்தனையை மறுத்தார். ஹோர் அதற்குப் பணிய வேண்டியதாயிற்று.

குறிப்பிட்ட நாளன்று பக்கிங்காம் அரண்மனை நோக்கி மோட்டாரில் சென்றார் காந்திஜி. ஸரோஜினி நாயுடுவும் மஹாதேவ தேசாயும் உடன் சென்றனர்.

சுமார் 500 விருந்தினர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். இந்தியப் பிரதிநிதிகள் மட்டும் 89. பிரிட்டிஷ் இந்தியாவிலிருந்து 57, சமஸ்தானங்களிலிருந்து 16, சட்டசபையிலிருந்து அரசாங்கக் கட்சியும் எதிர்க்கட்சியும் சேர்ந்து 16. இந்த விருந்துக்கு இளவரசர் (பின்காலத்தில் வின்ட்ஸர் கோமகன்) லிவர்பூலிலிருந்து லண்டனுக்குப் பறந்து வந்திருந்தார்.

அரண்மனை வாசலுக்கு வெளியே பெருங் கூட்டம் வெகு நேரம் முன்னதாகவே கூடி விட்டது. பகல் 'பனிச்'

என்று இருந்தது. காந்திஜிதான் கடைசியாக அரண்மனைக்குள் நுழைந்த விருந்தினர். அவரைக் கண்டதும், ஏராளமான இந்தியர்கள் எழுந்து நின்று மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

அரண்மனை வாயிலுக்குள் நுழைந்ததும், வாயிற்காப்பாளர்கள் தற்செயலாக நிகழ்ந்ததோ என்று எண்ணும்படி, நிமிர்ந்து நின்று மரியாதை செய்தனர். இப்படிச் செய்யும் மரியாதை ராஜகுடும்பத்தினர்களுக்குத்தான் உரியது. 'பக்கிரி'களுக்கு அல்ல.

ஏற்கனவே வந்திருந்த விருந்தினர்களெல்லாம் மன்னருக்கும் ராணிக்கும் அறிமுகம் செய்யப்பட்டு விட்டபடியால், காந்திஜி அவர்களுக்கு அறிமுகம் செய்யப்படுவதைக் காண மற்றவர்கள் ஆவலாக நெருங்கி நெருங்கி வந்தனர். குதிரைப் படை போலீஸ் அதிகாரிகள் அவர்களிடையே வழி உண்டாக்கி, காந்திஜி சிவப்பு ஜமக்காளம் வேயப்பட்ட படிக்கட்டுகள் வழியே சிரமமின்றிச் செல்ல ஏற்பாடு செய்தனர்.


ஸர் ஸாமுவேல் ஹோர்தான் காந்திஜியை மன்னருக்கு அறிமுகம் செய்வித்தார். ஒரு நிமிஷம் மன்னரின் அதிருப்தி அவர் முகத்தில் கடுகடுத்தது. 'இந்தியாவில் பிரிட்டிஷ் அரசாட்சிக்குச் சாவு மணி அடித்துக் கல்லறையின் மேலே போர்த்தச் சல்லாத் துணி நெய்யும் ஒருவனை விருந்தாளியாக எப்படி வரவேற்பது!'

சற்று நேரத்தில் நிதானத்தை வரவழைத்துக் கொண்டு, கைகுலுக்கி விட்டு எல்லோரையும் வரவேற்று முன் மண்டபத்தை விட்டு விருந்து மண்டபத்துக்குச் சென்றனர் மன்னர் தம்பதிகள்.

மன்னர் எல்லோருடனும் கலகலப்பாகப் பேசிக்கொண்டிருந்தார். முதலில் ஸர் அக்பர் ஹைதரியுடன் சில நிமிஷங்கள் பேசி விட்டு, பிறகு மைசூர் திவான் ஸர் மிர்ஸா இஸ்மெயிலுடனும், அதன்பின் பரோடா திவான் ஸர் வி. டி. கிருஷ்ணமாச்சாரியுடனும் பேசினார். அடுத்ததாகக் காந்திஜியுடன் பேசவேண்டும்.

“ஆடம்பரமாகக்கறுப்பு உடை அணிந்த பிரபுக்களுக்கிடையே வழி ஏற்படுத்திக் கொண்டு மன்னர் காந்திஜியை நோக்கிச் சென்றது என்றும் காணாத ஒரு புதுமையாக இருந்தது” என்று அந்தச் சந்தர்ப்பத்தைப் பற்றிக் கூட்டத்தில் இருந்த இளவரசர் கூறுகிறார். ஒன்பது ஆண்டுகளுக்கு முன்புதான் இதே மனிதரை ராஜத் துவேஷத்துக்காகக் கைது செய்தார்கள் என்பதை அவரால் கொஞ்சமும் நம்ப முடியவில்லை.

சம்பிரதாய முறை வணக்கங்களுக்குப் பின், “முப்பது வருஷங்களுக்குமுன் தென் ஆப்பிரிக்காவில் உங்களைச் சந்தித்தபோது நீங்கள் 'நல்ல' மனிதராக இருந்தீர்கள். 1919-க்குப் பிறகு உங்களிடம் ஏதோ 'கோளாறு' ஏற்பட்டு விட்டது” என்று மன்னர் கூறினார்.



புது தில்லி இந்திய சர்க்கார் செய்தி விளம்பர இலாக்கா நடத்திய கண்காட்சியில் பம்பாய் கமர்ஷியல் பிரிண்டிங் பிரஸ், அச்சுக் கலைக்கான பரிசைப் பெற்றது. பாரதப் பிரதமர் நேருவிடமிருந்து ஜெனரல் மானேஜர் திரு எஸ். ராமு பரிசு பெறும் காட்சியைப் படத்தில் காணலாம்.

காந்திஜி இதற்கு ஒன்றும் பதிலளிக்காமல் வெகு கண்ணியத்துடன் மௌனமாகவே இருந்து விட்டார்.

பிறகு “மிஸ்டர் காந்தி! எதற்காக என் மகன் இந்தியா வந்தபோது அவனைப் பகிஷ்காரம் செய்தீர்கள்?” என்று மேலும் ஒரு கேள்வியைப் போட்டார் மன்னர்.

“இல்லை, ஐயா! உங்கள் மகன் என்பதற்காக நான் அவரைப் பகிஷ்காரம் செய்யவில்லை. பிரிட்டிஷ் முடியாட்சியின் பிரதிநிதி என்பதற்காகவே அவரைப் பகிஷ்காரம் செய்தேன்” என்று காந்திஜி அவருக்குப் பதிலளித்தார்.

அவரை விட்டு விலகிச் செல்லப் புறப்பட்ட மன்னர் இறுதியாகக் காந்திஜிக்கு ஒரு எச்சரிக்கை செய்வது நல்லது என்று எண்ணி, “மிஸ்டர் காந்தி! கவனத்தில் வைத்துக் கொள்ளுங்கள். எனது சாம்ராஜ்யத்தின்மீது எவ்விதத் தாக்குதலையும் என்னால் அனுமதிக்க முடியாது” என்று கூறினார். நின்று கொண்டிருந்த ஸர் ஸாமுவேல் ஹோர் அவர்களுக்கிடையே ஏதாவது எக்கச்சக்கமாக வாக்குவாதம் நடக்கப் போகிறதே என்று பயந்தார்.

ஆனால் காந்திஜியோ பணிவுடன், “மாட்சிமை தங்கிய உங்கள் விருந்தோம்பலை ஏற்றுக் கொண்டு உங்கள் மாளிகைக்குள்ளேயே அரசியல் விவாதத்தில் என்னை ஈடுபடுத்துவதை நான் விரும்பவில்லை” என்று பதிலளித்து விட்டார். நிலைமை வெகு நாசுக்காகச் சமாளிக்கப்பட்டது. மன்னர் அவ்விடம் விட்டு ஸர் தேஜ்பகதூர் ஸப்ருவிடம் பேசப் போய்விட்டார்.

காந்திஜியுடன் மன்னர் ஐந்து நிமிஷங்கள் பேசினார். மன்னரின் எளிமைக் குணமும் காந்திஜியின் பண்பட்ட நடத்தையும்தான் அன்றையச் சந்திப்பை வெற்றிகரமாகச் செய்தன என்று ஸர் ஸாமுவேல் ஹோர் நிம்மதியடைந்தார்.



ஸ்ரீ ஷண்முகானந்தா
பைன் ஆர்ட்ஸ் & சங்கீத சபா (Regd.)
292, பீளாங்க் ரோடு - - பம்பாய்—22

★

சபாவின் கட்டிட நிதிக்காக - சங்கீத, நடன விழா - 1959
நிகழ்ச்சி நிரல் (D. V.)

6-2-59 வெள்ளி மாலை 7 மணிக்கு	ஸ்ரீ தியாகராஜ பூஜை	
	சபாவின் சங்கீத வித்யாலய மாணவர்கள்	... பாட்டு
இரவு 8 மணிக்கு	ஏ. கே. ஸி. நடராஜன் & பார்ட்டி	... கிளாரினெட்
7-2-59 சனி மாலை 6 மணிக்கு	இசை விழா ஆரம்பம்	
மாலை 6-30 மணிக்கு	செம்பை வைத்தியநாத பாகவதர்	... பாட்டு
	டி. என். கிருஷ்ணன்	... வயலின்
	பாலக்காடு டி. எஸ். மணி அய்யர்	... மிருதங்கம்
	புதுக்கோட்டை சுவாமிநாத பிள்ளை	... கஞ்சிரா
8-2-59 ஞாயிறு மாலை 6 மணிக்கு	எம். எஸ். சுப்புலக்ஷ்மி	... பாட்டு
	ஆர். கே. வெங்கட்ராம சாஸ்திரி	... வயலின்
	வி. நாகராஜன்	... மிருதங்கம்
	உமையாள்புரம் கோதண்டராம அய்யர்	... கடம்
9-2-59 திங்கள் இரவு 8 மணிக்கு	ஹிந்துஸ்தானி சங்கீதம்	
	பிஸ்மில்லா கான்	... ஷெஹனாய்
	வி. ஜி. ஜாக்	... வயலின்
10-2-59 செவ்வாய் இரவு 8 மணிக்கு	ஆலத்தூர் சகோதரர்கள்	... பாட்டு
	டி. என். கிருஷ்ணன்	... வயலின்
	பாலக்காடு டி. எஸ். மணி அய்யர்	... மிருதங்கம்
	புதுக்கோட்டை சுவாமிநாத பிள்ளை	... கஞ்சிரா
11-2-59 புதன் இரவு 8 மணிக்கு	ஜி. என். பாலசுப்பிரமணியம்	... பாட்டு
	லால்குடி ஜெயராமன்	... வயலின்
	பழனி சுப்ரமணிய பிள்ளை	... மிருதங்கம்
	உமையாள்புரம் கோதண்டராம அய்யர்	... கடம்
12-2-59 வியாழன் இரவு 8 மணிக்கு	மதுரை மணி அய்யர்	... பாட்டு
	லால்குடி ஜெயராமன்	... வயலின்
	பழனி சுப்ரமணிய பிள்ளை	... மிருதங்கம்
	உமையாள்புரம் கோதண்டராம அய்யர்	... கடம்
13-2-59 வெள்ளி இரவு 8 மணிக்கு	ராமநாதபுரம் கிருஷ்ணன்	... பாட்டு
	லால்குடி ஜெயராமன்	... வயலின்
	ராமனுதபுரம் முருகபூபதி	... மிருதங்கம்
14-2-59 & 15-2-59 மாலை 6-30 மணிக்கு	கமலா லக்ஷ்மண் & ராதா	... நடனம்
16-2-59 திங்கள் இரவு 8 மணிக்கு	எம்பார் விஜயராகவாச்சாரியார் & பார்ட்டி	... ஹரிகதை
17-2-59 செவ்வாய் இரவு 8 மணிக்கு	கல்யாண கிருஷ்ண பாகவதர்	} ஜோடி வீணை
	தேவகோட்டை நாராயண அய்யங்கார்	
	காரைக்குடி முத்து அய்யர்	... மிருதங்கம்
18-2-59 & 19-2-59 இரவு 8 மணிக்கு	பத்மினி & ராகினி	... நடனம்
20-2-59 வெள்ளி இரவு 8 மணிக்கு	எம். எல். வசந்தகுமாரி	... பாட்டு
	திருவள்ளூர் சுப்ரமணிய பிள்ளை	... வயலின்
	தஞ்சாவூர் கிருஷ்ணமூர்த்தி ராவ்	... மிருதங்கம்
	டி. எஸ். வில்வாத்ரி அய்யர்	... கடம்
21-2-59 & 22-2-59 மாலை 6-30 மணிக்கு	வைஜயந்திமாலா & பார்ட்டி	... நடனம்

கிங்ஸ் சர்க்கிள் ரயில்வே ஸ்டேஷன் சமீபமுள்ள சபா கட்டிடத்தில் நடைபெறும்

சீஸன் டிக்கட்டுகள்

அங்கத்தினர் ரூ. 100, 80, 35, 18, 12 - விருந்தினர் ரூ. 100, 90, 40, 22, 15

கதம்பக் கவிமலர்கள்



1. திருமண விருந்து

புங்கனூர் முழுவதும் அந்தத் திருமணத்தின் சிறப்பைப் பற்றித்தான் பேசிக் கொண்டிருந்தார்கள். ஊரிலேயே பெரிய செல்வர் வீட்டுத் திருமணம் அது. 'புங்கனூர்க் கிழவன்' என்றால் அந்தச் சுற்றுப்புறத்து ஊர்களில் ஈடில்லாத செல்வாக்கு இருந்தது. செல்வமும் செல்வாக்கும் ஒருங்கே பெற்ற ஒருவர் வீட்டில் நடைபெறும் திருமணம் எவ்வளவு பிரமாதமாக நடக்குமோ, அவ்வளவு பிரமாதம் புங்கனூர்க் கிழவன் வீட்டுத் திருமணத்திலும் இருந்தது.

வீட்டு வாயிலில் தெருவையெல்லாம் அடைத்தாற் போல் பெரிய பந்தல், வாழை மரங்கள், மாவிலைத் தோரணங்கள், உட்காரத் தூய்மையாகப் புது மணல் தூவிய தரை, புதுப் பாய்கள் விரித்த திண்ணை - எல்லா ஏற்பாடுகளும் அமர்க்களமாயிருந்தன. இரட்டை மேளம், இரட்டை நாகசுரம், இன்னொலி பரப்பிக் கொண்டிருந்தது. உறவினர்களும், நண்பர்களும் பழகினவர்களுமாகத் திருமண வீட்டில் கூட்டம் திருவிழாப் போலக் கூடியிருந்தது. வந்தோர்க்கெல்லாம் வரையாமல் வழங்கும் வள்ளலாகையால் திருமண விருந்து உண்பதற்குப் பந்தலிலும் திண்ணையிலுமாகப் பெருங் கூட்டம் காத்திருந்தது.

திண்ணையில் விரித்திருந்த பாயில் உட்கார்ந்திருந்தவர்களில் ஒரு ஏழைப் புலவரும் இருந்தார். அவர் திருமணத்துக்கு வந்திருந்தாலும் யாரும் கவனிப்பாரன்றிப் பசியோடு இருந்தார். எல்லோரும்தான் பசியோடு இருந்தார்கள். ஆனால் புலவருக்கு எல்லோரைக் காட்டிலும் அதிகமான பசி. காலையில் எதுவும் உண்ணாமல் வந்திருந்தார். பார்த்த அளவிலேயே புலவர் என்று சொல்லிவிடத் தக்க தோற்றம் அவருக்கு. கையில் ஏடும் எழுத்தாணியும் சேர்த்துக் கட்டி வைத்துக் கொண்டிருக்கும் சுவடிக் கட்டைப் பார்த்தாலே இவர் புலவராகத் தான் இருக்க வேண்டுமென்று கூறிவிட முடியும்.

பசியோடும், சிந்தனைகளோடும் சோர்ந்து போய் உட்கார்ந்திருந்த புலவரை ஏனென்று கேட்க ஆளில்லை. ஆரவாரம், கோலாகலம், சிரிப்பு, கேலிப் பேச்சுக்கள், கும்மாளம்—எல்லாம் சுற்றி யிருந்தன. சந்தனமும், அகிற்புகையும் மணத்தன. புலவருடைய மனம் மணக்கவில்லை. வயிறு மணக்கவில்லை. திருமணத்துக்கு வந்திருந்த எல்லோரும் வீட்டிலிருந்தவர்களால் வரவேற்கப்பட்டார்கள். "சாப்பிட்டீர்களா? சாப்பிடுகிறீர்களா? தாம்பூலம் வாங்கிக் கொண்டீர்களா?" என்றெல்லாம் தணிவான குரல்களால் அன்போடு விசாரிக்கப்பட்டார்கள்.

திண்ணையில் பாயில் உட்கார்ந்திருந்த அந்தப் புலவரை மட்டும் யாரும் விசாரிக்கவில்லை. அழையா விருந்து போல், அநாதை போல், உட்கார்ந்துகொண் டிருந்தார் அவர்.

காதை அடைக்கிற பசி. கண்கள் பஞ்சடைகிற போன்ற நிலை. 'கொஞ்சம் தண்ணீரையாவது கேட்டு வாங்கிக் குடிப்போம்'—என்ற எண்ணத்துடன் சந்தனமும் தாம்பூலமும் கொடுத்துக் கொண்டிருந்த ஒரு இளைஞனைக் கூப்பிட்டு, "தம்பி! குடிப்பதற்குக் கொஞ்சம் தண்ணீர் கொடு. தாகம் நாவை வறட்டுகிறது" எனக் கேட்டார் புலவர். அந்த இளைஞனுக்கு அவர் அவ்வளவு கூட்டத்துக்கு நடுவில் 'தம்பி' என்று கூப்பிட்டது பிடிக்கவில்லை. அவன் புலவரைப் பார்த்து அலட்சியமாக முகத்தைச் சுளித்தான். ஏழைமையைக் கண்டால் தான் மோழையும் பாயுமே! புலமை உள்ளம் கொதித்தது. தன் அறிவு வேண்டுமென்றே புறக்கணிக்கப்படுவதாகத் தெரிந்தால் எந்த அறிவாளியும் உலகத்தின் முகத்தில் கரி பூசத் தயங்க மாட்டான். வயிற்றுக்கு இல்லையே என்பது கூடப் பெரிய கவலை இல்லை புலவருக்கு. வள்ளல், குபேரன், கருணைக் கடல் என்று புகழ் பெற்ற புங்கனூர்க் கிழவன் வீட்டில் ஒரு தமிழ்ப் புலவனை 'வா' வென்று வரவேற்க ஆளில்லை. அவன் வாய் விட்டு மனம் விட்டுக் கேட்ட பின்னும் இலட்சியம் செய்து ஒரு குவளைப் பச்சைத் தண்ணீர் கொடுக்க அங்கு ஆளில்லை.

ஆத்திரத்தோடு புலவன் நினைத்தான்:—

"என்னுடைய வெறும் வார்த்தையை இங்கே கேட்பாரில்லை. கவனிப்பாரில்லை. இந்தத் திருமண வீட்டில் கூடியிருக்கும் ஆயிரக்கணக்கான விருந்தினர்களும், வீட்டுக்குரியவனும் என்னையே நினைத்துப் பதறும் படி செய்ய என் வார்த்தைகளுக்கு ஆற்றல் உண்டா, இல்லையா என்று பார்க்கிறேன். என்னை ஒரு மனிதனாகவே நினைத்துப் பொருட்படுத்தா

மல் இருக்கும் இவர்களை நான் போகுமிடத்துக்குத் தேடிக் கொண்டு ஓடிவரச் செய்கிறேன்.''

அவன் மனதில் வைரம் எழுந்தது. அழகான புங்கனூர். வெண்ணெயைத் திருடியுண்ட குற்றத்துக்காக யசோதையிடம் அடி வாங்கிக் கொண்டு, கையிலிருக்கும் திருட்டு வெண்ணெயையும், தாயின் சினம் மிக்க கண்களையும், தன் உடம்பில் அடிபட்ட புண்களையும் மாறி மாறி மருண்டு நோக்கும் கண்ணன் (திருமால்) கோவில் கொண்டிருக்கும் ஊர். அதற்கெல்லாம் ஒன்றும் குறைவில்லை. அப்படிப்பட்ட இந்த ஊரில் புங்கனூர்க் கிழவனின் வயல்களில் சேல் மீனும், கயல் மீனும் துள்ளிக் குதிக்கும் அத்தனை நீர்வளம் இருக்கிறது. ஆமாம்! நீர்வளம் வயலிலும், குளத்திலும்தான். இங்கே ஒரு குவளை நீர் கொடுக்க மனிதர் இல்லை. திண்ணை இருக்கிறது; விரித்த பாய் இருக்கிறது. பிறரைக் கவனிக்காத அலட்சிய மனம் நிறைந்த மனிதர்கள் இருக்கிறார்கள். கல்யாணத்துக்கென்று வந்த என் போன்ற ஏழைப் புலவனுக்குப் பசி வயிற்றைப் புரட்டுகிறது. உடம்பு குரக்குவாதம் பிடித்தது போல் வசம் இழக்கிறது. பிரமாதமான இந்தத் திருமணத்தின் சிறப்பான அம்சம் ஒரு புலவனின் வயிற்றுப் பசி.''



பங்களூர் லைப் இன்ஷியூரன்ஸ் கார்ப்பரேஷன் கிளை மானேஜர் திரு என். சுவாமிநாதனின் புதல்வர் திரு எஸ். நீலகண்டன் அமெரிக்காவில் பெத்லஹம் இரும்புத் தொழிற்சாலையில் பயிற்சிபெற்று இந்தியா திரும்பினார். அவர் ரூர்கேலா இரும்புத் தொழிற்சாலையில் பணியாற்றப் போகிறார்.

சிந்தித்த பின் முகத்தில் உறுதி ஒளிர, உடலில் தெம்பு பாயக் கையிலிருந்த சுவடியைப் பிரித்து ஏடும் எழுத்தாணியும் எடுத்தான் புலவன். சிரித்துக் கொண்டே எழுத்தாணியால் ஏட்டில் எதையோ எழுதினான். திண்ணையில் இருந்த மாடப் பிறையில் எல்லோர் கண்களிலும் படும் படியாக அந்த ஏட்டை வைத்தான். யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் தெருவில் இறங்கி நடந்து விட்டான்.

அவன் போன கால் நாழிகைக் கெல்லாம் கல்யாண வீடு அமளி துமளிப் பட்டது. மூலைக்கு மூலை கூட்டம் கூடிப் பேசிக்கொண்டு நின்றார்கள்.

"எவனோ புலவனாம். கோபத்தில் ஏதோ வசைப் பாடல் எழுதி வைத்து விட்டுப் போய் விட்டானாம். புலவன் வாக்குப் பலிக்காமற் போகாதாம். அமங்கலமாக ஏதாவது நடந்துவிடக் கூடாதே'' என்று எல்லோரும் பயந்தார்கள். சிறிது நேரத்துக்குமுன் எந்த மனிதனுடைய வார்த்தை ஒரு குவளைத் தண்ணீருக்காக அலட்சியப்படுத்தப் பட்டதோ அந்த மனிதனுடைய பாட்டில் இருந்த வார்த்தைகள் கல்யாண வீட்டிலேயே கலவரத்தையுண்டாக்கி விட்டிருந்தன. வீட்டுக்குத் தலைவனான புங்கனூர்க் கிழவனே அந்த ஓலையை வைத்துக் கொண்டு பயந்து போய் நின்றான்.

"ஐயோ! யாராவது ஒருவர் அந்தப் புலவனைக் கவனித்து உபசாரம் செய்திருக்கக் கூடாதா? இப்படி அமங்கலச் சொல் அமையப் பாடி வைத்து விட்டானே. இதன் விளைவு என்ன ஆகுமோ? அறிவாளியின் கண்ணீர் உலகத்தை அழிக்கும் பிரளய வெள்ளமாயிற்றே. என்வீட்டிலா இப்படி நடக்கவேண்டும்! 'புங்கனூர்க் கிழவன் திருமணத்தில் தமிழ்ப் புலவனை அவமதித்தான்' என்று தலைமுறை தலைமுறையாக இலக்கியத்தில் நிலைத்து விடுமே இந்தப் பழி?'' — என்று கிழவன் மனம் நொந்து பரிதாபமாகக் கதறினான்.

கதறி என்ன செய்ய? அந்த வள்ளல் கதறிக் கொண்டிருந்த அதே சமயத்தில் அப்புலவன் ஆற்றங்கரையில் தண்ணீர் குடித்துவிட்டு உடலின் தாகத்தைத் தணித்துக் கொண்டும் அவமானப்பட்டு வெந்த நெஞ்சின் தாகம் தணியாமல் நடந்து கொண்டிருந்தான். வயிற்றில் பசியிருந்தாலும், கண்களில் ஒளி பஞ்சடைத்திருந்தாலும், கால்கள் நடக்க முடியாமல் தள்ளாடினாலும் அவன் உள்ளத்தில் ஒரு பெருமிதம் ஏற்பட்டது!

"நான் புலவன்! என் துன்பங்களை இலக்கியமாக்க என்னால் முடியும். நான் வயிற்றுக்காக வாய் திறந்து கேட்டால் அவமானம். ஆனால் பாடுவதற்காக வாய் திறந்தால் உலகத்தையே கட்டி வைத்து உதைக்கிற தெம்பு உண்டு எனக்கு.''

அந்தத் தெம்பில் புங்கனூர் வள்ளல் வீட்டில், ஓலையில் எழுதி வைத்த பாட்டை மறுபடியும் வாய் விட்டுப் பாடிக் கொண்டே நடந்தான் அவன்.

வெண்ணெயும் பார்த்து அன்னை கண்ணையும் பார்த்துத்
தன் மெய்யிற்பட்ட
புண்ணையும் பார்த்தருள் நெடுமால் புங்கனூர்க் கிழவன்
பண்ணையும் சேலுகளுந் தடத்தின் கயல்பாயு நெடுந்
திண்ணையும் கெண்டைபுரட்டும் கல்யாணத்திற்
சென்றவர்க்கே.

(பெருந்தொகை-1620)

(கெண்டை புரட்டுதலாவது-பசி மயக்கத்தில் வயிற்றில் ஏற்படும் குரக்கு வலிப்புப் போன்றதோர் வேதனை.)

— வளவன்



லிப்கோ

குறைந்த விலைச் சிறு பதிப்புகள்

சுவை மிக்க தமிழ்ப் பெரு நூல்களின் சுருக்கங்கள் (கையடக்க அளவில்)



1 வள்ளுவர் வாய்மொழி (குறள் மூலம்)
2 பொய்யாமொழிக்குப் பொழிப்புரை
3 வள்ளுவர் வகுத்த வழி (குறள் விளக்கம்)
4 வள்ளுவர் காட்டிய ஏர்
5 வள்ளுவர் கண்ட காதலர்
6 வள்ளுவர் காட்டிய இல்லறம்
7 நாலடியார் (மூலம்)
8 நாலடியார் (தெளிவுரை)
9 பிற்கால நீதி நூல்கள் (மூலம்)
10 கடையெழு வள்ளல்கள்
11 இலக்கியச் சோலையிலே
12 பாரதியும் பைந்தமிழும்
13 வருக! வாழ்க! (அழைப்பும் வாழ்த்தும்)
14 சிலப்பதிகாரம்
15 சிலப்பதிகாரப் பெண்டிர்
16 மணிமேகலை
17 சீவக சிந்தாமணி
18 நளவெண்பா (மூலம்)
19 நளவெண்பா (சுருக்கம்)
20 அரிச்சந்திர புராணம்
21 குசேலோபாக்கியானம்
22 பன்னிரு ஆழ்வார்கள்
23 சூடிக்கொடுத்த சுடர்க் கொடி
24 திருவிளையாடற் புராணம்
25 பெரிய புராணம்
26 திருஞானசம்பந்தர்
27 திருநாவுக்கரசர்
28 சுந்தரர்
29 மாணிக்கவாசகர்
30-36 கம்பரது இராமாயணம் (7 நூல்கள்)
37-41 வில்லிபுத்தூராரின் மகா பாரதம் (5 நூல்கள்)
42 சில தனிப்பாடற் காட்சிகள்
43-44 கந்த புராணம் (2 நூல்கள்)
45 குமரேச சதகம் (மூலம்)
46 வளையாபதி
47 குண்டலகேசி
48 சுந்தரர்
49 பட்டினத்து அடிகள்
50 தாயுமான அடிகள்
51 இராமலிங்க அடிகள்
52 தசாவதாரம்
53 கம்பன் கண்ட பிரகலாதன்
54 தெய்வத் திருமணங்கள்
55 பழந்தமிழ்க் காதல் காட்சிகள்
56 தோத்திரத் திருப்புகழ்
57-59 சுகர் சொன்ன கதை - பாகவதம் (3 நூல்கள்)
60 பாரதியார் பாடல்கள் - சில பொறுக்கு மணிகள்
61 அறப்பளீசுர சதகம் (மூலம்)
62 ஈசன் அருள் பெற்ற இளங்கன்றுகள்
63 புத்தி தரும் பக்தி தரும் சக்தி தரும் முக்தி தரும் புராணக் கதைகள்
64 மணிவாசகரும் மணிவாசகமும்


நூல் நிலையங்களுக்கேற்ற 'லிப்கோ'வின் பிற புத்தக விவரங்களுக்கு எழுதுக.

தி லிட்டில் ஃப்ளவர் கம்பெனி, சென்னை-17; எம். தாமோதரம் & கம்பெனி அப்பா பில்டிங்ஸ், சென்னை - 1; எஸ். கிருஷ்ணஸ்வாமி & கம்பெனி, தெப்பக்குளம், திருச்சி-2; எம். நடனசுந்தரம் பிரதர்ஸ், புது மண்டபம், மதுரை; ஏ. கே. சந்திரய்ய செட்டியார், கோட்டை, சேலம்-1; வி. ஆர். நடராஜன் & ஸன், கோயமுத்தூர்; கவிஞர் பதிப்பகம், 241, ராஜ வீதி, கோயமுத்தூர்; எஸ். எம். ஜெகநாதம், நாகர்கோவில்; ஹிக்கின் பாதம்ஸ் (பிரைவேட்) லிமிடெட், மௌண்ட் ரோடு, சென்னை - 2; ரெயில்வே ஸ்டால்கள்; மற்றும் அநேக புத்தகக் கடைகள்.

★ லிப்கோ நடமாடும் புத்தக 'வான்'களிலும் கிடைக்கும்.



ஒவ்வொன்றின் விலை அணா 4 தான்!



காந்தி மகான் இன்று இருந்தால்....

எம். ஆர். மஸானி எம். பி.

இன்று மத்திய கேந்திரத்திலும், பர்மா, பாகிஸ்தான், சூடான் முதலிய நாடுகளிலும் நடைபெறும் ராணுவ ஆட்சியைப் பற்றி யோசிக்க வேண்டும். அங்கு ராணுவ அதிகாரிகளின் பதவி வெறி காரணமாகத்தான் சர்வாதிகார ஆட்சி ஏற்பட்டது என்று சொல்லிவிட முடியுமா? அதற்கு முன் அந்நாடுகளில் நிலவிய சூழ்நிலையைச் சற்று அறிந்தவர்கள், அவ்விதம் கருதுவது தவறு என்று சொல்வார்கள். அங்கு வேறு காரணங்கள் நிலவின. அத்தகைய அடிப்படைக் காரணங்கள் நம் நாட்டிலும் நிலவவில்லையா என்பதை நாம் இங்கு யோசிக்கவேண்டும்.

அந்நாடுகளில் முதலில் தெய்வபக்தியும் தார்மீகப் பண்பும் மிகமிகக் கேவலமான நிலையை அடைந்து விட்டன. இந்த நிலை நம் நாட்டிலும் ஏற்பட்டு வருகிறது. நமது அரசியல் நிர்ணயச் சட்டம் நமது அரசாங்கம் மதச்சார்பற்ற அரசாங்கம் என்றுதான் சொல்லுகிறது. ஆனால் நம்மில் பலர், அதை மதவிரோத, மத எதிர்ப்பு அரசாங்கம் என்று எண்ணிக் கொள்கின்றனர். நமது ஜனாதிபதி கோவில்களுக்குச் சென்றால், மதச் சடங்குகள் செய்தால் நம் நாட்டில் சிலர் கேலி செய்கின்றனர்; கண்டிக்கின்றனர். நமது சட்டத்துக்கு மாறுபட்டது என்று எண்ணுகின்றனர். இது எந்த நாட்டிலும் நடைபெறாத அதிசயம். மேற்கத்திய கிறிஸ்தவ நாடுகளில், ஜனாதிபதி என்றால், பிரதம மந்திரி என்றால் அவர் நல்ல கிறிஸ்துவ மத அபிமானி என்றுதான் மக்கள் நினைக்கின்றனர். அவர் அப்படியிருப்பது பற்றி யாரும் குறையாகக் கருதுவதில்லை. ஆனால் நம் நாட்டிலோ, ஒருவர் தாம் பிறந்தமதத்தின் ஆசார அனுஷ்டானங்களைக் கடைப்பிடித்தால் ஏதோ சந்தேகக் கண் கொண்டு பார்க்கின்றனர். இன்று காந்தி நம்மிடையிருந்தால் இதைப் பற்றி எவ்வளவோ சொல்வார்!



அதைப் போலவே, நமது சோஷலிஸபாணி சமுதாயத்தைப் பற்றியும் அவருக்கு ஏராளமாகச் சொல்ல வேண்டியிருக்கும். எல்லோருடைய வாழ்க்கையும் சமமாக இன்பம் அளிக்கும்படியும், எல்லோருக்கும் சம்பாதிக்கச் சம உத்தியோக வாய்ப்பு உண்டாகும்படியும் ஒரு சமுதாயத்தை நிறுவினால் எல்லோரும் மகிழ்ச்சியுடன் வரவேற்பார்கள் ஆனால், வாழ்வின் மிகத் தேவையான பொருள்களை இழந்து விட்டு, தனி நபரின் வருமானம் பெருகி விட்டதாகப் புள்ளி விவரக் கணக்கு காட்டுவதால் என்ன பயன்! கூட்டுறவு விவசாயம் என்று, தனி மனிதனின் சுதந்திரத்தைப் பறித்து அடிமையாக்கும் முறைகளைக் கைக்கொள்வதால் என்ன பயன்? மொத்தத்தில் சோஷலிஸம், கூட்டுறவு என்று சொல்லிக்கொண்டு மக்களிடையே வர்க்க பேதத்தையும், பிளவையும் உண்டாக்கி வருகிறோம். இவற்றைக் காந்திஜி தம் வாழ்நாள் முழுதும் கண்டித்து வந்தார்.

கடைசியாக, ஆனால் முக்கியமாகக் குறிப்பிட வேண்டிய விஷயம் ஒழுங்கீனம். கல்லூரி மாணவர்களிடையே எவ்வளவு ஒழுங்கீனம் நிலவுகிறது. தொழிலாளரிடை எவ்வளவு ஒழுங்கீனம். தொழிலாளர் தலைவர்கள் நியாயமற்ற வேலை நிறுத்தங்கள் நடத்தி விட்டு, பின்னர் அதற்கு ஒரு தண்டனையுமின்றி நாட்டில் திரிகிறார்கள். சட்டசபைகளில் மட்டும் என்ன? சபாநாயகர் ஒரு முடிவு தெரிவித்தால் அங்கத்தினர்கள் அதற்கு மரியாதை செலுத்திப் பணிவதை விட்டு, 'வாக்அவுட்' செய்து வெளியேறுகிறார்கள்! காந்திமகான் அடிமை புணர்ச்சியும் ஒழுங்கீனமும் ஒன்றே எனச் சொல்லி வந்தார். உள்ளத்தில் தைரியமில்லாத கோழையே ஒழுங்கீனமான காரியங்களில், காலித்தனங்களில் ஈடுபடுவான் என்றார். காந்திமகான் தம் உள்ளத்தில் அளவுகடந்த ஒழுக்கமும் தர்மபலமும் பெற்றிருந்ததால், புரட்சி வீரர்களில் சிறந்த புரட்சி வீரராக விளங்கினார். ஆனால் நியாயமான ஒழுக்கம் நிலவாத நாட்டில் பலாத்கார ஒழுக்கம் தானாகவே வந்து சேருகிறது; சர்வாதிகார ஆட்சி ஏற்படுகிறது.

இத்தகைய இன்றைய நிலையில் நம்மிடையே காந்திஜி இருந்தால் நம்மை என்ன செய்யச் சொல்வார் என்று யோசித்துப் பார்க்க வேண்டும்.


ஆனால் அவர் என்ன சொல்வார் என்று நினைப்பதும் கஷ்டம். சமீபத்தில் ஆசாரிய கிருபளானி எழுதிய கட்டுரையில் பின்வருமாறு சொல்கிறார்: "பாபு ஒரு மகான். மேதாவி. அவரை எந்தச் சட்ட திட்டங்களும் கட்டுப்படுத்

தாது. அவரே வகுத்துக் கொண்ட சட்டதிட்டங்கள்கூட அவரைக் கட்டுப்படுத்தாது. அவருக்கு அருகில் இருந்தவர்களுக்கெல்லாம் அவர் நடத்தை புரியாத புதிராகவே விளங்கியது!'' இந்நிலையில் அவர் என்ன சொல்லியிருப்பார் என்று சற்றுத் தயக்கத்துடனேயே ஊகிக்க வேண்டியிருக்கிறது. மேலும், 'இப்படிச் சொல்லியிருக்க மாட்டார். இதற்கு மாறாகத்தான் சொல்லியிருப்பார்' என்று சுலபமாக வாதித்து விடவும் கூடும். எனினும் அவர் என்ன சொல்லியிருப்பார் என்று ஊகிப்பதற்கு முயல்கிறேன்.

காந்திஜி மூன்று விஷயங்கள் நமக்குச் சொல்லியிருப்பார் என்று சொல்லத் தோன்றுகிறது. முதலில் உண்மையைப் பேசுங்கள். கசப்பாக இருந்தாலும் உண்மையையே பேசுங்கள் என்று சொல்லியிருப்பார். இன்றுள்ள நிலையில், சுபிட்சத்துக்குக் குறுக்கு வழி இருக்கிறது என்ற அபத்தப் பேச்சைச் சகித்துக்கொண்டிருப்பார் என்று தோன்றவில்லை. ஒரு தேசம் சுபிட்சமடையக் குறுக்குவழியே கிடையாது. மேற்கத்திய நாடுகளில் மக்கள் அடைந்துள்ள சுபிட்ச நிலையை அடைய நம் மக்கள் பல தலைமுறைகள் பொறுமையாகப் பாடுபட்டால் தான் முடியும். நமது கிராம மக்களின் வாழ்வை எந்த 'இஸமும்' மாயமந்திரம் செய்து சுபிட்சமாக்கி விடமுடியாது. இந்த உண்மையை மக்களிடம் பகிரங்கமாகச் சொல்லி விடும்படி காந்திமகான் வற்புறுத்தி யிருப்பார். இப்படிச் சொல்வது சுலபம் என்பதற்காக அல்ல. நம் நாட்டுப் பாமர மக்கள் அறிவாளிகள். உண்மையைச் சொன்னால் புரிந்து கொள்வார்கள் என்ற நம்பிக்கை காந்திஜிக்கு உண்டு. இப்படிச் சொன்னால் நம் மக்கள் ஜனநாயக வாழ்க்கை முறையைத் தூர எறிந்துவிட்டு அராஜக வழியில் ஈடுபடலாம் என்று நம் தலைவர்கள் நினைக்கிறார்கள். காந்தி மகான் என்றைக்கும் அப்படி நினைத்திருக்க மாட்டார்.

இரண்டாவதாக காந்திஜி மக்களைத் தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ளும்படி சொல்லி யிருப்பார். எந்தக் காரியத்துக்கும் சர்க்காரை எதிர்பார்க்க வேண்டாம் என்று சொல்லி யிருப்பார். ''மக்கள் ஒன்றும் செய்யாமல், மக்களுக்கு வேண்டியவற்றையெல்லாம் சர்க்காரே செய்தால் அது ஜனநாயகமல்ல என்று காந்திஜி கருதினார்'' என்கிறார் பியாரேலால். நான் மக்கள் சபை அங்கத்தினன். அங்கு மக்களுக்கு வேண்டிய சட்டங்கள் செய்யப்படுகின்றன. அவை எவ்வளவு அலட்சியமாக, எவ்வளவு துரிதமாக எவ்வித விவாதமுமின்றிச் செய்யப்படுகின்றன தெரியுமா! இதைப் பார்க்கும் போது ஒரே பிரமிப்புத்தான் உண்டாகிறது. இதைக் காந்திஜி பார்த்தால் சற்றும் அங்கீகரிக்க மாட்டார்.

சுயராஜ்யம் என்பது வெள்ளை அதிகார வர்க்கத்தை நீக்கிவிட்டுக் கறுப்பு அதிகார வர்க்கத்தை ஏற்படுத்துவதல்ல என்று காந்திஜி சொன்னது ஞாபகம் வருகிறது.



கான்பூர், ராணுவப் பாதுகாப்பு இலாக்கா ஆராய்ச்சிக் கழகத்தைச் சேர்ந்த டாக்டர் வி. ரங்கநாதன் அவர்களின் புதல்விகள் சீதாவும் ஜானகியும் பம்பாய்த் தமிழ்ச் சங்கத்தில் சென்ற 14-1-59 பொங்கல் தினத்தன்று, நாட்டிய விருந்தளித்துப் பம்பாய்த் தமிழரை மகிழ்வித்தார்கள். அவர்கள் பரத நாட்டியம் ஆடியதுடன், கதகளி நடனமும் ஆடி மகிழ்வித்ததை மேலே படத்தில் காணலாம். பம்பாய்த் தமிழர்களின் பாராட்டுதலைப் பெற்ற இக் குழந்தைகள் நடனக் கலையில் மேலும் புகழும் சிறப்பும் அடைவார்கள் என்பதில் என்ன சந்தேகம்?

நாம் இட்டம் நிறைவேற்றுகிற முறையையும், சோஷலிஸம் ஏற்படுத்தும் வகையையும் பார்த்தால், காந்திமகான் வேண்டாம் என்று சொன்ன ஆட்சியை ஏற்படுத்துவதில்தான் முனைந்திருக்கிறோம் போல் தோன்றுகிறது. கறுப்பு அதிகார வர்க்கத்தை ஏற்படுத்தி விடுவோம் போல் தோன்றுகிறது. காந்தி மகான் ஒரு முறை நமது ரிஸர்வ் பாங்கியில் சேரும் பணத்தை நமது கிராமங்களில் விநியோகம் செய்ய வேண்டும் என்று சொன்னது ஞாபகம் வருகிறது. இதை அப்படியே செய்ய வேண்டும் என்பதற்காக அவர் சொல்லவில்லை. நமது கிராம மக்களின் பொருளாதார நிலை உயர வேண்டும் என்பதற்காகச் சொன்னார். இன்று நாளுக்கு நாள் பலம் பெருகி வரும் மத்திய சர்க்காரை எதிர்த்து நிற்கக்கூடிய சக்தி கிராம மக்களிடம் இருக்கும் என்றுதான் சொன்னார். இன்று அவர் இருந்தால், ராஜ்யங்களின் உரிமைகளைப் பாதுகாப்பவராக விளங்குவார்.

கடைசியாக, நம் அயல் நாட்டுக் கொள்கையைப் பற்றிக் காந்திஜி என்ன சொல்வார்? ''உங்கள் உள்ளத்தில் ஒளியைச் செலுத்திஆராயுங்கள்'' என்றுதான் சொல்வார். அதையொட்டி, ''அண்டை அயல் நாடுகள் சிலவற்றின் குற்றங் குறைகளை ஒரு சமயம் கண்டித்தும், மற்றவைகளைக் கண்டிக்காமலும் இருப்பதை விட, நமது குற்றங் குறைகளையெல்லாம் ஆராய்ந்து களையப் பாடுபடுவோம்'' என்றுதான் சொல்லி யிருப்பார்.

மட்டையடி மகோற்சவம்

மார்கழி தை மாதங்களில், 'காலையில் எழுந்திரு' என்றால் எழுந்திருக்க மனம் வராது. ஆனால் கிரிக்கெட் பந்தயமென்றால் காலையில் நாலு மணிக்கே கட்டுச் சாத மூட்டையுடன் பெரியவர்களும், சிறியவர்களும், ஏன், பெண்மணிகளும் கூட, சாரிசாரியாகச் செல்லும் காட்சியைக் காண்கிறோம். ஏதோ பெரும் திருவிழாவுக்குக் கூடும் கூட்டம் போல் ஸ்டேடியம் மைதானத்தில் மக்கள் கூடுவதைப் பார்க்கிறோம். அவ்வளவு தூரம் கிரிக்கெட் மக்களைக் கவர்ந்துள்ளது.

எத்தனையோ பேர்கள் தலைவலி, ஜுரம், காய்ச்சல் என்று லீவு போட வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தாமல், சென்னையிலுள்ள பல சர்க்கார் காரியாலயங்களும் பள்ளிக்கூடங்களும் ஆபீசுகளும் முன் கூட்டியே அவர்களுக்கு லீவு கொடுக்க முன் வந்து விட்டன!

மேற்கிந்தியத்தீவுகளிலிருந்து கிரிக்கெட் கோஷ்டியினர் இந்தியாவுக்கு விஜயம் செய்து இந்திய கிரிக்கெட் குழுவினரைத் திணற அடித்து வருகிறார்கள் என்பதை யறிந்ததும், அவர்கள் விளையாட்டைப் பார்க்கத் திரளாக மக்கள் கூடியிருந்ததில் வியப்பென்ன? ஸ்டேடியம் மைதானத்துக்கு நுழைவுச் சீட்டின் கட்டணத்தை எவ்வளவு உயர்த்தினால்தான் என்ன? இல்லை, டிபன், சாப்பாடு வசதிகள் ஸ்டேடியம் மைதானத்தில் கிடைக்காமலிருந்தால் தான் என்ன? அடாது கட்டணத்தை உயர்த்தினாலும், வசதியைக் குறைத்தாலும் விடாது விளையாட்டுக்கு வந்திருந்தார்கள் மக்கள்.

இந்திய கிரிக்கெட் கோஷ்டியில் காப்டன் நியமிக்கும் விஷயத்தில் தகராறு எழுந்த போது, மன்காட் ஆபத்பாந்தவனாகக் காப்டன் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். காப்டன் பதவிக்கு உகந்தவர் என்பதை அவர் முதல் இன்னிங்கிலே நான்கு விக்கெட்டுகளை வீழ்த்தி நிரூபித்தார்.

திறமை மிக்க மேற்கிந்திய கிரிக்கெட் குழுவினரை யெல்லாம் நமது கேலிச் சித்திரக்காரர் சாமா தமது சித்திர வலைக்குள் சிக்க வைத்துவிட்டார். இந்தக் கேலிச் சித்திரங்களைப் பார்த்து விளையாட்டுக்காரர்கள் ஒருவருக்கொருவர் சிரித்துக் கொம்மாளமடித்தனர். அதைக் கண்டு பந்து வீசும் நிபுணர் கில்கிரஸ்ட் தம் முகத்தை மூடிக்கொண்டு தப்பியோட முயன்றார். ஆனால் அவரையும் இந்தப் படத்துக்குள் கொண்டு வந்து விட்டார் திரு சாமா. மேற்கிந்திய கிரிக்கெட் குழுவினரின் படங்களை எதிர்ப்பக்கத்தில் பார்க்கலாம்.

—குண்டுமணி

---

1. பார்க்கிகாஸ்கின், 2. ராம்தின், 3. சோபர்ஸ், 4. கில்கிரஸ்ட், 5. புச்சர், 6. அலெக்ஸாண்டர் (காப்டன்) 7. கன்ஹாய், 8. ஹால், 9. ஸ்மித், 10. ஹோல்ட், 11. சாலமன், 12. ஹண்ட், 13. அட்கின்சன், 14. கிப்ஸ்.



மட்டையடி
மகோற்சவம்
1
2
3
4
5
6
7
8
9
10
Wes Hall
12
13
14

நாடக விழா

மேடையில் நடிகர்கள் தோன்றி நடிக்கும் நாடகங்களைப் பார்ப்பதற்கும் ரேடியோவில் நாடகங்களைக் கேட்பதற்கும் அடிப்படையில் வித்தியாசம் இருக்கிறது. நாடக அமைப்பாளர்கள் ரேடியோ நாடகங்களைத் தயாரித்து ஒலிபரப்பும் போது மேடையை அடியோடு மறந்துவிடுவது நல்லது. மேடையில் பார்த்தால் எப்படியிருக்கும் என்பதை விட்டு ரேடியோவில் கேட்பவர்களுக்கு எப்படித் தொனிக்கும் என்பதில் கவனம் செலுத்தவேண்டும்.

மேடையில் நடிகர்கள் முக பாவங்களாலும் அங்க அசைவுகளாலும் உணர்ச்சிகளை வெளிக் கொணருகிறார்கள். ஆனால் ரேடியோவில் உருவத்தைக் காண்பதில்லை நாம். பேச்சிலேயே உணர்ச்சி இருக்க வேண்டும். பாவம் மிளிர வேண்டும். மிகக் கடினமான இந்தக் காரியத்தில் வெற்றி படைத்தது 'நெஞ்சின் அலைகள்.'

பொங்கல் திருநாளன்று தொடங்கி ஒரு வாரம் சென்னை அகில இந்திய ரேடியோ நிலையத்தினர் நாடக விழாவைக் கொண்டாடினார்கள். இரண்டு நாடகங்கள் ரசிகர்களின் முன்னிலையில் நடைபெற்றன. மற்றவை ரேடியோ நிலையத்திலேயே நடந்த நிகழ்ச்சிகள். சென்னை நிலையத்தின் நாடகத் தயாரிப்பாளர் திரு அ. ச. ஞானசம்பந்தம் அவர்களும் பல வேறு நாடகக் குழுவினரும் ஒத்துழைத்து இந்நாடகங்களை ஒலிபரப்பினார்கள்.

கவி குஞ்சர பாரதியின் கந்த புராணத்திலிருந்து தொகுக்கப் பெற்று, திரு ஜி. என். பி. அவர்களுடைய தயாரிப்பாக ஒலிபரப்பப்பட்ட 'செந்தமிழ்க்கந்தன்' என்ற இசை நாடகம் நாடக விழாவில் முதல் இடத்தைப்பெற்று விழா களைகட்ட உதவியது.

இரண்டாவது நாடகம் 'நெஞ்சின் அலைகள்'. அகிலன் அவர்களுடைய நாடகம் நன்றாயிருந்தது என்றால் சர்க்கரை இனிக்கிறது என்று சொல்வதைப்போலத் தான். அதை விட்டு விட்டு நடிகர்களை எடுத்துக் கொண்டாலும் ஒரே உணர்ச்சிமயமான நாடகத்தை நன்றாகத் தெளிவாக அழகாகப் பாவத்துடன் பேசி வெற்றி பெற்று விட்டார்கள் எனலாம். இந்நாடகத்தின் ஒலி அமைப்பைப் பற்றி அவசியம் குறிப்பிடவேண்டும். ரங்கூனில் விமானங்கள் குண்டு வீசும் ஒலி, கானகத்தில் கேட்கும் ஒலி, தெருவில் கேட்கும் ஒலி இவற்றில் கவனம் செலுத்தியிருப்பது நாடகத்துக்கு மெருகு கொடுத்தன. சுமார் ஒன்றரை மணிநேரம் போனதே தெரியாமல் நல்ல விறுவிறுப்புடன் அமைந்திருந்தது.

ஹாஸ்ய நாடகங்கள் மேடையில் பார்த்து அனுபவிப்பதுபோல் ரேடியோவில் சோபிப்பதில்லை. மேடையில் ஹாஸ்ய நடிகரின் உருவத்தையும் சேஷ்டைகளையும் கண்டே நாம் சிரிப்போம். ரேடியோவில் வார்த்தைகளிலே ஹாஸ்யத்தைக் கொண்டுவர வேண்டும்.

யுனைடெட் அமெச்சூர் ஆர்டிஸ்ட்ஸாரின் 'பாலைவனத்தில் பாலாறு'வில் கதையம்சம் குறைவாயிருந்ததுடன் ஆங்கில வார்த்தைகள் அலுப்புத் தட்டும் வகையில் அதிகமாயிருந்தன. நாடகத்தின் ஆரம்பம், வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கும் ஒரு ஹாஸ்யத் தமிழ்த் திரைப்படத்தை நினைவூட்டியது. ஸ்புட்னிக் ஹாஸ்யம் சமயோசிதமாகவும் அந்தச் சந்தர்ப்பத்தில் நிஜமாகவே 'குபீர்'ச் சிரிப்பை வரவழைப்பதாகவும் இருந்தது:

காதலன்: சந்திரனையாவது தூது விடக் கூடாதோ? உடனே ஓடி வந்திருப்பேனே?

காதலி: இன்று தான் அமாவாசையாயிற்றே. சந்திரனுக்கு எங்கே போவது?

காதலன்: இப்போதுதான் ஒன்றுக்கு மூன்றாகச் சந்திரன்கள் பவனி வருகிறார்களே? ஒன்று கூடவா உனக்கு அகப்படாமல் போய் விட்டது?

'புகழ் வழி'யில் பிரமாதத்தின் நடிப்பு பிரமாதம்தான். திரு வி. ஆர். ராஜகோபாலின் நடிப்பை ரசிகர்கள் சிரித்தும் கைதட்டியும் வரவேற்று ரேடியோவில் கேட்பவர்களுக்குக் கொஞ்சம் இடைஞ்சலை உண்டு பண்ணி விட்டார்கள்.

டாக்டராகித் தொண்டு புரியவேண்டும் என்ற லட்சியத்துக்கும் சினிமா நட்சத்திரமாகிப் புகழடைய வேண்டும் என்ற ஆசைக்கும் நடக்கும் போராட்டம்தான் 'புகழ்வழி'. 'குகன்' அவர்களின் வசனம் கருத்துடன் நன்றாக இருந்தது:

"டாக்டருடைய புகழ் கோபுரத்தைப் போல உயர்ந்துவிடும் இல்லையா?"

"ஏன் உன் உள்ளத்தைப் போல் என்று தான் சொல்வேன்!"

சேவா ஸ்டேஜ் குழுவினரின் இந்நாடகத்தில் ரோஜாவைக் காக்கும் முள்ளாகத் தோன்றிக் கடைசி வரையில் தம்முடைய நல்ல பெயரையும் பாதுகாத்துக் கொண்டார் திரு எஸ். வி. சகஸ்ரநாமம்.

தோட்டக்கார விசுவநாதன் எழுதிய கதம்ப நிகழ்ச்சியும் ரசிகர்களின் முன்னிலையில் நடிக்கப் பெற்றது. கே. ஏ. தங்கவேலு என்ற பெயரை ஒலி பரப்பிய உடனேயே உற்சாகமாகக் கையைத்தட்டி ஆரவாரம் செய்வதைக் கேட்ட பின்னர் சொல்வதற்கு என்ன இருக்கிறது. தங்கவேலுவின் சேஷ்டைகள் நேரில் பார்ப்போரை மகிழ்வித்திருக்கலாம். ரேடியோவில் கேட்கப் பித்துப் பிடித்த அசட்டு மாப்பிள்ளையாக நடித்தது அசட்டுத்தனமாகத்தான் இருந்தது. வேறு எப்படி இருக்க முடியும்?


இந்தக் கதம்ப நிகழ்ச்சியில் ஹாஸ்ய நடிகர் சிவதாணு குழுவினரும் பங்கு எடுத்துக் கொண்டனர். அவருடைய

குழுவினரின நடிப்பில் துவஸ்யம் இருந்ததோ இல்லையோ! கையில் நாடகப் பிரதியை வைத்துக் கொண்டு, நடிப்புக்கும் பேச்சுக்கும் இடையே பெரும் போர் நிகழ்த்திப் 'போர்' அடித்து விட்டார்கள். ரசிகர்கள் ரேடியோ நாடகத்தில் கேட்கக் கூடிய உணர்ச்சிப்பேச்சுக்களையும் கேட்கவில்லை. பார்ப்பவர்கள் சிவதாணுவின் நல்ல நடிப்பையும் பார்க்க முடியவில்லை என்பது நேரில் பார்த்து விட்டு வந்தவர்களின் அபிப்பிராயம்.

டி. கே. எஸ். சகோதரர்களின் 'சிமந்தனி' விழாவில் கடைசி நாடகம். திரு சங்கரதாஸ் சுவாமிகள் இயற்றியது. நாடகங்களிலே உரைநடை அதிகமாகப் புகுத்தப்படாத பழங்காலத்தில் எழுதப்பட்டது. வசனங்கள் குறைவாகவும் பாடல்களே அதிகமாகவும் இருந்தன. பழங்காலத்து நாடக பாணியை இந்தத் தலைமுறையினருக்கு எடுத்துக் காட்டுவதாக அமைந்திருந்தது. சீர்காழி கோவிந்தராஜன், டி. வி. ரத்னம் ஆகிய பிரபல பின்னணிப் பாடகர்கள் இந்த நாடகத்தில் பங்கு கொண்டு செவிக்கு இனிமையான விருந்தளித்தார்கள்.

மொத்தத்தில் ரேடியோ நாடக விழா ஒரு நல்ல முயற்சி. அகில இந்திய ரேடியோவைப் பெருவாரியான மக்கள் அலட்சியம் செய்து விட்டு இலங்கை வானொலி வர்த்தக ஒலிபரப்பையே அதிகமாகக் கேட்கிறார்கள் என்ற குறையை நிவர்த்திக்க இதுபோன்ற இன்னும் பல நிகழ்ச்சிகள் பெருதவி புரியும் என்பது நிச்சயம்.


அருகேயுள்ளபடத்தில் ரேடியோ நாடக விழாவில் பங்கு பற்றியவர்களின் புகைப்படங்கள் சிலவற்றைக் காணலாம்.













1. பொங்கல் திருநாளன்று கவிஅரங்கத்தில் பங்கெடுத்துக் கொண்ட கவிஞர்கள். அமைச்சர் பக்தவத்சலம் தலைமை தாங்கினார்.

2. 'நெஞ்சின் அலைகள்' நாடகத்தில் பங்கெடுத்துக் கொண்ட நடிகர்களுடன் அதன் ஆசிரியர் திரு அகிலன்.

3. திரு டி.கே. ஷண்முகம், திரு டி.கே. பகவதி, திரு சீர்காழி கோவிந்தராஜன் திருமதி டி. வி. ரத்தினம் முதலியோர் நிகழ்த்திய இசை நாடகம், சிமந்தனி.

4. "ஏய்! போட்டோ திருடி!" - தங்கவேலு தோன்றியதும் கூடவே சிரிப்பும் தோன்றி விடுகிறது. தோட்டக்கார விசுவநாதனின் குதம்ப நிகழ்ச்சி இது.

5. 'பாலைவனத்தில் பசலை' ஒலி பரப்பப் படுகிறது. ஏம். ஜி. பி., பட்டு, வித்யாவதி முதலியோர்.

6. எஸ். வி. சகஸ்ரநாமம் குழுவினர் 'புகழ் வழியே' நாடகத்தை மயிலை சுந்தரேசுவரர் ஹாலில் ரசிகர்களுக்கு முன்னால் நடித்தனர்.

இளவரசர் விஜயம்

எம்.எஸ்.சிவஸ்வாமி

சுமார் எட்டு வருஷத்துக்குமுன் அது நடந்தது. 1951-ம் ஆண்டு ஜூன் மாதம். இங்கிலாந்தின் கப்பற் படையில் மத்திய தரைக் கடல் பகுதியைச் சார்ந்த எச். எம். எஸ். மாக்பி என்ற கப்பல் மால்டா துறைமுகத்தில் கம்பீரமாக மிதந்து கொண்டிருந்தது. அதற்கு லெப்டினண்ட்-கமாண்டராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார் முப்பது வயதுள்ள பிரிட்டிஷ் அரச குடும்பத்து இளவரசர் பிலிப் என்ற எடின்பரோ கோமகன். இந்தியாவின் கடைசி பிரிட்டிஷ் வைசிராயும் நம் மக்களின் பேரன்புக்குப் பாத்திரருமான லார்ட் மௌண்ட்பாட்டனின் மருமகன்தான் இவர். மாட்சிமை தங்கிய விக்டோரியா மகாராணியின் பெண்வழி வந்த கொள்ளுப் பேரன். அவருடைய நேர் வழிப் பேத்தியான பிரிட்டிஷ் ராணி எலிஜபெத்தின் கணவர்.

மணமாகி நான்கு வருஷங்கள் கழிந்து விட்டிருந்தபோதிலும் தான் ஏற்கனவே பயிற்சி பெற்று அனுபவப்பட்டிருந்த கப்பற் படையில் பணியாற்றுவதை நிறுத்தவில்லை. 1949 அக்டோபரிலிருந்தே மால்டாவில் கப்பற் படையில் தொண்டாற்றிக் கொண்டிருந்தார்.

இந்தச் சந்தர்ப்பத்தில்தான் அவருக்கு ஒரு அழைப்பு வந்தது. பிரிட்டிஷ் விஞ்ஞான வளர்ச்சிக் கழகத்திலிருந்து வந்த அந்த அழைப்பு அக் கழகத்துக்கு எடின்பரோ கோமகனைத் தலைமை தாங்கும் பொறுப்பை ஏற்கும்படி கேட்டுக் கொண்டது. அத்துடன் அந்த வருஷத்திய வருஷாந்தரக் கூட்டத்தில், பிரிட்டிஷ் விஞ்ஞானம் நூறு ஆண்டுகளில் அடைந்த முன்னேற்றத்தைப் பற்றி ஒரு சொற்பொழிவாற்ற வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டது.



எடின்பரோ கோமகன்

மற்றவர்களாக இருந்தால் இதை ஒரு கௌரவ அழைப்பாகக் கருதி, எல்லா ஏற்பாடுகளையும் மற்றவர்களைக் கொண்டு செய்யச் சொல்லிவிட்டு குறிப்பிட்ட தினத்தன்று நிகழ்ச்சிகளை நிறைவேற்றி, திருப்தியடைந்து விடுவர். ஆனால் எடின்பரோ கோமகன் இந்த அழைப்பை அவ்வளவு லேசாகக் கருதவில்லை. டார்ட்மத் கப்பற் படைக் கல்லூரியில் எல்லாத் துறையிலும் வல்லுநர் என்பதற்குரிய பரிசைப் பெற்று, பரீட்சையில் நான்கு பிரிவுகளில் முதன்மையாகத் தேர்வு பெற்று. யுத்த ஆரம்ப காலத்தில் மடாபான் முனைத் தாக்குதலில் வீரத்துடன் போர் புரிந்து போர் அறிக்கைகளில் புகழுடன் பேசப்பட்டுக் கீர்த்தியடைந்திருந்த இளவரசர் அழைப்பை ஏற்றுக் கொண்டு, பிறகு அதற்குச் செய்யவேண்டிய காரியங்களில் தீவிரமாக முனைந்தார்.

அப்போது விஞ்ஞானத்தில் அவருக்கு விசேஷப் பற்று இருந்ததென்று சொல்ல முடியாது. விஞ்ஞான வளர்ச்சியைக் கண்டு பிரமிப்படைந்திருந்தது உண்மைதான். எனினும் ஆராய்ச்சிக் கழகத்துக்குத் தலைமை வகிக்கும் அளவுக்குக் கவனம் செலுத்தவில்லை. அழைப்பை ஏற்றுக் கொண்ட பின்னர்தான் அவர் ஆர்வம் வெளிப்பட்டது.

கப்பல் தளத்தில் அவருடைய அறை முழுதும் விஞ்ஞான வளர்ச்சி பற்றிய புத்தகங்களும் பிரசுரங்களும் குறிப்புக்களும் நிரம்பிக் கிடந்தன. தேவையான புத்தகங்களையெல்லாம் படித்து முடித்தார். "நூறு ஆண்டு விஞ்ஞான முன்னேற்றம் பற்றிச் சாதாரண மனிதனின் கருத்து" என்று ஒரு உரையைத் தயார் செய்தார். எழுதிப் படிப்பதென்பது அவருக்குப் புது அனுபவம்தான். எனினும் ஆழ்ந்த கருத்துக்களையும் நுண்ணிய அறிவையும் விஞ்ஞான நுட்பங்களையும் சாதாரண மக்களுக்கும் எளிதில் புரியும் வகையில் சிறப்பாக ஒரு உரையைத் தயாரித்து அதை 1951-ம் ஆண்டு விஞ்ஞானிகள் சமூகத்தில் படித்தார். இல்லை, அரங்கேற்றினார் என்றே சொல்லலாம்.

விஞ்ஞானிகள் எடின்பரோ கோமகனின் ஆராய்ச்சித் திறனை வியந்தனர். அவர் ஆர்வத்தைப் பாராட்டினர். அவர்கள் காணாததை இவர் என்ன புதுமையாகக் கண்டார் என்று ஐயம் எழக்கூடும். அவருடைய சொற்பொழிவில் புதுமை இருந்தது. விஞ்ஞானிகள் சாதாரணமாகக் காணாத புதுமை, அல்லது காணத் தவறும் உண்மையிருந்தது. அதுதான் விஞ்ஞான வளர்ச்சியுடன் மனிதத் தன்மையும் வளர வேண்டும் என்ற கருத்து. விஞ்ஞான வளர்ச்சியையும் இன்றைய உலகில் விஞ்ஞானத்திற்குள்ள செல்வாக்கையும் மக்களும் விஞ்ஞானிகளும் தெரிந்து கொள்ளல் வேண்டும்,


மனித குலத்தின் நன்மைக்காக விஞ்ஞானம் பயன்படுவதைக் கவனிப்பது நம் போன்ற பிரஜைகளுடைய கடமையாகும். விஞ்ஞானம் மனிதனை அழிக்கப் பயன்படக் கூடாது. மனிதகுலம் நசித்துவிட்டால் விஞ்ஞானத்தால் எவருக்கு என்ன பயன் — இதைத்தான் அவர் வற்புறுத்தினார்.

மனிதனுடைய சுக வாழ்க்கைக்காகவே விஞ்ஞானம் இருக்க வேண்டும். விஞ்ஞான வளர்ச்சிக்காகமட்டும் மனிதன் வாழவேண்டுமென்று இருக்கக் கூடாது என்னும் அடிப்படைக் கருத்தைத்தான் அவர் இடைவிடாது எங்கெல்லாம் சந்தர்ப்பம் கிடைக்கிறதோ அப்போதெல்லாம் சொல்லி வருகிறார்.

அவருடைய சிந்தனை இம்மாதிரி உருவானதற்குக் காரணம் புத்தகப் படிப்பு அல்ல. பாதிரிமார்களிடம் அவர் கற்ற பாடமும் அல்ல. நேரில் அவர் கண்ட காட்சிகளிலிருந்து ஏற்பட்ட உணர்ச்சி. அதைப்பற்றி அவர் வாயிலாகவே கேட்போம்.

"மால்டாவிலுள்ள குடிசைத் தொழில் முதல் பிரிட்டிஷ் கொலம்பியாவிலுள்ள அலுமினிய உருக்குச் சாலை வரையில்பார்த்திருக்கிறேன். நியூஜிலாண்டில் மோட்டார்களை இணைக்கும் தொழில் முதல் நைஜீரியாவில் ரயில் என்ஜின்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை வரையில் பார்த்திருக்கிறேன். இங்கிலாந்தின் வடக்கு பிராந்திய நிலக்கரிச் சுரங்கத்திலிருந்து கனடாவின் மூலையில் ஆர்க்டிக் பிரதேசத்திலுள்ள யுரேனியச் சுரங்கம் வரையில் பார்த்திருக்கிறேன். களிமண், பீங்கான் போன்ற புராதனத் தொழில்கள் முதல் வடக்யூபெக் பகுதியிலுள்ள நூதன உருக்குச் சாலை வரையில் பார்த்திருக்கிறேன். இங்கிலாந்தில் பல தொழில்கள் இயங்கும் மத்தியபிரதேசங்களிலுள்ள தொழிற்சாலை நகரங்களிலிருந்து வேல்ஸ்பகுதியில் ஒரே தொழிலை நம்பியுள்ள சிறு கிராமங்கள் வரையில் பார்த்திருக்கிறேன்.

"முதலில் இவையனைத்தும் எனக்குப் பிரமிப்பைத்தான் உண்டாக்கின. சிறிது சிறிதாகத்தான் இவற்றுக்கிடையே நிலவிய ,மாறுபட்ட சூழ்நிலைகளும், தொழிலாளர் — நிர்வாகத்தினர் பேதங்களும், மாறுபட்ட சமூக வாழ்க்கை முறைகளும் எனக்கு விளங்கத் தொடங்கின. இவைகளை ஒன்று சேர்த்தும் ஒப்பிட்டும் பார்த்துச் சிந்தித்த பிறகே உலகத்தில் எந்தப் பாகத்திலிருந்தாலும் நிலக்கரிச் சுரங்கம் நிலக்கரிச் சுரங்கம்தான், உருக்குச் சாலை உருக்குச் சாலைதான், தொழிற் கூடம் தொழிற் கூடம்தான் என்பதும் அவற்றின் அமைப்பு ஒரேவிதம்தான் என்பதும் விளங்கிற்று."



இங்கிலாந்து அரச குடும்பம். ராணி எலிஸபெத், இளவரசர் பிலிப், அவர்களுடைய புதல்வனும் புதல்வியும்.

இவற்றிலிருந்து அவருக்கு விஞ்ஞானத்தின் உண்மை சொரூபமும் அதனால் ஏற்படும் நன்மை தீமைகளும் விளங்கலாயிற்று. அதையும் அவர் வாயிலாகவே கேட்போம்.

"விஞ்ஞான வளர்ச்சிக்கு இரண்டு வகையில் முக்யத்வம் உண்டு. ஒன்று சுத்த விஞ்ஞானத்தின் அபிவிருத்தி. இது இப்போதெல்லாம் பிரமிக்கத்தக்கவாறு பல துறைகளில் வளர்ந்திருக்கிறது. மற்றொன்று இதனால் உண்டாகும் நன்மை. நம்முடைய விஞ்ஞான அறிவைக்கொண்டு பசியிலிருந்தும், பிணியிலிருந்தும், பயத்திலிருந்தும், நிராசையிலிருந்தும் உலகத்தை, உலக மக்களை விடுவிக்கலாம்

அல்லது உயிரினங்களின் பூண்டே உலகில் இல்லாதபடி அழித்தும் விடலாம்.

''இவ்விரண்டுக்கும் விஞ்ஞானத்தில் வாய்ப்பிருக்கிறது. இதை ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுள்ள விஞ்ஞானிகளும், புதுக் கண்டு பிடிப்பாளர்களும், விஞ்ஞானக் குழுவினர்களும், சாதாரண மக்களும் நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

மானிடவர்க்கத்தின் முன்னேற்றம் எல்லாத் துறையிலுமே விஞ்ஞானிகளின் இடைவிடாத முயற்சியினால்தான் நிகழுகிறது. நாட்டின் செல்வமும் செழிப்பும் எவ்வளவு தூரம் எந்த முறையில் விஞ்ஞானத்தின் வளர்ச்சி தொழிலுக்குப் பயன்படுத்தப்படுகிறது என்பதைப் பொறுத்தே இருக்கிறது. நாட்டின் மக்கள் தங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ளவும், வாழ்க்கை வசதிகளைப் பெருக்கிக் கொள்ளவும் விஞ்ஞானத்தின் சாதனையை நம்பியிருக்கின்றனர். யுத்த காலத்தில் நாம் உயிருடன் மீளுவதுகூட விஞ்ஞானிகள் கூட்டத்தின் திறமையையும் சிறப்பையும் பொருத்திருக்கிறது.



ஒன்றரை வயதுக் குழந்தை பிலிப்

''எனவே ஆராய்ச்சி விஞ்ஞானிகளுக்கு இரண்டு பொறுப்புகள் உள்ளன; ஒன்று விஞ்ஞானி என்ற முறையில் அவருடைய ஆராய்ச்சியின் வளர்ச்சி. மற்றொன்று நன்மை தீமைகளை உணர்ந்த பிரஜை என்ற முறையில் விஞ்ஞானத்தின் முன்னேற்றத்தை உணர்ந்து அதைச் சரிவரப் பயன்படுத்த விளக்கி வைப்பது.

''விஞ்ஞானத்தை மானிடவர்க்கத்தின் நலனுக்காகவே உபயோகப்படுத்த வேண்டும் என்று பார்த்துக் கொள்வது ஒவ்வொரு பிரஜையின் கடமை. மனிதன் உயிருடன் வாழ முடியாவிட்டால் விஞ்ஞானத்தினால் யாது பயன்?''

இப்படித்தான் அவருடைய மனிதாபிமானமும் மானிட உணர்ச்சியும் வளர்ந்து வந்துள்ளன. தொழில் முன்னேற்றமும் விஞ்ஞான முன்னேற்றமும் வேகமாக அபிவிருத்தி யடைவதைக் காணும்போதெல்லாம் அவருடைய கனிந்த உள்ளமும் பண்பாடும் இவற்றை மனித நலத்துக்கும் மனித இன்பத்துக்கும் எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதிலேயே நாடுகின்றன.

காமன்வெல்த் நாடுகளில் எல்லாப் பகுதிகளுக்கும் சென்றிருக்கிறார். அங்கங்கேயுள்ள விஞ்ஞான வளர்ச்சிக் கழகங்களுக்கும் ஸ்தாபனங்களுக்கும் சென்று விஞ்ஞானிகளுடன் தொடர்பு கொண்டிருக்கிறார். இப்போது இந்தியாவுக்கு வந்திருக்கிறார். இந்திய விஞ்ஞான வளர்ச்சிக் கழகங்களுக்கும் ஸ்தாபனங்களுக்கும் சென்று விஞ்ஞானிகளுடன் தொடர்பு கொண்டிருக்கிறார்.

இந்திய விஞ்ஞான காங்கிரஸ் கூட்டத்தில் கலந்துகொண்டு, பிறகு சென்னை வந்து, பெங்களூரிலுள்ள விஞ்ஞானக் கழகத்துக்கும் விஜயம் செய்கிறார். சுதந்திரமடைந்த பின் நமது பாரதம் விஞ்ஞானத் துறையில் அடைந்துள்ள முன்னேற்றத்தை நேரில் காணும் வாய்ப்பு அவருக்கு இப்போது கிடைத்திருக்கிறது. பாரதத்துக்கு அவர் விஜயம் செய்வது இதுதான் முதல் தடவை. ஆகவே காமன்வெல்த் உறவு நாடுகளின் முன்னேற்றத்தில் இந்தியாவைப் பற்றி இது வரையில் நேரடியாகத் தெரிந்து கொள்ளாதவைகளை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிந்து கொள்ளுவார் என்று எதிர்பார்க்கலாம். அதன் மூலம் இந்திய விஞ்ஞானிகளும் பிரிட்டிஷ் விஞ்ஞானிகளும் எவ்வாறு ஒருவருக்கொருவர் ஒத்துழைத்து மனித சமூகத்தின் முன்னேற்றத்துக்கு வழிகாணலாம் என்பதைப் பற்றியும் ஆலோசிக்க இடமிருக்கிறது.

பாரதத்துக்கு விஜயம் செய்த பிரிட்டிஷ் மன்னர்கள் வரிசை நீண்டது. ஆனால் முன் நிகழ்ந்த விஜயங்களுக்கும் இப்போது எடின்பரோ கோமகனின் விஜயத்துக்கும் ஒரு வித்தியாசம் உண்டு. ராணியாரே வந்தால் வார்த்தைகளையும் கருத்துக்களையும் மனம் விட்டுச் சொல்ல முடியாது. சட்டத்தின் கீழ் அவருடைய சுதந்திரம் வரையறை செய்யப்பட்டுள்ளது. ராணியின் கணவராகிய இவருக்குச் செல்வாக்கும் அந்தஸ்தும் உண்டு. அவற்றுடன் தம் கருத்தை வெளியிடும் சுதந்திரமும் படைத்தவர். அரச வம்சத்துப் பிரதிநிதியாகவும், பிரிட்டிஷ் விஞ்ஞான வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் என்ற முறையிலும் இளவரசர் பிலிப் செய்யும் விஜயம் இந்த வருஷத்தியச் சம்பவங்களில் மிகவும் முக்கியமானது.

ராம்தீர்த் யோகாஸ்ரமத்தின் சில செயல்கள்



SHRI YOGIRAJ UMESHCHANDRAJI



ராம்தீர்த் பிராமி ஆயில் - ஸ்பெஷல் ரூ. 1

கூந்தல் தைலம், மூளைக்கு ஔஷதம், கண்களுக்கும் ஞாபக சக்திக்கும், ஆழ்ந்த நித்திரைக்கும் உடல் வலியைப் போக்குவதிலும், **ராம்தீர்த் பிராமி ஆயில்** யாவருக்கும், எக்காலத்தும் உகந்தது. கிடைத்தற்கரிய பலவித மூலிகைகளினால் விஞ்ஞான முறையில் தயாரிக்கப்பட்ட **ராம்தீர்த் பிராமி ஆயில்** இப்பொழுது எல்லா இடங்களிலும் புதிய பாட்டிலில் கிடைக்கிறது.

பெரிய பாட்டில் விலை ரூ. 4/-; சிறியது ரூ. 2/-

எங்கும் கிடைக்கும்

பலவித உன்னத மூலிகைகளினும் ராம்தீர்த் பிரம்மி எண்ணெய் விஞ்ஞான முறையில் தயாரிக்கப்பட்டது

யோகாசன வரைவு படம்

ஆரோக்யமாகவும், திடமாகவும் திகழ யோகாசனங்களை விவரிக்கும் எமது அழகான ஆசனப் படத்திற்கு எழுதுங்கள். ரூ. 2.50 மணியார்டர் அனுப்பி இப்படத்தைப் பெற்றுக்கொள்ளலாம். வீட்டிலிருந்தே ஆசனங்களைச் சுலபமாகப் பழகலாம்.

யோகாசன வகுப்புகள்: காலை 7-30லிருந்து 9-30 மணி வரையிலும், மாலையில் 6-லிருந்து 7-30 மணி வரையிலும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. பிரதி ஞாயிறுதோறும் காலை 10 மணிக்கு யோகாசன சொற்பொழிவுகள் உண்டு.

ஸ்ரீ ராம்தீர்த் யோகாஷ்ரமம்

Phone: 62896 தாதர் - சென்ட்ரல் ரயில்வே - பம்பாய் -14 Grams: PRANAYAM, Dadar - Bombay

சென்னை டெப்போ: 4/441, தங்கசாலைத் தெரு, சென்னை - 3


தரத்திற்கும்
உறுதிக்கும்
நிகரற்றது
ஹத்திபாயின்
தராசு மார்க்
ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்
பாத்திரங்கள்
உத்திரவாதமுள்ளவை
எப்பொழுதும் பிரகாசத்துடன் நீடித்து உழைப்பவை
ஹத்திபாய் துளஸிதாஸ் & ஸன்ஸ்
122, கன்ஸரா சால், பம்பாய் 2.

சூடு கண்டவர்

— எஸ். லட்சுமி சுப்பிரமணியம் —

“இந்தப் பவுன் சங்கிலியைப் பார்த்தீர்களா?” என்று குழந்தை ஜயத்தின் கழுத்திலிருந்த சங்கிலியைக் காட்டினுள் என் மனைவி.

“ஏது?” என்று கேட்டு வைத்தேன்.

“புதிதாகச் செய்தார்களாம்! பவுன் வாங்கிக் கொடுத்து வீட்டிலேயே செய்தது. இரண்டு பவுனுக்குக் கொஞ்சம் கூட இருக்கலாம், அவ்வளவுதான். நன்ருக இல்லை?” என்று கேட்டாள்.

தலையை ஆட்டி விட்டு வாசற்புறம் நோயாளிகளைக் கவனிக்கப் போய் விட்டேன். சாம்பசிவத்தின் பெண் அந்தக் குழந்தை. அவர் மனைவிக்கு இரண்டு மாதங்களுக்கு முன்னுல் நான்தான் வைத்தியம் செய்தேன். ‘பில்’ அறுபது ரூபாய் ஆகியிருந்தது. பையனிடம் முப்பது ரூபாய் கொடுத்து அனுப்பினுர். அவ்வளவுதான்; அதற்குப் பிறகு தெருவில் என்னைக் கண்டாலே பார்க்காதது போல் போய்க்கொண்டிருந்தார். பையனை அனுப்பினுல் ‘வீட்டில் இல்லை’ என்று பதில் வந்து கொண்டிருந்தது.

வைத்தியச் செலவுக்கு மனமாரப் பணம் கொடுப்பது சிரமந்தான். அதுவும் இருநூறு ரூபாய் வருவாய் உள்ள நடுத்தரக் குடும்பத்தில் அறுபது ரூபாய் டாக்டர் பில் என்பது சமாளிக்க முடியாதுதான். அதை நினைத்து நானே குறைவாகத்தான் ‘பில்’ போட்டு அனுப்பினேன். அவர் கொஞ்சம் கொஞ்சமாகப் பணத்தை அனுப்பி யிருக்கலாம். பணம் இல்லையானுல் பவுன் சங்கிலி மட்டும் எப்படிச் செய்யமுடிந்தது? என்னுடைய கடனைத் தீர்ப்பது அவருக்கு அவசியமாகப் படவில்லை. ஒரு வேளை என்னை மறுபடியும் பார்க்க வேண்டிய அவசியம் இராது என்று நினைத்தாரோ, என்னவோ?

கண்ணெதிரே அவர் என்னை ஏமாற்றிக்கொண்டிருப்பதைப் பார்த்தபோது ஆத்திரம் குமுறிக் கொண்டு வந்தது. குழந்தையின் கழுத்தில் சங்கிலியைப் பார்த்தபோது மனத்தில் வெறுப்பின் கசப்பு படிந்தது. என்ன மனிதர் இவர்?

சாம்பசிவத்தை நான் மறுபடியும் பணம் கேட்டு அனுப்பவில்லை. ‘அவருக்கு மனம் இருந்தால் கொடுக்கட்டும்; இல்லையானுல் தேவையில்லை. ஆனுல் அவர் வீட்டுக்கு இனிமேல் வைத்தியம் செய்யப் போவதில்லை’ என்று மனத்துக்குள் தீர்மானித்துக் கொண்டேன்.

குழந்தை ஜயம் எங்களோடு ஒட்டிப் பழகியவள். அனேகமாக மாலை நேரங்களில் பள்ளிக்கூடம் விட்டதும் எங்கள் வீட்டுக்கு வந்து விடுவாள். என் மனைவிக்கு அவள் பேச்சும் விளையாட்டும் அலுக்காத பொழுதுபோக்கு. கடவுள் எங்களுக்கு இன்னும் அந்தப் பேற்றை அளிக்கவில்லை.

ஒரு மாதம் ஆகி யிருக்கும். இரவு மணி எட்டு. சாப்பிட்டு விட்டு முன்பக்கத்து அறையில் உட்கார்ந்து எழுதிக் கொண்டிருந்தேன். வாசற் கதவை யாரோ தட்டும் சத்தம் கேட்டது. அவள் உள்ளே வேலை செய்து கொண்டிருந்தாள். பையன் வீட்டுக்குப் போய் விட்டான். நானே எழுந்து போய்த் திறந்தேன். கதவைத் திறந்ததும் ஒரு கணம் தயங்கியபடி நின்றேன். கதவைத் தட்டியவர் சாம்பசிவம்தான்! முகத்தைச் சுளித்துக் கொண்டேன். அவர் என்சாண் உடலும், ஒரு சாணுகக் குறுகி நின்ருர். அவர் முகத்தில் வேதனை ஒரு பக்கமும், என்னை ஏமாற்றிச் சமாளிக்க நினைத்து என்னிடமே வந்து நிற்க நேர்ந்ததை உணர்ந்து ஏற்பட்ட கூச்சம் மற்ருெரு பக்கமும் நிழலிட்டன. அவர்தான் முதலில் பேசினுர்:

“சார்! அவசரம். கொஞ்சம் வீட்டுக்கு வருகிறீர்களா?”

“எதற்கு?” என் குரலில் அவ்வளவு கடுமை எப்படி வந்தது என்று எனக்கே தெரியவில்லை.

“சார்! .. குழந்தை ... ஜயத்துக்கு இரண்டு நாளாக ஜுரம்...இப்போது உடம்பு அனலாகக் கொதிக்கிறது... பிதற்ற ஆரம்பித்து விட்டாள்...”

நான் வைராக்கியத்தோடு செய்து கொண்ட சபதத்துக்குக் கடவுள் இவ்வளவு சீக்கிரம் ஒருசோதனையை அனுப்பி வைப்பாரென்று நான் நினைக்கவில்லை. குழந்தைக்கு உடம்பு சரியில்லை என்று கேட்டதும் என் மனம் என்னை யறியாமலேயே வேதனைப்பட்டது. உறுதி தளர்ந்தது. பதில் பேசாமல் உள்ளே போய்ச் சட்டையை மாட்டிக்கொண்டு மருந்துப் பையும், ஸ்டெதாஸ்கோப்புமாகப் புறப்பட்டுவிட்டேன்.

அவர் முன்னுல் போய்க் கொண்டிருந்தார். அவர் காலடியின் நிழலே போன்று என் கால் செருப்பொலி. என் மனம் குழந்தையின் மேல்கொண்ட பற்றுதலுக்கும், சாம்பசிவத்தின்மேல் இருந்த

வெறுப்புக்கும் நடுவே ஊசலாடிக்கொண்டிருந்தது. "வைத்தியம் செய்யத்தான் வேண்டும். ஆனால் பணத்தை வாங்கிக் கொண்டு விடவேண்டும். முன்பாகவே கேட்டுவிட வேண்டும். ஒரு கொள்கைக்காகவாவது அவர் நம் பொறுப்பை உணரச் செய்ய வேண்டும்" என்று தீர்மானித்துக் கொண்டேன்.

குழந்தை பாயில் படுத்துக் கொண்டிருந்தான். முகம் பாலாக வெளுத்திருந்தது. சட்டையையும் அதன்மேல் போர்த்தியிருந்த கம்பளியையும் தாண்டிக் கொண்டு உடம்பு அனலாகக் காய்ந்தது. திறவாத கண்களுக்குப் போட்டியாக மூடாத வாய் ஏதேதோ பிதற்றிக் கொண்டிருந்தது. சுர வேகத்தை அளந்து பார்த்தேன். நூற்று நான்கு டிகிரி இருந்தது. எனக்கே ஒரு அதிர்ச்சிதான்.

"ஏன் முதலிலேயே வந்து கூப்பிடவில்லை?" என்று கேட்டேன்.

குற்றம் செய்தவரைப் போலச் சாம்பசிவம் தலையைக் குனிந்து கொண்டார். அவர் சொல்ல வேண்டியதில்லை. பதில் எனக்குத் தெரியும். என் மனத்துள் ஒரு அருவருக்கத் தகுந்த உணர்ச்சி அவரை அந்த நிலையில் பார்த்துப் பரிகசிக்கத் தூண்டியது; அடக்கிக் கொண்டேன். அந்த உணர்வுக்காக என்னையே நொந்து கொண்டேன். மனிதத் தன்மையை ஒரு கணம் இழந்துவிட்ட அவமானம் என்னைச் சூழ்ந்தது.

அங்கேயே இரண்டு மணி நேரம் இருந்தேன். இரத்தப் பரிசோதனையும் செய்தேன். நான் வீட்டுக்குத் திரும்பிய போது மணி பத்தரை. அவரும் என் பின்னாலேயே வந்தார். ஊசி போட ஒரு மருந்தை எழுதிக் கொடுத்தேன். "வாங்கிக் கொண்டு வாருங்கள். காலையில் பார்க்கலாம்" என்று சொன்னேன். அந்த மருந்து என்னிடமே இருந்தது. நான் ஊசி போட்டிருக்கலாம். ஆனால் அவர் பணம் கொடுப்பார் என்பது என்ன நிச்சயம்?

"என்ன விலை இருக்கும், சார்?"

"சாதாரணமாக இருபது ரூபாய், இப்போது இறக்குமதிக் கட்டுப்பாட்டினால் கிடைப்பதில்லை. நாற்பது ரூபாய் வரையில் கேட்பார்கள். அவ்வளவு கொடுத்தாலும் நிச்சயம் கிடைக்கும் என்று சொல்வதற்கில்லை!" என்றேன்.

"டாக்டர்...நீங்கள்தான்..."


அவர் முகத்தை நான் நிமிர்ந்து பார்க்கவில்லை. ஆனாலும் நீர் படர்ந்த விழிகளினூடே வந்த பார்வை என்னைச் சுடுவது போலத் தோன்றியது. பச்சாத்தாபம் பொங்கி வந்தது.

"டாக்டர்! மருந்து உங்களிடம் இருந்தால் போட்டு விடுங்கள். நான்...காலையில் பணம் கொண்டு வந்து கொடுத்து ...ற்றுகிறேன்...மன்னித்து விடுங்கள்..... மூபாய் பாக்கியையும் சேர்த்துச் எடுத்துவந்து கொடுத்து விடுகிறேன்.'


அவர் பேச்சில் இருந்த கலக்கம் என்னை உலுக்கியது. என்னுடைய மனோதிடமெல்லாம் எங்கேயோ ஓடி மறைந்தது. எதைப் பற்றியும் சிந்திக்க மனம் மறுத்தது. கடமை உணர்ச்சி மட்டும் மிகுந்து நின்றது. மருந்தும் கையுமாக நள்ளிரவில் அவரோடு போனேன். குழந்தைக்கு என்னாலான வைத்தியத்தைச் செய்துவிட்டுத் திரும்பிய பின்னர்தான் என்னால் கண்ணை மூடிப் படுத்துக் கொள்வதற்கு முடிந்தது.

மறுநாள் அவர் சொன்னபடி அறுபது ரூபாய் பணம் கொண்டுவந்து கொடுத்து விட்டார். நானும் என் வைத்தியத்தைத் தொடர்ந்து செய்து முடித்தேன். குழந்தையும் பிழைத்துக் கொண்டு விட்டது. என் மனத்தில் இரட்டிப்பு மடங்கு திருப்தி. கடமையைச் செய்து விட்ட சந்தோஷத்தோடு, சாம்பசிவத்துக்குப் புத்தி கற்பித்துவிட்ட ஆறுதலும் சேர்ந்து கொண்டது. கடவுளே எனக்கு இந்தச் சந்தர்ப்பத்தைக் கொடுத்ததாக எண்ணித் திருப்திப்பட்டுக் கொண்டேன்.

மாதம் முடிந்ததும் மிகுதிப் பணத்துக்கு அவர் பெயருக்குப் 'பில்' எழுதிப் பையனிடம் அனுப்பினேன். இந்தத் தடவை பணம் தவணை இல்லாமல் வந்து



விடும் என்று எனக்கு ஒரு நம்பிக்கை. அவர் ஒரு தடவை சுட்டுக் கொண்டவர் அல்லவா?



அதனால் பணத்தை எடுத்துக் கொண்டு அவரே நேரில் வந்த போது நான் ஆச்சரியப்படவில்லை. குழந்தையையும் கூடவே அழைத்துக் கொண்டு வந்திருந்தார். பேசிக் கொண்டிருந்தபோது, குழந்தையைக் கவனித்தேன். பழைய சுறுசுறுப்பு இல்லை. இரத்தம் வற்றி முகத்தில் சோகை படர்ந்திருந்தது. கிட்டத்தட்டப் பத்து நாட்கள் படுக்கையில் ஆகாரமின்றிப் படுத்துக் கொண்டிருந்ததினால் ஏற்பட்ட அயர்ச்சி இன்னும் நீங்கவில்லை. கொஞ்ச நாட்களானால் உடம்பு தேறி விடும். ஒரு டானிக் எழுதிக் கொடுத்தேன். தற்செயலாக அப்போது என்னுடைய பார்வை குழந்தையின் மேல் விழுந்தது. திடுக்கிட்டேன்.

அவர் மடியிலிருந்து அவள் இறங்கி உள்ளே என் மனைவியிடம் போய் விட்டாள். அவர் மட்டும் என் முன்னால் உட்கார்ந்திருந்தார். அந்தக் கேள்வி என் நெஞ்சில் முள்ளாக உறுத்தியது; கேட்டு விட்டேன்.

''குழந்தையின் கழுத்துச் சங்கிலி எங்கே!'' என்று கேட்டேன்.

''எந்தச் சங்கிலி?...ஓ! அதைச் சொல்கிறீர்களா? எதிர்பாராமல் வந்தது! அப்படியே போய் விட்டது!''

''நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?''

''அவள் அத்தை, ஊரிலிருந்து மருமகளுக்கு அருமையாகச் செய்து அனுப்பினாள். குழந்தையும் ஆசையாகத்தான் போட்டுக் கொண்டிருந்தது. ஆனால் எதற்கும் கொடுத்து வைத்திருக்க வேண்டுமல்லவா?''

''ஏன்?''

''அன்றைக்கு அறுபது ரூபாய் பணம் என்னிடம் ஏது சார்? அதை அடகு வைத்துத்தான் வாங்கினேன்.........எப்படியோ குழந்தை பிழைத்து விட்டாள். போதும். சங்கிலிக்கென்ன?...அவள்கூட நாலைந்து நாட்களுக்கு முன்னால் கேட்டாள். தொலைந்து போய்விட்டதென்று சொல்லி விட்டோம். கொஞ்ச நேரம் அழுதாள். அப்புறம் சரியாகி விட்டது.''


இருள் சூழ்ந்திருந்த என் மனத்தில் பளிரென்று மின்னல் அடித்தது. இறுமாப்பு மறைந்து மனிதத் தன்மை விழித்துக் கொண்டது.

டிராயரைத் திறந்து அறுபது ரூபாய்ப் பணத்தை எடுத்து அவர் கையில் கொடுத்தேன். அவர் திகைத்தார்.

''வாங்கிக் கொள்ளுங்கள். அவள் எங்கள் குழந்தை மாதிரி. முதலில் சங்கிலியை வாங்கிக் குழந்தையின் கழுத்தில் போடுங்கள்!'' என்றேன். அவர் கண்களில் பசுமை படர்ந்தது.

நடையில் ஜயம் ஓடி வரும் சத்தம் கேட்டது. ''நகை நீங்கள் கொடுத்ததாகவே இருக்கட்டும். என் பெயரை யாரிடமும் சொல்ல வேண்டாம்'' என்றேன். குற்றத்துக்குப் பிராயச்சித்தம் செய்து விட்ட உணர்வு என்னுள்ளே மலர்ந்தது. புடமிட்ட பொன்னைப்போல் மனத்தில் மாசு நீங்கியது.

அதுவரையில் காணாத அமைதியை அப்போது என் மனம் அடைந்தது.



நாள் முழுவதும் புத்துணர்ச்சியுடன் விளங்க

"கோகுல்" ஸாண்டால் & ஸாண்டல்வுட் பவுடர்

டி.எஸ்.ஆர் & கோ

கும்பகோணம்

சென்னை தேனாம்பேட்டை காங்கிரஸ் பொருட்காட்சியிலுள்ள எமது ஸ்பெஷல் ஸ்டாலுக்கு விஜயம் செய்யுங்கள்

நாட்டு வைத்தியம்

ஸ்ரீஹரி

88. தலைவலி (3)

தலைவலியைப் போக்குவதற்குத் தமிழில் சித்தர்கள் இயற்றிய வைத்திய நூல்கள் வாயிலாகவும் சில நல்ல மருந்து முறைகள் கிடைத்துள்ளன.

அவரைச் செடியைத் தெரியாதா? இது கொடி வகுப்பைச் சேர்ந்தது. அவரைப் பிஞ்சு பத்தியத்துக்கு மிகவும் ஏற்றது. தமிழ் நாட்டில் வீடுகள்தோறும் பயிரிடப் படுவது. இந்த அவரை இலையைப் பிழிந்தெடுத்த சாற்றில் ஒரு சிறு துண்டுச் சீலையை நனைத்து நெற்றிமேல் போடவும். உலரும்போது இதை மாற்றி வேறொரு சீலையைப் போடவும். தலை நோவும், தலைபாரமும் நீங்கும்.

ஆவாரை என்று ஒரு குத்துச் செடியுண்டு. இதைப் பற்றி ஏற்கெனவே மதுமேஹத்தின் கீழ், "பெருநீர் மறிக்கும் பிரமேஹம் போக்கும் வரு நீர்ச் சுருக்கதனை மாற்றும்...." என்று அகத்தியர் கூறுவதைத் தெரிவித்துள்ளேன். அதே ஆவாரைதான். இதன் இலையைக் கை நிறைய உருவி எடுத்துத் தலைமீது பரப்பிக் கொண்டு அதன் மீது தலைப்பாகை யிட்டு வேண்டிய மட்டும் வெய்யிலில் நடக்கட்டும். வெய்யிலின் வெப்பம் தட்டாது. வெய்யிலில் செல்வதால் வரும் தலைவலி வராது.

ஜலதோஷத்துடன் கூடிய மண்டைக் குடைச்சல், முகவலி, வளித்தடிப்பு இவைகளில் இண்டு என்னும் ஈகை, அல்லது ஈயக் கொழுந்து நல்ல பலனைக் கொடுக்கும். சுவாசகாசத்தைப் பற்றி எழுதிய போது இந்த முள்கொடியைப் பற்றி எழுதியுள்ளேன்.

இதன் கொடியைத் துண்டித்து ஊதினால் ஒரு வித ரசம் வெளிப்படும். இந்த ரஸத்தில் ஒரே ஒரு துளி மூக்கில் இட்டால் போதும் — கறகறவென்று நீரெல்லாம் ஒழுகத் தலைபாரம் குறைந்து மண்டைக் குடைச்சல், முக சந்தி இவை போய்விடும்.

"..............
..............வானசைக்கும்
மண்டைக் குடைச்சல் மருவுமுக
சந்தியும் போம்
பண்டையுற்ற இண்டினுக்குப் பார்"
என்று அகத்தியமுனிவர் தெரிவிக்கிறார்.

'நிஜமாகவா?' என்று கேட்கிறான் சீடன். "அட! செய்து பார்" என்னும் சொல்லில் 'சவால்' தொனிக்கிறது.

கண்டங் கத்திரி என்ற செடியைப் பற்றியும் அதன் உபயோகத்தைப் பற்றியும் சுவாசகாசத்தைப் பற்றி எழுதிய சந்தர்ப்பத்தில் பிரஸ்தாபித்துள்ளேன்.

இதன் இலையை இடித்துப் பிழிந்த சாறு (அல்லது கஷாயம் காய்ச்சிக் கொண்டாலும் பரவாயில்லை.) அச் சாறுக்குச் சமம் எண்ணெய். இரண்டையும் கூடக் காய்ச்சியெடுத்த எண்ணெயைத் தலைவலியுள்ளவர் (அமிருதாஞ்சனம் போல்) பூசிக்கொண்டால் தலைவலி போய்விடும்.

கற்றாழை என்னும் குத்துச் செடியில் சோற்றுக் கற்றாழை என்று ஒரு வகையுண்டு. இதைச் சிறு துண்டுகளாக நறுக்கி அத்துடன் கொஞ்சம் கடுக்காயின் சூரணத்தையோ, சிறிது நெல்லியையோ இட்டுச் சிலுப்பினால் சாறு பிரிந்து வரும். இந்தச் சாற்றில் சிறிது அபினியும் சேர்த்துக் குழைத்துத் தலைக்குப் பற்றிட்டால் தலைவலி நீங்கும்.

குங்குமப் பூவைத் தாய்ப்பாலில் உரைத்து நெற்றியில் பற்றிடுவது அல்லது குங்குமப் பூவை அபினி, விளாம்பிசின், பனைவெல்லம் இவைகளுடன் சேர்த்து வைத்து ஒரு துண்டுக் காகிதத்தின் மேல் தடவி, கன்னப்பொறி (பொட்டு-சங்கப் பிரதேசம்) மேல் போடத் தலைவலி, மூக்கு நீர்ப் பாய்ச்சல் ஆகியவை தீரும்.

கூந்தற் பனையின் விதையை உரைத்து நெற்றியில் பற்றிடத் தலைவலி, முக்கியமாக ஒற்றைத் தலைவலி போகும்.

ஜுரத்தில் காணும் தலைவலி, புருவத்தின் வலிஇவைகளுக்குச் சந்தனக்கட்டையைத் தேனில் அரைத்து நெற்றி மேல் பற்றிடலாம். உடனே சமனம் கிடைக்கும்.

நன்றாய்ச் சுத்தம் செய்து எடுத்த ஜீரகம் ஒரு பலம். இதை ஒரு வீசை நல்லெண்ணெயில் இட்டுச் சிறு தீயில் காய்ச்சிச் சீரகம் ஒடியத் தக்க பதத்தில் இறக்கி வடிகட்டி வைத்துக் கொள்ளவும். இதைத் தேய்த்துத் தலைமுழுகி வந்தால் மயக்கம் வாந்திகளுடன் கூடிய தலைவலி குணமாகும். வராமல் தடை செய்யவும் இது போதுமாகும்.

கக்கைக் களி செய்து நெற்றிக்குப் பற்றிட்டால் தலைவலி நீங்கும்.

சுக்குத் தைலமென்று ஒருமுறையைத் தேரையர் தைலவருக்கச் சுருக்கத்தில் தெரிவித்துள்ளார். ஒற்றை மருந்தாகச் சுக்கை எண்ணெயில் காய்ச்ச வேண்டும். செலவு ஒன்றுமில்லை. சிறிது பொறுமை தான் வேண்டும். இதைத் தலைக்குத்

தடவி மூடி சீவி வருவதும், தேய்த்து முழுகி வருவதும் நாட்பட்ட தலைவலியையும் போக்கிவிடும்.

வட்டத் தகரை என்ற ஒரு குத்துச் செடியுண்டு. இதைச் சக்ரமர்த்தம் என்று வடமொழியில் அழைப்பர். இதன் இலை அசப்பில் வேர்க்கடலைச் செடியின் இலை போலிருக்கும். இந்தச் செடியின் இலையை இடித்துப்பிழிந்தெடுத்த ரஸம். அதற்குச் சமபாகம் எள்ளெண்ணெய். இவற்றைச் சேர்த்துக் காய்ச்சி எடுத்த தைலத்தைத் தேய்த்துத் தலை முழுகி வந்தால் ஸூர்யாவர்த்தம் அர்த்தாவபேதம் இவை தீரும். இதற்கு அர்த்தநாரீசவரத் தைலம் என்று பெயர்.

தலைவலியின் கடுமை மிகவும் அதிகம் உள்ளதாயின் சில வகைப் புகைகளை மூக்கில் உறிஞ்சும்படியும் செய்வதுண்டு. "அதிகஸ்ய அதிகம் பலம்" என்ற வகையில் "ச்ர்ர்ர்ர்" என்று புகையிலைத் தூளைப் போடுபவர், மூக்கில் உறிஞ்சுவது போல் இப்புகையை மூக்கில் உறிஞ்சி விடுவரோ என்ற பயத்தினால் இம்முறைகளை எழுத அஞ்சுகிறேன்.

தைலங்களைத் தேய்த்துத் தலை முழுகி வரும் விஷயத்தைத் தமிழ் நூல்கள் வாயிலாகச் சித்தர்கள் விஸ்தாரமாகத் தெரிவித்துள்ளனர்.

ஒரே சூடாகக் காய்ந்த வெந்நீர்தான் தலை முழுக்குக்கு உபயோகிக்கத் தக்கது. அதிகமாகக் காய்ந்து விட்டதென்று தண்ணீர் விட்டுத் தணுப்பித்த ஜலம் தலைமுழுக்குக்கு உதவாது. முக்கியமாக, தலைவலிக்குச் சொன்ன தைலங்களைத் தேய்த்து முழுகுவோருக்குக் கட்டாயம் கூடவே கூடாது.


தலையில் தேய்த்த தைலத்தின் மெழுக்கைப் போக்கச் சீயக்காய், சிக்கறுந்தான், கடலை, பயறு, இவற்றின் மாவு, பொன்னுலங்காய், இலுப்பைப் பிண்ணாக்கு என்று இப்படிப் பல பொருள்களை உபயோகிப்பது உண்டல்லவா? இவற்றில் ஒவ்வொன்றுக்கும் உள்ள தனித்தனி குணங்களை விஸ்தாரமாகச் சொல்லி எந்தெந்தச் சந்தர்ப்பத்தில் எதை எதை உபயோகிக்க வேண்டும் என்று விளக்குகிறார்கள்.


மேற்சொன்ன விதம் தயாரித்த வெந்நீரில் தலை முழுகும் வகையையும், உடனே தலையைத் துடைத்து ஈரத்தைப் போக்கி, சாம்பிராணிப் புகை காட்டி முடிகளை உலர்த்திக்கொள்ளவும், செய்த பிறகு பத்திய போஜனத்தைப் பற்றி விளக்கம் தெரிவித்துள்ளதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் கவனிக்க வேண்டும்.

"புனர்த்தியபின் பருந்தும் போஜனந்தனிற் புளிப்பு
ஜலத்துறுநத் பால்பாகல் சாகம் மீனிறைச்சி யோச்ச
நிலத்தெழு பிரமபத்திரி நித்திரை மடவா ரென்னும்
நலந்தரு வகையை நீக்கிப் பின் நாளும் பத்தியத்து நில்லே"

என்று விதிக்கிறார்.

எண்ணெய் முழுக்குக் கழிந்து தலை முடிகளையுலர்த்திச் சீராக்கியவுடன் உண்ணும் ஆகாரத்தில் புளிப்பு இருத்தலாகாது. தயிர், பால் இவையும் - சுரைக்காய், தக்காளி போன்ற ஜலம் மிகுந்த காய்கறி வகைகளும் கூடாது. பாகற்காய், கீரை வகைகள், மீன், இறைச்சி இவையும் கூடாது. புகையிலையை எவ்விதத்திலும் உபயோகிக்கக் கூடாது. பகல் உறக்கம்.....இவற்றையெல்லாம் அபத்தியங்களென நிர்சயித்து இவற்றைத் தவிர்க்க வேண்டுமென்று தெரிவிக்கிறார். அவ்வளவுதானா? "பின் நாளும் பத்தியத்து நில்லே" என்பதால் எண்ணெய்க் குளி நாளில் இப்பத்தியங்களைக் கடுமையாக அனுசரிப்பதோடு, மறு நாளுங் கூட இதே பத்தியக் கிரமத்தை அனுசரிக்க வேண்டும் என்கிறார்.


ஆர்யன்
டூத் பிரஷின்
நெடுங்காலச்
சிறப்பு
...ஆர்யன் பிரஷின்
சிறப்பு 25 வருஷத்
திய தளரா உழைப்
பின் பயன்தான்
இன்று ஒவ்வொரு
வீட்டிலும் இதை
மிகவும் விரும்பி
வாங்குவதின் கார
ணம் இதுவே.
Aryan
Regd.
சரியான
வடிவமுள்ள
டூத்
பிரஷ்
நன்றாகத் துலக்கி —
நெடுநாள் உழைக்கிறது
சென்னை & கேரள ராஜ்யத்திற்கு விநியோகஸ்தர்கள்


மேலும் மலிவானது!
குடும்பம் முழுவதற்கும் ஒரே டால்க்
PROTEX
All-Purpose
TOILET POWDER
ப்ரோடெக்ஸ்
சர்வ பிரயோக டாய்லட் பவுடர்
ஜயன்ட் சைஸ் அழகிய
டப்புடன் கிடைக்கும்!


மந்திரியும் மைதாமாவும்
சாமா
‘மந்திரி ஐயா, மைதா மாவு ரொம்ப விலை ஏறிவிட்டது!’ என்றார்கள் மக்கள்.
“அப்படியா? இதோ கிளம்பி விட்டேன் மாறு வேடத்தில்” என்றார் மந்திரி.
கடைக்குப் போய் “மைதா மாவு என்ன விலை?” என்றார். ‘ஒரு மூட்டை 80 ரூபாய்’ என்றார் கடைக்காரர்.
‘என்ன? சர்க்கார் விலை 38 ரூபாய். நீங்கள் விற்பது 80 ரூபாயா? சரி ஒரு மூட்டை கொடுங்கள்!’ என்றார் மந்திரி.
பில் கொடுக்கக் கடைக்காரர் மறுத்தார். மூட்டையை வாங்கிச் சென்றார் மந்திரி.
‘அடாடா! கடைக்காரரே! அவர் மந்திரி, மாறு வேடத்தில் வந்திருக்கிறார். அவரிடமே இப்படி விற்றிருக்கிறீரே?” என்றார் ஒருவர்.
“எனக்கு அது தெரியாதா என்ன? சர்க்கார் விலைக்கே கொடுத்திருப்பேன். ஆனால் ஊரில் உள்ளவர்கள் எல்லோரும்…
…கண்ட வேஷத்தைப் போட்டுக் கொண்டு வந்து மந்திரி, மாறு வேடத்தில் வந்திருப்பதாக பயமுறுத்தி மூட்டை மூட்டையாக் கொண்டு போய் விடுவார்களே! அதற்குத்தான் அப்படிச் செய்தேன்” என்றார் கடைக்காரர்.



ஆப்பிள் பழம்

எட்டு ஆண்டுகள் கூட நிரம்பாத சிறுமி ஷாபி தன்னுடைய சிறிய மண் சட்டிப் பானைகளை வைத்து விளையாடிக் கொண்டிருந்தாள். ஆனால் அவளுடைய விசாலமான விழிகளில் அவ்வளவு உற்சாகம் மின்னவில்லை.

அவள் தந்தை அலீம் குடிசையின் ஒரு மூலையில் உட்கார்ந்திருந்தான். அவனுடைய ரிக்ஷா வாசற்படியின் முன் கிடந்தது. அவனுடைய வறண்ட கண்கள் பரிதாபமாக ஷாபியை நோக்கிக் கொண்டிருந்தன. அவளுடைய ரோஜாக் கன்னங்களில் நீண்டு கிடந்த மூன்று சிவந்த தடிப்புகளைக் கண்ட அலீம் திடுக்கிட்டான். தன் கண்களிலிருந்து வெந்நீர் பொல பொலக்க, ஓடி வந்து ஷாபியை அணைத்துக் கொண்டான்.

"ஷாபி! நாளைக்கு நான் கண்டிப்பாக ஆப்பிள் பழம் வாங்கித் தரேண்டா, ராஜா!" என்று கூறினான். அவன் நாத் தழுதழுத்தது.

"நீதான் அடிச்சியே!"

அழும் பாவனையில் குழந்தையின் முகம் சிணுங்கியது.

"தெரியாமே அடிச்சுட்டேன், கண்ணு! நாளைக்குப் பாரு, கண்டிப்பாக நான் வாங்கி வர்றேன்!"

மேலே பேச முடியாமல், அவனால் மௌனமாகக் கண்ணீர் வடிக்கத்தான் முடிந்தது. சிறுமியோ தன் ஏக்கம், வலி எல்லாவற்றையும் மறந்து, "நாளைக்குப் பாப்பு ஆப்பிள் பழம் வாங்கித் தருவா......ர்!" என்று ராகம் போட்டவாறு குடிசையைச் சுற்றிச் சுற்றி வந்தாள். அவளுடைய மழலைக் குரலும், மிருதுவான நர்த்தனமும் அந்தக் குடிலை ஓவியக் காட்சியாக மாற்றின!

ஷாபி எங்கோ, எப்படியோ ஒரு ஆப்பிள் பழத்தைக் கண்டு விட்டாள். அதனுடைய சிவப்பான நிறம் குழந்தையின் மனத்தை மிகவும் கவர்ந்து விட்டது. அந்தப் பணக்கார வீட்டுப் பெண் அதைக் கடித்துத் தின்றதைப் போல் தானும் கடித்துத் தின்ன வேண்டுமென்று ஷாபிக்கு அடக்க இயலாத ஆசை ஏற்பட்டது. தன் தகப்பனாரிடம் உடனே சொன்னாள். அவனும் அன்புடன், "நான் உனக்கு வாங்கித் தரேண்டா, ராஜா!" என்று கனிவுடன் மொழிந்தான்.

வெறும் வார்த்தையுடன் அவன் இருந்து விடவில்லை. அவசியம் வாங்கித் தர வேண்டுமென்று மனமார விரும்பவும் செய்தான். அதற்காக, அவன் காலை முதல் மாலை வரையில் அலைந்தது தான் பாக்கி! அவன் அதிர்ஷ்டம் அன்று ஒரு சவாரி கூடக் கிடைக்கவில்லை. ரிக்ஷாவுக்கான அன்றைய வாடகைக்கே பணம் கிடைக்கவில்லை.

எப்படியும் அன்றாவது ஆப்பிள் பழத்துடன்தான் வீட்டுக்குத் திரும்புவது என்று தீர்மானம் செய்து கொண்டு அலீம் தன் வேலைக்குப் புறப்பட்டான். மாலை மூன்று மணி வரையில் சூரியன் நகர்ந்து கொண்டிருந்தானே தவிர, இவன் ரிக்ஷா ஒரு சவாரியுடன் நகரவில்லை.

"டேய்! ரிக்ஷா!!"

திரும்பிப் பார்த்தான்!

தம் வைர மோதிரத்தைத் துடைத்துக் கொண்டிருந்த கனவான் ரிக்ஷாவில் ஏறி உட்கார்ந்தார்!



ஆர். பி. மல்ஹாரி

'முண்டகக் கண்ணியம்மன் கோவில் தெரு!'' என்ற ஆக்ஞை அவரிடமிருந்து பிறந்தது.

அலீம் தன் உற்சாகத்தை யெல்லாம் மீண்டும் இழந்தான். எவ்வளவு அதிகமாகக் கிடைத்தாலும் ஒரு 'நான்கணு' தானே கிடைக்கும்!

அலீம் தன் இனிய ஷாபிக்கு என்ன பதில் சொல்லுவது என்று அறியாமல் கால்படி அரிசிக் குறுணையுடன் தன் குடிசையை நோக்கித் தளர்ந்த நடையுடன் வந்து கொண்டிருந்தான்.

''பாப்பு வந்துட்டா......ர்!'' என்று மகிழ்ச்சியின் மிகுதியால் உரக்கக் கூவி அவன் குடிசைக்கு வருவதற்கு முன்பே வரவேற்ற ஷாபி, அடுத்தபடியாக ''ஆப்பிள் எங்கே, பாப்பு?'' என்ற கேள்வியையும் கேட்டு வைத்தான்.

''அடடே!............மறந்துட்டேனே, கண்ணு!'' என்று அவன் நடிக்க முயன்ற போது அவன் உள்ளமும் நடுங்கியது. அவன் முகத்தைக் கண்ட ஷாபிக்கு எப்படி இருந்ததோ. ''பரவாயில்லே பாப்பு. நாளைக்கு வாங்கியா!'' என்று சொல்லிக் கொண்டே வெளியே வேகமாக ஓடி விட்டான்.



இப்படியே இன்னும் இரண்டு நாட்கள் சென்றன. அலீம் ஏதேதோ அழுகல் காரணங்கள் காட்டினுன். மூன்றும் நாள் அவன் சொன்ன பொய்க்குக் கொஞ்சம் மெருகும் கொடுத்து வைத்தான். ஆப்பிள் பழம் வாங்கி வந்தது எங்கோ விழுந்து விட்டது என்பதோடு, இரண்டு வாங்கி வந்ததாகவும் ஒரு போடு போட்டான்!

''ரெண்டா! ரொம்பப் பெரிசா இருந்துச்சா? செவப்பா??......''

ஷாபியின் முகம் மகிழ்ச்சியால் பிரகாசித்தது. ''தன் தந்தைக்குத் தன் மேல் எத்துணை பாசமிருந்தால், இரண்டு வாங்கி வர மனம் இருக்கும்!'' என்று கற்பனை செய்யும்போதே அவன் பூரித்துப் போனுன்.

அலீம் என்ன செய்வான்! வறுமையின் வலிமையால் தன் மகனையே ஏமாற்ற, இல்லை ஏமாறுமல் இருக்கத் தான் அவன் பொய் சொல்ல வேண்டியிருந்தது. ஆனுல் அந்தக் குழந்தைக்குத் தன் தந்தையின் மேலிருந்த நம்பிக்கை?......

அடுத்த நாள் அலீமின் சோதனை நாள். பழமில்லாமல் அவன் வீடு திரும்பக்கூடாது!

அவன் இதயக் குமுறலைப் பிரதிபலிப்பதுபோல் இயற்கையும் காட்சியளித்தது. திடீரென்று வானமெல்லாம் இருண்டு விட, சுழல் காற்று சுழன்று அடித்தது. மேகம் கர்ஜிக்க, இடியும் பேரொலி செய்தது. மழைத் துளிகளும் படபடவென்று விழ ஆரம்பித்தன. காற்றின் பேரிரைச்சலும் மேகத்தின் உறுமலும் மழையின் ஆங்காரமும், அவனை ஒரு பெரிய வீட்டுத் திண்ணையில் ஒதுங்கச் செய்தன. பழங்காலக் கட்டடம் அது. இல்லையென்றுல் அதில் திண்ணை இருக்குமா? கூர்க்காவுக்கான ஒரு 'நான்கடிக் குச்சு' இருக்கலாம்!

நீர் மல்கிய கண்களுடன் அலீம் எதிரே நோக்கினுன். ஒரு பெரிய பழக்கடை! பெரிய பெரிய ஆப்பிள்களெல்லாம் 'செக்கச் செவே' லென்று அங்கே அடுக்கப்பட்டிருந்தன. 'இந்த உலகில் இவ்வளவு ஆப்பிள்கள் இருக்கும் போது, தன்னுடைய ஒரே குழந்தைக்குத் தானு ஒரு பழமும் இல்லாமற் போய் விட்டது?'-அவனுல் நினைத்துக்கூடப் பார்க்க இயலாதபடி துக்கம் தொண்டையை அடைத்தது. கண்கள் கலங்கி விட்டன.

அவன் வானத்தை நிமிர்ந்து நோக்கினுன். தெளிவு ஏற்படும் சின்னமே அவனுக்குக் காணப்படவில்லை.

''ஆண்டவனே! என்னை எப்படிச் சோதனை செய்யறே?''

அந்தச் சமயத்தில் அந்த வீட்டின் ஜன்னல் வழியே ஏதோ 'தொப்'பென்று வந்து விழுந்தது. எல்லாம் ஆப்பிள் பழத்தின் தோல்கள்! தன் பிரார்த்தனைக்கு ஆண்டவன் கூடத் தோலை விட்டெறிந்தா பரிகசிக்கிறுன்?

''அந்தத் தோலையாவது பொறுக்கிக் கொண்டு போய் என் ஷாபிக்குக் கொடுக்கலாமா?''

பெற்ற தகப்பனுன தானே இப்படி நினைக்கும்படியாக இருக்கிறதே என்று எண்ணியபோது, அவன் சிறு குழந்தையைப் போல் 'ஒ' வென்று வாய் விட்டுக் கதறி அலறினுன்.

புகைப்படலத்தில் ஏதோ அர்த்தமற்ற கோலம் போட்டுக் கொண்டிருந்த அவன்

சிந்தனை, ஜன்னல் வழியே மீண்டும் ஏதோ 'தொப்' பென்று விழவும் கலைந்தது. வெளிறடைந்த அவன் சோகக் கண்கள் ஏதோ உருண்டு ஓடுவதையும் கண்டன. ஆம்! அது ஒரு ஆப்பிள் பழந்தான்! வாசற்படியின் ஓரத்தில் சிமெண்ட் பூச்சின் மேல் அது கிடந்தது. ஒரு பக்கத்தைக் கடித்து விட்டு, அந்த வீட்டுக்காரர்கள் கொஞ்சம் அழுகிய அந்தப் பழத்தை விட்டெறிந்திருக்கிறார்கள். அழுகிய அந்தப் பாகத்தை வெட்டிப் போட்டு விட்டால், மிகுதியையாவது ஷாபிக்குக் கொடுக்கலாம்!

அலீம் யோசனைக்குச் சந்தர்ப்பமே கொடுக்கவில்லை. 'விடு விடு' வென்று ஓடி அதை எடுக்கப்போனான். ஆண்டவனுக்கு அதுகூடச் சம்மதமில்லை என்று தெரிந்தது! அவன் கடைசி அடி எடுத்து வைக்கும் போது வழுக்கி, படீரென்று கீழே விழுந்தான். முன்னமேயே கட்டுப்பட்டு வெந்து போயிருந்த அவன் இதயத்தில் கீழே கிடந்த பாறையிலும் நன்றாக அடி விழுந்தது. அந்த அழுகிய ஆப்பிள் பழம் உருண்டு சேற்றில் போய் விழுந்தது!

அலீம் மெதுவாக எழுந்து திண்ணையின் மீது ஏறி நின்றான். ஒரு முரட்டுக் குரலின் கர்ண கடூரமான அதட்டலைக் கேட்டுச் சுருட்டி வாரிக்கொண்டு எழுந்தான்.

"ஏய்! ரிக்ஷா! செவிட்டுப் பிணமே! எவ்வளவு நேரமாகக் கத்துவது?" என்று எரிந்து விழுந்தார் ஆஜானுபாகுவான ஒரு ஜமீன்தார்.

"அண்ணாமலைப் புரத்துக்கு வர்றியா?"

அலீம் வானத்தை அண்ணாந்து பார்த்தான். மழை முன்போலத்தான் அதிகமாக அடித்துக் கொண்டிருந்தது. என்றாலும், கருகிக் கவலை படர்ந்திருந்த அவன் முகம் மலர்ந்தது.

மழை? அது கிடக்கட்டும், எப்படியும் ஒரு பத்தணா, பன்னிரண்டணாவாவது கிடைக்கும். இதே போல் இன்னொரு சவாரி கிடைத்தால் போதும். கஞ்சிக்கு ஆப்பிள் தொட்டுக் கொள்ளலாம்!

இந்த எதிர்த்த கடையிலேயே வாங்க வேண்டும். ஆப்பிள் விலை கேட்டபோது அந்தக் கடைக்காரன் 'கொல்' லென்று சிரித்தானல்லவா? — 'இந்தத் துரைக்கு ஆஸ்திரேலியா கேஸை உடைச்சு எடுத்துக் கொடுடா!' என்றானல்லவா?

கடைசியில் அந்தத் தடித்த மனிதர் ஜம்பமாக வந்து குடையைப் பிடித்துக் கொண்டு ரிக்ஷாவில் அமர்ந்தார். பாசத்தின் வலிமையைத் துணையாகக்கொண்டு அந்தப் பெரும் மழையில் அவர் குறிப்பிட்ட இடத்தில் சேர்த்தான்.

"இங்கேயே இரு! இதோ வர்றேன்!" என்றொரு கடைசி அதட்டலையும் போட்டு அந்தக் 'கனவான்' இறங்கிப் போனவர் இறங்கிப் போனவர்தான். அங்கு இறங்கியவர் எங்கு சென்றாரோ?

அலீம் காத்து நின்றான். காற்றும் மழையும் நின்று விட்டன. கொந்தளித்த இயற்கையின் வேகம் சற்று அடங்கி விட்டது. ஆனால் அவன் உள்ளத்தின் அடித்தளத்தில் கொந்தளித்து அலறிய பாசத்தின் வேகம்?....

அன்று ஷாபி அவனைக் கண்டிப்பாகப் பழத்துடன் எதிர்பார்த்து நிற்பாள். அவனைக் கண்டதும்...அப்புறம்?...

அன்று இரவு எட்டு மணிக்கு மேல் தான் வந்தான் அலீம். படுத்துக் கிடந்த ஷாபி தகப்பனைக் கண்டதும் மான் போலத் துள்ளி எழுந்தாள்—"எங்கே அப்பா ஆப்பிள்?" என்றாள்.

அலீமின் அங்கங்களெல்லாம் பதறின. நடுங்கும் கைகளோடு மடியில் இருந்த மூன்று பழங்களையும் எடுத்தான்.

தன் ஆவலைப் பொறுக்க இயலாமல் மிகவும் களிப்புடன் அந்தப் பழங்களையெல்லாம் தன் கையில் பிடுங்கிக்கொண்டாள் ஷாபி

"ஆகா! எவ்வளவு அழகான பழங்கள்! நாளைக்குத்தான் தின்பேன்!" என்று கூறித் தன் கிழிந்த பாவாடையில் அதை மறைத்துக் கொண்டு குதித்தாள்.

ஆனால், அலீமின் உள்ளத்தைச் சகிக்க முடியாத வேதனையின் ஜுவாலை கரித்தது. ஏன்? அவன் தன் கபடமற்ற மகளின் மாசற்ற கைகளில் கொடுத்தவை ஆப்பிள் பழங்களல்ல — முந்திரிப் பழங்கள்!

அவனிடம் இரண்டணாதான் இருந்தது. அரையணாவுக்கு இந்தப் பழங்களைச் 'செவப்பா! பெரிசா!' வாங்கினான்! குழந்தையை ஏமாற்றிய அலீம் கண்களில் பஞ்சடைக்கச் சாய்ந்தான்.

ஷாபி ஆப்பிள் பழங்களை அணைத்தவாறு கிழிந்த பாயில் படுத்து உறங்கிக் கொண்டிருந்தான்!





தொண்டை
மற்றும் மார்பு
உபாதைகளுக்குக்
குணமளிக்கும்

பெப்ஸ் வில்லைகளை

உட்கொண்டால், உங்கள் இருமல் உடனேயே அகலும்

பெப்ஸ் வில்லை ஒன்றை சுவைத்தால் வலியைக் குறைக்கவும், தொண்டைப்புண் பிராங்கைடிஸ், இருமல் அல்லது ஜலதோஷம் இவைகளுக்குக் காரணமான கிருமிகளைக் கொல்லவும் செய்யும். அதன் குணமளிக்கும் ஆவியை அநுபவியுங்கள். பெப்ஸ் உடனே நிவாரணம் அளித்து, விரைவில் குணமூட்டுகிறது. அபாயகரமான மருந்துகள் இதில் சேரவில்லை. குழந்தைகளுக்கும் கூட அபாயமின்றி கொடுக்கலாம்.



FPY-54-TAM

பிராங்கைடிஸ்,
தொண்டைப்புண்,
மண்டைநீர்,
அடைப்பு,
ஜலதோஷம்
மற்றும்
இருமலுக்கு
உடனேயே
நிவாரண
மளிக்கிறது.

எல்லா மருந்து
வியாபாரிகளிடமும்
கிடைக்கும்.

ஸி. இ. புல்போர்ட் (இந்தியா) பிரைவேட் லிமிட்

சோல் ஏஜண்டுகள் : தாதா அண்டு கம்பெனி
86, கைனியப்ப நாயக் தெரு, சென்னை - 8



ரோமா

கூந்தல் வளர்க்கும் டானிக்

தயாரிப்பாளர்கள்:

புளோரோஸோன்

கருமையான சரீரத்தை வெண்மையாக்குகிறது



புளோரோஸோன் உங்கள் சருமத்தை இதேபோல் வெண்மையாக்கி, முகப் பருக்கள் முதலிய சருமக் கோளாறுகளை அறவே போக்கி, மேனிக்கு மலர்போன்ற மென்மையையும், நீடித்த அழகையும் அளிக்கும்.

புளோரோஸோன் லோஷன் ஒரு பாட்டில் விலை ரூ. 4.25 சக்தி மிகுந்த புளோரோஸோன் கிரீம் ஒரு ஜாடி விலை ரூ 5.50

வி. பி. சார்ஜ் தனி

கெமிஸ்டுகளிடமும் ஹைஜீனிக் ரிசர்ச் இன்ஸ்டிடியூட், த. பெ. 1192 பம்பாய்- விலாசத்திலும் பெறலாம்

Florozone

MIRACLE BEAUTY BLEACH

Distributors of Madras,

S. L. BOWDER & Co., 89, Bunder St., Madras

இன்பென்டோன்
க்ரைப் வாட்டர்


உடனடியாக நிவாரணம் அளிக்கிறது



இளங்குழந்தைகளுக்கேற்ற சாலச் சிறந்த க்ரைப் மிக்ஸர் இதுதான். வயிற்று வலி, குடல் வலி, வாயு உபாதை, பல் முளைக்கும்போது ஏற்படும் பிணி எல்லாவற்றிற்கும் உடனடியாக நிவாரணம் அளிக்கிறது. சிசுக்களை கலகலவென்று ஆரோக்கியத்துடன் இருக்கச் செய்கிறது. 40 ஆண்டுகளுக்கு மேலாக நற்பெயர் பெற்றுள்ள மருந்து.

தயாரிப்பாளர்கள் :
ஹைதராபாத் கெமிகல் & பார்மஸூடிகல் ஒர்க்ஸ் லிட்.,
ஹைதராபாத் டெக்கான்

இருட்டில் உங்களது துணைவன்



எஸ்ட்ரேலா
பாட்டரீஸ்



அணையாத வெளிச்சத்திற்கு எப்பொழுதும் எஸ்ட்ரேலாவை உங்கள் டார்ச்சில் உபயோகிக்கவும் நீடித்த உழைப்பு பிரகாசமான வெளிச்சம்

எஸ்ட்ரேலா பாட்டரீஸ் லிட்.,
பம்பாய் - மதராஸ் - டில்லி - கல்கத்தா - கானபூர்



வணக்காமணா

3. ஊர் வாய்

அந்தப் பெண்ணுக்குச் சாருமதி என்று பெயர். அவள் அதிக ரூபவதியும் இல்லை; அதற்காகக் குரூபவதியும் இல்லை. சிவந்த மேனி; விசாலமான விழிகள்; சந்திரனைப் போல் வட்டமான முகம். வயது பத்தொன்பது இருபதுக்குமேல் இராது.

சாருமதியைச் சதாசுகர் தமது குடிசைக்கு அழைத்துச் சென்றபொழுது யாருக்குமே வாய்திறந்து எதுவும் சொல்லத் தோன்றவில்லை. இக்கட்டான நிலையில் ஒரு காரியத்தைச் செய்ய உறுதி படைத்த மனம் வேண்டும்; சமயோசித புத்திவேண்டும். எல்லோருக்குமே அது இலேசில் வந்து விடுவதில்லை. ஆபத்தான நிலையில் பிரமையும் திகிலும் உண்டாகுமே யொழியச் செயலில் இறங்க யோசனை தோன்றாது. அதிவேகமாகக் குதிரை வண்டியொன்று ஓடி வருகிறது. கொளுத்தும் வெய்யிலின் சூடு தாங்காமல் அறியாக் குழந்தை ஒன்று அதே சமயம் தெருவைக் கடக்கக் குறுக்கே பாய்கிறது. வண்டிச் சக்கரத்தின் சுழலிலே சிக்க மயிரிழைதான் இருக்கிறது. அப்பொழுது பாய்ந்து அதை லாகவமாகக் காப்பாற்றும் சமயோசித புத்தியும் உறுதியும் பலருக்கு உண்டாவதில்லை. அது மட்டுமா? 'குழந்தைக்கு ஆபத்து!' என்று கத்தக்கூடத் தோன்றுவதில்லை. செய்யும் வகையறியாது பிரமை பிடித்துக் கல்லாகச் சமைந்து நிற்கவே செய்வர் பலர். அத்தகைய நிலையில் ஒருவன் உயிருக்குத் துணிந்து அந்தக் குழந்தையை ஆபத்திலிருந்து

சுதர்சன்

தமிழாக்கம்: ரா.வீ.



மீட்டு வந்தால், பிரமை பிடித்து நிற்கும் மக்களுக்கு அவனைப் புகழவும் நேரம் பிடிக்கும். பரபரப்பும் திகிலும் அடங்கிப் புத்தி வேலை செய்யத் தொடங்கிய பின்னரேதான், சாகசச் செயல் புரிந்து குழந்தையைக் காப்பாற்றியவனைத் தட்டிக் கொடுப்பார்கள் ; புகழ்வார்கள்.

சாருமதியைச் சதாசுகர் அழைத்துச் சென்றபொழுதும் மக்கள் அதே நிலையில்தான் இருந்தார்கள். சதாசுகரும் சாருமதியும் கண் பார்வையிலிருந்து மறைந்தபின் கோயிலெதிரே கூடியிருந்த மக்கள் சுய அறிவு பெற்றனர் ; சதாசுகரின் செய்கையை மனமார மெச்சினர்.

'என்ன இருந்தாலும் சதாசுகர் பெரியவர்தான். ஆதரவு அற்று வந்து நின்றஒரு பெண்ணுக்கு ஆதரவுடன் இடம் அளிக்க வேண்டும் என்று நமக்குத் தோன்றவில்லையே! கஷ்டப்படுபவர்களுக்குக் கை கொடுத்து உதவும் உயர்ந்த மனப்பாங்கு நமக்கு உண்டாக வில்லையே!' என்று மனம் வருந்தினர். 'அவர் இடித்துக் காட்டினரே, அப்பொழுதாவது நமக்குத் தோன்றியதா?' என்று தங்கள் புத்தியையே நொந்து கொண்டனர். பிறர் நலன் பேணும் பெரிய மனம் படைத்த சதாசுகர், மக்களின் மனத்திலே மேலும் பெரியவராகி விட்டார். அவரிடம் அவர்கள் கொண்டிருந்த பக்தியும் விசுவாசமும் பல படி உயர்ந்தன.



'மனித உருவிலே வந்த மகான், வானுறை தெய்வத்தின் வடிவம்' என்று அவரைப் போற்றிப் புகழ்ந்து கொண்டிருந்தனர்.

சதாசுகரின் குடிசைக்கு வந்த சாருமதிக்கு எவ்விதமான சிரமமும் ஏற்படவில்லை. சமையல் சாப்பாட்டுக்கு வேண்டிய பொருள்கள் எல்லாம் ஒழுங்காக வைக்கப்பட்டிருந்தன. எந்தக் குறையும் இல்லாமல் பார்த்துக் கொள்ளச் சதாசுகர் இருந்தார். வயிற்றுப் பாட்டுக்கான கவலையைச் சதாசுகர் அவளுக்கு வைக்கவே இல்லை. ஆயினும் அவள் எப்பொழுதும் ஏனோ துயரமே உருவாக இருந்தாள்! அவள் உள்ளத்தில் கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்த விரகத் தீயை யாரால் அணைக்க முடியும்? ஆகவே, அவள் ஒரு மூலையில் உட்கார்ந்து அழுத வண்ணமாகவே இருந்தாள். "உனக்கு என்ன அம்மா கவலை?" என்று சதாசுகர் மிகப் பரிவுடன் அவளை விசாரிப்பார்.

ஆனால் சாருமதி தன் விசாலமான வியப்புத் தாண்டவமாடும் விழிகளால் ஒருமுறை அவரை ஏறிட்டுப் பார்ப்பாளே ஒழியப் பதில் சொல்ல மாட்டாள். உள்ளத்தின் ஆழத்திலிருந்து ஒரு அனல் மூச்சு எழுந்து அவளை மௌனமாக்கிவிடும். அவள் நிலையை ஒருவாறு ஊகித்து உணர்ந்த சதாசுகரும் அவளை அதிகமாக வற்புறுத்தி எதையும் கேட்டுத் தெரிந்துகொள்ள முயலவில்லை.

நாளடைவில் சாருமதியின் முகம் மெருகிட்டுக் காட்டியது. உலகமறிந்த சதாசுகருக்கு அவள் 'உண்டாகி'யிருக்

இருள் என்னும் விஷயம் தெரியாமற் போகுமா? இந்தப் பொல்லாத உலகத்தில் அபலைப் பெண்களின் நிலை என்னவென்பதை அவர் அறியாதவர் அல்லவே! அவரது பரந்த அநுபவமும் ஆழ்ந்த அறிவும் 'நெறி தவறியவள்' என்று அவளை ஏசித் தூற்ற இடம் கொடுக்கவில்லை. 'இரண்டு உயிரைக் காக்கும் அவளுடைய உள்ளம் நோகக் கூடாது, உடல் நோகக் கூடாது' என்ற ஒரே எண்ணம் அவர் உள்ளத்தை ஆட்கொண்டிருந்தது. அவளை மகிழ்ச்சியுடன் வைத்துக் கொள்ள வேண்டும் என்ற பெரு நோக்கமே அவருடைய இதயத்தில் இடம் பெற்றிருந்தது. அவர் அன்பும் ஆதரவும் காட்டக் காட்ட அந்தப் பேதைப் பெண்ணின் வேதனைதான் அதிகரித்தது. 'இத்தனை நல்லவர் வாழும் உலகத்தில் எத்தனையோ தீயவர்களும் இருக்கிறார்களே!' என்று அவள் உலகத்தை நொந்து கொண்டாள். எனவே, உள்ளமும் உடலும் சோரத் தன் வாழ்க்கையைப் பிடித்துத் தள்ளிக் கொண்டிருந்தாள்.

இவ்வாறு இரண்டு மாதங்கள் ஓடிவிட்டன. சாருமதியின் விஷயம் ஊர் முழுவதும் பரவி விட்டது. சின்னஞ்சிறு இராமங்களில் எந்தச் செய்தியும் இலகுவாகப் பரவி விடுவது இயல்புதானே? ஊருக்கு உயர்ந்தவராக, உலகத்துக்கு உத்தமராக அன்று வரை தோன்றிக்கொண்டிருந்த சதாசுகர், அந்த விஷயம் தெரிந்த மறுகணமே, அந்த ஊர்வாசிகளின் கண்களிலே தலைகுப்புற விழுந்துவிட்டார். 'வானுறை தெய்வத்தின் வடிவம், மனித உருவிலே வந்த மகான்' என்று போற்றப்பட்டவர், 'சே, இவரும் ஒரு மனிதரா?' என்று தூற்றப்பட்டார். உலகத்தின் நாக்கு இருபுறமும் கூருள்ள கத்தியல்லவா?

'இதில் ஏதோ ரகசியம் இருக்கிறது. இல்லாவிட்டால் இந்த மனிதன் அன்று அப்படி நடந்து கொள்ளக் காரணம் என்ன? நம்மையெல்லாம் குத்திக் காட்டி மட்டம் தட்டிப் பேசி இந்தப் பெண்ணை வலிய அழைத்துச் சென்றாரே! இப்பொழுது பார்த்தாயா? எல்லாம் பெயருக்குத்தான் அப்பா பெரிய மனிதர்! நல்லவேளை, அன்று நாம் அவருடைய பேச்சில் மயங்காமல் தப்பினோமோ, பிழைத்தோமோ!'

இப்படியாக ஆரம்பித்த ஊர்ப் பேச்சு வளர்ந்து படர்ந்தது.

அவர்கள் பேச்சு வளருகிறதே என்பதற்காகச் சாருமதியின் வயிற்றிலே வளர்ந்த சிசு வளராமல் இருந்துவிடவில்லை. அது வளர்ந்ததே என்பதற்காகச் சதாசுகரின் மனத்தில் சாருமதியிடமோ, வளரும் சிசுவிடமோ வெறுப்பு வளர்ந்துவிடவில்லை; மாறாக அன்பே வளர்ந்தது. யாரோ செய்துவிட்ட பிசகுக்காக உலகமறியாக் குழந்தையினிடமும் அதைச் சுமக்கும் அன்னையிடமும் வெறுப்பைக் காட்ட அவர் என்ன அறியாதவரா? அன்பைப் பொழிந்து அவள் மனம் கோணாமல் நடந்து கொள்வதற்கு அவர் எடுத்துக் கொண்ட பிரயாசையைச் சொல்லி முடியாது. உரியகாலம் வந்தபொழுது சாருமதி ஒரு பிள்ளைக்குத் தாயார் ஆனாள்.

சதாசுகருக்கு ஏற்பட்ட இன்பத்தைச் சொல்லி முடியாது. தமது சொந்த மகளுக்கே குழந்தை பிறந்து தாம் 'தாத்தா'வாகி விட்டதாகப் பெருமைப்பட்டார். அவ்வூர்மக்களோ அவரையும் அவர் போக்கையும் எண்ணிக் குறைப்பட்டனர். சாருமதிக்குக் குழந்தை பிறந்த பின் எங்கு பார்த்தாலும் கண்ட கண்ட இடங்களிலெல்லாம் சதாசுகர் வாய் வழங்காத ஏச்சுக்கும் பேச்சுக்கும் இலக்காகிக் கொண்டிருந்தார்.

"பார்த்தாயா, ஊருக்கு உபதேசம் செய்த பெரியாரின் காரியத்தை! நாலு பேருக்கு நல்லவராக நடந்துகொண்டு நாட்டை ஏமாற்றி வந்த நல்லாரின் காரியத்தை! எல்லா வண்டவாளங்களும் வெளி வந்துவிட்டன, பார்! நல்ல மனுஷன் என்றால் இப்படிப்பட்ட பெண்ணின் முகத்தை ஏறெடுத்துப் பார்ப்பானா? கடைசியில் தாயார்க்காரி ஒன்றும் இல்லாமல் சும்மாவா பெற்ற பெண்ணை உதறித் தள்ளிவிட்டு ஓடிவிட்டாள்? 'உலகம் என்ன சொல்லும்? ஊர் என்ன சொல்லும்?' என்றெல்லாம் இந்த மகாத்மா கடுகளவாவது சிந்தித்துப் பார்த்தாரா?" என்றெல்லாம் ஜனங்கள் பேசிக் கொள்ளலாயினர்.

வெறும் வாயை மெல்லுபவர்களுக்கு அவல் கிடைத்து விட்டால் கேட்கவா வேண்டும்? காணாத செய்திக்குக் காது மூக்கு வைத்துப் பேசக் கற்றுக் கொடுக்கவா வேண்டும்? சதாசுகர் பலர் வாயிலும் புகுந்து புறப்பட்டார். அப்பப்பா! என்ன பேச்சு, என்ன பேச்சு! காது கொண்டு கேட்கக் கூடிய பேச்சா?



பம்பாய் மாதுங்காவில், உதவி பிரஸிடென்ஸி போஸ்ட் மாஸ்டர் திரு பி. கே. நடேசய்யரின் அறுபதாண்டு விழா விமரிசையாக நடைபெற்றது. கானகலாதர ஸ்ரீ மதுரை மணி அய்யர் இன்னிசை வழங்கினார். உறவினர்களும் நண்பர்களும் திரளாக வந்திருந்தனர்.

ஆனால் சதாசுகர் இவற்றையெல்லாம் சிறிதாவது பொருட்படுத்தினால் தானே? 'பாவம், அநாதைப் பெண். இவளுக்கு அப்பா-அம்மா கிடையாது. அப்படியே இருந்தாலும் அவர்கள் கை விட்டு விட்டார்கள். யாரோ ஆசை வார்த்தை காட்டி இந்த அபலைப் பெண்ணைக் கெடுத்திருக்கிறான். அதற்கு இவளா பிணை? இவள் மனம் நோகும்படி விடக்கூடாது; துளிக்கூட வருத்தம் ஏற்படும்படி விடக்கூடாது!' என்றே அவர் எண்ணினார்.

எனவே அவளைப் பொத்திப் பொத்திப் பாதுகாக்கலானார். அவளிடம் அவர் பரிவு காட்டக் காட்ட மக்களின் ஏச்சும் பேச்சும் அதிகமாயின. ஊருக்கு வந்த புதிதில் அவரை உச்சாணிக் கிளையில் தூக்கி உட்கார வைத்தவர்கள், இப்பொழுது ஓரேயடியாகக் குழி பறித்துத் தள்ளலாயினர். தீயைக் கண்டு அஞ்சுபவர்கள் போல் அவருடைய நிழலைக் கண்டாலே அஞ்சி ஓடி ஒளிந்து கொள்ளலாயினர். அவரைப் பார்ப்பதே மகா பாவம் என்று கூட எண்ணினர். அப்படியிருக்கும் பொழுது அவரிடம் சிரித்துப் பேச யார் வரப் போகிறார்கள்? அவரை வெறுத்த அளவுக்குக் கள்ளன், கொலைகாரன், கொள்ளைக்காரன் முதலியவர்களைக் கூட யாரும் வெறுத்திருக்க மாட்டார்கள்; வெறுக்கவும் மாட்டார்கள். அவரிடம் அவ்வளவு வெறுப்பு எப்படித்தான் ஏற்பட்டதோ? ஆனால் வைஜநாத்துக்கு வந்து போகும் யாத்திரீகர்கள் அவர் குடிசையில் வந்துதான் தங்கிப் போவார்கள். பழையமாதிரியே அதே உற்சாகம், அதே சிரத்தை, அதே பக்தியுடன் அவர்களுக்கு உபசாரம் நடக்கும். எதிலும் எந்தவிதமான குறையும் இருப்பதில்லை. இருந்தாலும் ஒரே ஒரு சின்ன வித்தியாசம் என்னவென்றால் முன்பெல்லாம் இந்தக் காரியங்களைச் சதாசுகர் மட்டுமே செய்து வந்தார். இப்பொழுது சாருமதியும் சேர்ந்து செய்துவந்தாள்.

சதாசுகர் நாள் முழுவதும் குழந்தைக்கு விளையாட்டுக் காட்டிய வண்ணம் தாமும் குழந்தையோடு குழந்தையாகி விளையாட்டில் லயித்து விடுவார். இரவுவேளைகளில் கூடத் தம் அருகிலேயே குழந்தையைத் தூங்க வைத்துக் கொள்ளுவார். குழந்தையைக் காணும் பொழுதெல்லாம் குதூகலத்தினால் அவருடைய முகம் மலர்ந்தது. கள்ளங்கபடமற்ற அதன் குறும்புத்தனத்தைக் கண்டு அவருக்குக் கடுகளவு கூடக் கோபம் உண்டானதில்லை; மட்டற்ற மகிழ்ச்சியே ஏற்பட்டு வந்தது. அவருக்கெதிரே அதன் விருப்பத்துக்கு வேறு சொல்ல யாருக்குமே தைரியம் கிடையாது. அவன் கேட்டது கிடைக்கவேண்டும். அவன் விரும்பியதை வாங்கித்தர வேண்டும். அவன் சொன்னால் சொன்னதுதான். அது நிறைவேறியே தீர வேண்டும். அவனுக்கு அவ்வளவு சுதந்திரம் கொடுத்து வைத்திருந்தார் அவர்.

"எதற்காக இவனை இவ்வளவு தலையில் தூக்கிவைத்துக் கொண்டு கொண்டாடுகிறீர்கள்? 'குழந்தை, குழந்தை' என்று இப்பொழுது இப்படி இடம் கொடுத்தால் பெரியவன் ஆனதும் உங்கள் தலையிலேயே ஏறி உட்கார்ந்து விடுவான். இல்லாத தொந்தரவுகளெல்லாம் அவன் கொடுக்க ஆரம்பித்து விடுவான்!" என்பாள் சாருமதி.

"அம்மா, சாருமதி! இவன் கண்களில் நீர்முட்டி நிற்பதைக் காண என்னால் ஆகாது. இவன் முகம் கோணினால், இவன் முகத்திலே அழுகைக் குறி தோன்றினால், என் இருதயத்தை என்னவோ செய்கிறது. இவன் முகத்தில் துயரக் கோடுகள் தென்பட்டால், என் நெஞ்சம் வெடித்து விடும்போலாகி விடுகிறது. நீ நம்பினால் நம்பு, நம்பா

விட்டால் போச்! இவன் 'தன் மனத்துள் என்ன நினைப்பான், தெரியுமா? 'நீயும் சின்னக் குழந்தையாக இருந்த பொழுது இப்படித்தானே இருந்திருப்பாய். இன்று பெரியவனாகி விட்டாய் என்பதற்காகக் குழந்தையின் இயல்பையும் குணத்தையும் மறந்து விடுவதா?' என்று எண்ணிக் கொள்ளுவான். என்ன இருந்தாலும் இந்தக் காரியம் என்னால் ஆகாது, அம்மா! இன்று நாம் இவன் விருப்பத்தை நிறைவேற்றி வைத்தால் நாளை இவன் நம் விருப்பத்தை நிறைவேற்றி வைப்பான். குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்தில் தானே?" என்று பதில் சொல்வார் சதாசுகர்.

"சரி! நன்றாக இடங் கொடுங்கள். எனக்கென்ன? உங்கள் கையைப் பிடித்து நான் தடுக்கவில்லை. கடைசியில் நீங்கள் தானே கஷ்டப்படப்போகிறீர்கள்? உங்களைத்தானே அவன் தொந்தரவு செய்யப் போகிறான்!" என்பாள் சாருமதி.

சதாசுகர் ராமுவைத் தூக்கி அன்புற ஆலிங்கனம் செய்து கொண்டே, அவன் முகத்தை முத்தமிட்டு, "ஏண்டா, ராஜாக் கண்ணு! உன் அம்மா இப்படிச் சொல்கிறாளே, நீ என்னைத் தொந்தரவு செய்வாயா?" என்று கேட்பார்.

ராமு தலையைப் பலமாக அசைத்து, "ஆமாம்! செய்வேன். கத்தாயம் செய்வேன்!" என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்வான்.

"அசடு அல்லவா அப்படிச் செய்யும்! நீ அசடோ, சமர்த்தோ?" என்று கேட்பார் சதாசுகர்.

"நீதான் சொல்லேன்!" என்று அவரையே மடக்கிப் பரீட்சிக்கத் தொடங்கி விடுவான் ராமு.

"நீ அசடு..." என்பார் சதாசுகர்.

"நீ?" என்று கேட்பான் ராமு.

சதாசுகர் ஞானோதயம் பெற்றவர் போல், "நான் அசடுதான். உன்னை அசடு என்று சொன்ன நான் சமர்த்தாகவா இருக்க முடியும்?" என்று சொல்லிவிட்டுப் பெருத்த யோசனையில் மூழ்கி விடுவார்.

சதாசுகர் சாப்பிட உட்கார்ந்து விட்டாரானால், ராமு அவர் மடியில் உட்கார்ந்து கொண்டு அவருடைய தாடியுடன் விளையாடத் தொடங்கி விடுவான். சிலசமயம் கையில் ஒரு காகிதத்தைக் கொண்டு வந்து கொடுத்து, "தாத்தா! எனக்குக் காகிதக் கப்பல் பண்ணித்தர்றியா?" என்று கேட்பான். அவர் காகிதக் கப்பல் செய்து கொடுக்கச் சிறிது நேரம் அதிகமாகி விட்டால், "தாத்தா ரொம்ப ரொம்பச் சோம்பேறி. மூக்குப் பிடிக்கச் சாப்பிடத் தெரியுமே தவிர வேலையொன்றும் செய்யத் தெரியாது!" என்பான்.

அந்தப் பதிலை விரும்பாத சாருமதி ஆத்திரத்துடன் அவனை விழித்துப் பார்ப்பாள். அவன் அதற்குச் சிறிதும் அஞ்சாதவன் போல், "நீ ரொம்பப் பொல்லாதவள்!" என்பான்.

"யார் பொல்லாதவள்? நீதான் போக்கிரி!". என்பாள் சாருமதி.

ராமு சட்டென்று, "இல்லை, நான் ராஜா! நீ போக்கிரி! தாத்தா போக்கிரி! நீயும் சோம்பேறி! தாத்தாவும் சோம்பேறி!" என்று சொல்லிவிட்டுச் சதாசுகருக்குப் பின்னால் ஓடிப்போய் ஒளிந்து கொள்ளுவான். பிறகு அவருடைய தோள்பட்டை வழியாகத் தன்னுடைய சின்னஞ்சிறு தலையை நீட்டி, "இப்பொழுது யாரை அடிப்பாய்? நான் தாத்தாகிட்டே இருக்கிறேனே!" என்பான்.

ராமுவின் இந்தப் பால்ய லீலைகள் சதாசுகரை இனந்தெரியாத இன்ப லோகத்துக்கே இழுத்துச் சென்று விடும். காளைப் பருவத்துக் காதற் கற்பனைகளும் இன்பக் கனவுகளும் கூட இந்த இன்பத்துக்கு ஈடாகாது. சதாசுகர். அந்த இளம் பாலகனின் இன்ப விளையாட்டுக்களிலே மெய்ம் மறந்து மூழ்கி விடுவார். இந்த உலகம் அவருக்குப் பூலோக சொர்க்கமாகத் தோற்றமளிக்கும். 'நமக்கோ வயதாகி விட்டது. காடு 'வா, வா' என்கிறது, வீடு 'போ, போ!' என்கிறது. நாம் இப்படி யிருப்பதை யாராவது பார்த்தால் என்ன நினைப்பார்கள்?' என்ற சிந்தனையே அவருக்குச் சிறிதும் உண்டாவதில்லை.

ராமுவுடன் விளையாடுவதற்குத் தான் அவருக்குப் பொழுது சரியாக இருந்தது. சிலசமயம் ராமுவை முதுகின்மேல் உட்கார வைத்துக்கொண்டு தாம் குதிரையாகிவிடுவார். சிலசமயம் கரடிபோல் குதித்து அவன் மனத்தை மகிழ்விப்பார். சிலசமயம்அவனுடைய பிடிவாதம் தாளாமல் தம் தலையில் காகிதத் தொப்பி ஒன்றை வைத்துக் கொண்டு கூத்தாடுவார். சிலசமயம் பூனையாக மாறி 'மியாவ், மியாவ்,' என்று கத்துவார். மாசுமறுவற்ற அன்பின் இந்த இன்பக் காட்சிகளைக் கண்டு பிரிவுத் துயரினால் வாடும் சாருமதியின் உள்ளங்கூடப் பெருமிதத்தினால் பூரித்து ஆனந்தார்த்தனம் புரியத் தொடங்கி விடும். (தொடரும்)



திருச்சி உலகநாதன்

3. உழைத்தால் உண்ணலாம்!

சுகி

சித்திவிநாயகம் தம் மனைவியின் குணம் அறிந்தவர். அதனால் அவர் ஒரு காரியம் செய்திருந்தார். ஆயிரம் ரூபாய் பணத்தை வீட்டுக்குக் கொண்டு வராமல், ஒரு வட்டிக் கடையில் உலகநாதன் பெயருக்குப்போட்டு, அதற்குள்ள வட்டியைத் திருச்சியிலுள்ள தம் மனைவியின் பெயருக்கு அனுப்பச் சொல்லியிருந்தார். பணம் அனுப்பச் சொல்லி உலகநாதன் கடிதம் எழுதவேண்டும். அப்படி ஏற்பாடு. மாதா மாதம் பணம் வந்து கொண்டிருந்தது. மூன்றும் மாதம் ஆரம்பமான போதுதான், சிறு தொல்லை வந்தது.

அன்றைக்குப் பள்ளிக்கூடத்துச் சம்பளம் கட்ட வேண்டிய தினம். 'உலகநாதன் படிக்கப் போவதால் சம்பளம் ஒரு ரூபாய் கட்ட வேண்டியதாகிறது. அதை மிச்சம் செய்யலாம்; அதே சமயம் அவன் வீட்டில் இருந்தால் இன்னும் வேலை செய்வான். போதாக்குறைக்கு மாட்டை ஓட்டிக் கொண்டு போகும் வேலையாளுக்குக் கொடுக்கும் சம்பளமும் அதிகமாக மிஞ்சும்' – இவ்வெண்ணங்கள் ஏற்கனவே இருந்து வந்தன. இதற்கு ஏற்றமாதிரி அந்த மாதம் பள்ளிக்கூடத்து 'பிராகரஸ் ரிப்போர்ட்டு' வந்த போது சீனுப் பயல்,

பொன்னுரங்கம் இருவரையும்விட எல்லாப் பாடங்களிலும் அதிக மார்க்கு வாங்கி யிருந்தான் உலகநாதன். தன் பிள்ளைகளைவிட வகுப்பில் அதிக மார்க்கு வாங்கி யிருந்ததில் அசூயை; அதைவிடத் தன் பிள்ளைகள் வாங்கி வந்த பேப்பரில் இன்னும் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று தலைமையாசிரியர் எழுத்தும் இருந்தது. ஆகவே, அவளுக்கு ஆத்திரம் அதிகமாக வளர்ந்தது.

"கடன்காரன்களா? அநாதைப் பயல் படிக்கிறான். உங்களுக்கு அறிவில்லே, துப்பில்லே. படிக்காமல் என்ன செய்தீர்கள்? உங்களுக்கு அறிவு எங்கே போச்சு?" என்று இரைந்தும் திட்டியும் பேச்சை ஆரம்பித்தாள். அன்றைக்குத்தான் கடைசி தினம்; சம்பளம் மறுநாள் கட்டக் கூடாது. கட்டினால் அபராதம் செலுத்த வேண்டும். பிள்ளைகள் கொண்டு வந்த முன்னேற்ற அட்டவணையினால் அவள் கோபத்துடன் கொதித்துக் கொண்டிருந்ததால் அன்றைக்குச் சம்பளம் கட்ட முடியாது என்று சொல்லி விட்டாள். அவளுக்கு உலகநாதன் அதிக மார்க்கு எடுத்திருந்ததில் கோபம்.

மறுநாள் சம்பளம் கட்டித்தான் ஆக வேண்டும். ஆனால், இதற்கும் ஒரு கஷ்டம் குறுக்கிட்டது. எப்பொழுதுமே ஜானகியம்மாளுக்குக் கடைசித் தினத்தில்தான் சம்பளம் கொடுக்க மனம் வரும்; அதுவரையில் அந்தப் பணத்தை வட்டிக்கு விட்டு வைத்தல் நாலணா எட்டணா சம்பாதிக்க ஆசை. அவன் மறுநாள் தேவைப்படும் பணத்துக்கு அவஸ்தைப்பட்டுக்கொண்டிருந்த சமயம் உலகநாதத்துக்கு உரிய தொகை மணியார்டர் வந்தது. பத்து ரூபாய் வந்ததும் உலகநாதனின் மனம் சந்தோஷத்தில் ஆழ்ந்தது.

"சித்தி! பள்ளிக்கூடச் சம்பளம் கட்ட வேண்டும். பணம் கொடு."

"உன் பணம் வந்ததும் உனக்குத் தெம்பு வந்து விட்டதா? அதிலே ஐந்து ரூபாய்கள் எங்கள் பணம். ஆகவே நீ துள்ளாதே" என்றாள். வாயடைத்துப் போனான் அவன். சித்தப்பா சித்திவிநாயகம் சொன்ன அறிவுரைகள் நினைவில் வந்தன.

"கொடுத்தால் கொண்டு போகிறேன். இல்லாதுபோனால் வேணும்."

மூன்று பிள்ளைகளுமாகப் பன்னிரண்டு ரூபாய் சம்பளம் கொடுக்க வேண்டும். மூக்கால் அழுது, இன்னும் இரண்டு ரூபாய்கள் சேர்த்துக் கொடுத்தாள். இதிலே உலகநாதனுக்கு ஏழையென்பதால் அரைச் சம்பளம். இன்னும் சீனு, பொன்னுரங்கம் இருவருக்கும் சர்க்கார் பணம் பட்டாளத்திலிருந்து சம்பளச் சலுகையாக வரும். அதுவும் வரவில்லை. வந்தால் கட்டிய பணத்தைத் திரும்பக் கொடுத்து விடுவார்கள். திரும்ப வரப்போகும் பணத்துக்காகத்தான் அவள் இத்தனை கஷ்டப்பட்டாள்! ஆனால் பொன்னுவுக்கு மட்டும் பணம் சர்க்கார் கொடுக்க மாட்டார்கள். அவன் இப்போது மூன்றும் ஆண்டாக ஒரே வகுப்பில் இருக்கிறானே! யார் சலுகை கொடுப்பார்கள்?

ஜானகியம்மாளுக்குத் தன் பிள்ளைகள் மக்குப் பிள்ளைகளாக இருக்கின்றன; உலகநாதன் நன்றாகப் படிக்கிறானே என்று மனக் கஷ்டமாக இருந்தபடியால்



அவனைப் படிப்பை விட்டு நிறுத்துவதற்கு வழிவகைகளை யோசித்துக் கொண்டிருந்தாள். பிள்ளைகள் அனைவரும் பள்ளிக்கூடம் போய்விட்டால், ஜானகியம்மாள் ஒரு பொய்த் தூக்கம் போடுவது வழக்கம்; அந்தச் சமயம் பக்கத்து வீட்டுப் பங்காரு அம்மாள் பேசிக் கொண்டிருக்க வருவாள். இவளுடைய விசேஷ குணம் யாருக்கு எது பிரியமோ, அதையே சாந்து சேர்த்துப் பூசிவிடுவாள். ஜானகியின் மனம் வேதனைப் படுகிறதை யூகித்த பங்காரு அம்மாள், "என்ன கவலையாக இருக்கிறாய், ஜானகி?" என்று ஆரம்பித்தாள்.

"கவலையில்லாத சாப்பாடு. அதிலேயும் நீ காய்ச்சுகிற நெய்க்குத்தான் மணம் உண்டு. வெறும் துவையல் அரைத்தாலும் அதற்கே ஒரு தேங்காய் ஆகுமே?" இவ்வாறு இருவரும் பேசிக்கொண்டு பொழுதைப் போக்கினார்கள். அரைமணி நேரத்தில் உலகநாதன் உருப்படாமல் இருக்க ஒரே வழி படிப்பை நிறுத்த வேண்டும் என்பதை வத்தி வைத்து விட்டாள். ஜானகியும் அவ்வாறே தீர்மானம் செய்து விட்டாள்.

அன்று மத்தியானம் பிள்ளைகள் சாப்பிட வந்ததும், வழக்கம்போல் சீனு, பொன்னு இருவரும் உள் கட்டில் உட்கார்ந்து உண்டனர். உலகநாதன் மட்டும் வேறு அறையில் உட்கார்ந்து உண்டான். அன்றைக்குப் பஜ்ஜி சுட்டிருக்கும் வாசம் மூக்கைத் துளைத்தது. ஆனால் ஒரு பஜ்ஜிகூட அவன் தட்டில் விழவில்லை. கேட்கவும் பயம். இவ்வாறு மனசைக் குழப்பிக்கொண்டு சாப்பிட்டபோது, "டேய், உலகு! நீ பள்ளிக்கூடம் போக வேண்டாம். அவர்கள் மட்டும் போகட்டும்" என்று சொன்னாள் ஜானகி.

பள்ளிக்கூடத்தில் மட்டுமே அவன் சித்தியை மறந்து சில மணி நேரம் வாழ முடிந்தது. அதனால் அவனுக்குத் தலையில் நெருப்பை அள்ளிப் போட்டதுபோல் இருந்தது.

"ஏன் சித்தி? ஏதாவது வேலை இருந்தால் பள்ளிக்கூடம் விட்டு வந்ததும் செய்கிறேன்."

"உனக்கு ஆகிற செலவுக்கு இங்கே யார் பணம் போடுகிறது? பள்ளிக்கூடத்தை நிறுத்தி விட்டேன். போக வேண்டாம்."

"இல்லை, சித்தி! வாத்தியார் என்னை நாடகத்தில் பயிற்றியிருக்கிறார். நான் இல்லாவிட்டால் நாடகம் நடக்காது. இதனால் கட்டாயம் பள்ளிக்கூடம் போக வேண்டும்."

"அட, மூதேவி! நீ கெட்ட கேட்டுக்கு நாடகம் வேறு கேட்கிறதா? நீ போக வேண்டியதில்லை. வீட்டிலே உண்டானதை உண்டு, வேலை பார்த்துக் கொண்டிரு."

"ஆகட்டும், சித்தி!"

சீனுப் பயல் மட்டும் அன்றைக்குப் பள்ளிக்கூடம் போகாது பிடிவாதம் செய்தான். அவனும் போகமாட்டேன் என்று பிடிவாதம் செய்த போது, அவளுக்குத் தொல்லையாகப் போய்விட்டது. அன்று மட்டும் உலகநாதன் போய்த்தொலையட்டும் என்று அனுப்பி வைத்தாள். சீனுப் பயல் தாய்க்குத் தெரியாமல் ஒரு பஜ்ஜியைக்கொடுத்து, "அண்ணா! நீ பள்ளிக்கூடம் வர வேண்டும் என்று இந்தப் பஜ்ஜிக்காகத்தான் சொன்னேன்" என்று கூறிச் சிரித்தான். தம்பிக்குத் தன் மீதுள்ள அன்பை எண்ணி இடுப்பைச் சுற்றிக் கையை வளைத்து அணைத்துக் கொண்டு பள்ளிக்கூடம் போனான் உலகநாதன்.


மறுநாள் பெரிய புயல் வீட்டில் வீசுவதற்கு இருப்பதை உலகநாதன் எங்கே கண்டான்?

குழாயில் தண்ணீர் குடித்துக் கொண்டிருந்த சமயம்; பொன்னுவின் இரும்புக் கரங்கள் குரல்வளையைப் பற்றியதும் உலகு திடுக்கிட்டான். தான் செத்து விடுவது அன்றைக்கு நிச்சயம், இனி சித்தியின் பிரம்படி விழப்போகிறது :—இவ்வாறு நிச்சயம் செய்து கொண்டிருந்த சமயம் எப்படியோ தான் தப்பியது உண்மை என்றுஅறிந்ததும் எடுத்தான் ஓட்டம். அவன் ஆயுளில் அப்படி வேகம் ஓடியதே இடையாது. பீமநகர், கண்டித் தெருக்கள் வழியாகப் பாலக்கரை நோக்கி ஓடினான். அவன் ஓடும்போது பயந்து ஓடுகிறதாக எவரும் எண்ணவில்லை. எதையோ எடுத்துக்கொண்டு ஓடுவதாக, எண்ணினார்கள். அவன் அதிர்ஷ்டம் குறுக்கே நிற்பதுபோல் ஈரோடு செல்லும் வண்டி புகையைக் கக்கிக் கொண்டு பாலக்கரையை விட்டுப் புறப்படத் தயாராக நின்றது. உலகநாதன் கண்டித் தெரு வழியாகப் புகுந்து, செக்கடியைத் தாண்டினான். செக்கில் சுற்றும் மாடுகள் மிரண்டு தடம் புரண்டன. செக்காட்டிக் கொண்டிருந்த செட்டியார் யாரோ பிண்ணாக்குக் கட்டியை எடுத்துக் கொண்டு ஓடுவதாக நினைத்துக் கூக்குரல் போட்டு விட்டார்.

ஆபீஸ் மற்றும் வீட்டிற்கான ஆல்-ஸ்டீல் உபகரணங்கள்


ADDISON

"Hallmark of Quality"



ட்யூபுலர் மேஜை :

டக்கான தோற்றம் வேலை செய்ய சௌகரிய மானது. ஆபீஸ்களுக்கு உபயோகமானது.



ஸ்டாண்டர்ட் பீரோக்கள் :

ரம்மியமான கலர்களில் கிடைக்கும். சாமான்களை சுத்தமாகவும் பத்திரமாகவும் இருக்க உதவுகிறது



மடக்கும் நாற்காலி :

அழகானது. சுலபமாக மடக்கக் கூடியது. மற்றும் உறுதியானது.

அடிஸன் & கோ., (பிரைவேட்) லிமிடெட்

மதராஸ் - - - - - - பெங்களூர்



பாவுஸேரி பெனிபிட் சிட் பண்டு (பிரைவேட்) லிமிடெட்

ந. சிங்கராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி.
தபால் பெட்டி நெ. 414 ... மதராஸ் - 5
தந்தி : 'EVERMANS'... போன் : 85834

சரக் கடைசி தேதி 12-2-1959 ... முதல் ஏலத் தேதி 14-2-1959

25 மாதங்கள்	மாதாந்திர சீட்டுகள் (2-வது சனிக்கிழமை ஏலங்கள்)	25 அங்கத்தினர்கள்


வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை	வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை
B	ரூ. 100/-	ரூ. 2,500/-	E	ரூ. 20/-	ரூ. 500/-
C	ரூ. 50/-	ரூ. 1,250/-	F	ரூ. 15/-	ரூ. 375/-
D	ரூ. 25/-	ரூ. 625/-	G	ரூ. 10/-	ரூ. 250/-

விலாசம் தெளிவாக எழுதிக் கேட்பவர்களுக்கு எங்கள் விதிகள் இலவசமாக அனுப்பப் படும். சீட்டில் அங்கத்தினர்களைச் சேர்த்துக் கொள்ளும் உரிமை பண்டைச் சேர்ந்தது.

(போர்டார் உத்திரவுப்படி.) எம். வி. சுப்ரமணியம், மானேஜிங் டைரக்டர்

டில்லி கிளை ஆபீஸ்கள் : B-6, பிளாக் III, ஆஸப் அலி ரோடு, புது டெல்லி-1. ● 10197, அஜ்மல்கான் ரோடு கரல்பாக், புது டெல்லி-5 ● பெங்களூர் கிளை ஆபீஸ்: "தேசிகத் பில்டிங்ஸ்", விக்டர் ஜூபிலி பார்க் ரோடு, பெங்களூர்-2 ● பம்பாய் கிளை ஆபீஸ்: "விஜய விஹார்" 17-A, லைமன்-மாதுங்கா எஸ்டேட் (கிங்ஸ் ஸர்க்கிள் ரயில்வே ஸ்டேஷனுக்கு எதிரில்) பம்பாய்-22

எங்கள் சேவை உங்களுக்குத் தேவை


டால்கம் பௌடர்
யு டி கோலான்
லிப்ஸ்டிக்
பேஸ் பௌடர்
டஸ்டிங் பௌடர்
Lakmé
லக்மே
அழகின் அலங்காரத்திற்கென
ப்ரஞ்சு முறையிலிருந்து
தயாரிக்கப்பட்ட சாதனங்கள்
Lakmé
லக்மே ஒரு டாடா தயாரிப்பு

"பிடி பிடி திருடன்!' பிண்ணாக் குத்திருடன்!" என்று கத்தினார்கள்.

நல்லவேளையாக உலகநாதன் கைகளில் பிண்ணாக்கு இல்லாததால் பிழைத்தான். அவன் ஓட்டம் தடைப் பட்டது. லெவல்கிராசிங், கதவுக்குள் நுழைந்து மறு பக்கம் ஓட இருந்த போது ரயிலுக்குக் குறுக்கே வந்ததற் காக 'கேட்கீப்பர்' கத்தினான்.

"வராதே...வராதே! மெயில் புறப் படப் போகிறது."

மறுபக்கம் தாண்டாது ரயில் நின்ற திக்கு நோக்கி ஓடத் தொடங்கினான். எங்கே போகிறோம்? ஏன் போகிறோம்? இவை தெரியாது திசை மாறித் திண் டாடினான். அவன் ஓடி வருவதைக் கண்ட ஒருவர் ரயிலுக்கு வருவதாக எண்ணிக் கொண்டு கைகொடுத்து மேலே தூக்கிவிட்டார். அப்பாடா! பிழைத்தான். இனி பொன்னுரங்க எமன் தொடர மாட்டான். ஈரோடு எக்ஸ்பிரஸ் புகை விட்டது. விசில் அடித்தது. தடதடவெனச் சக்கரங் கள் நகர்ந்தன. டிக்கட் பரிசோதகர் பிளாட்பாரத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்தார். உலகநாதன் எந்த வண்டிக்குள் இருந்தானோ அந்த வண் டிக்குள் ஏறிவிட்டார். உலகநாதன் உடம்பு நடுங்க ஆரம்பித்தது. திரு நெல்வேலியிலிருந்து அவனுடைய சித்தப்பாவோடு திருச்சிக்கு வந்தான் அல்லவா? அன்று ரயிலில் நடந்த ஒரு காட்சி அவன் மனசில் ஓடியது.

டிக்கட் இல்லாத வாலிபன் ஒருவனை அடி அடியென்று அடித்தார். நட்ட நடு நிசியில் ரயிலைவிட்டு இறக்கி விட்டார் டிக்கட் பரிசோதகர்.

"ஏன் சித்தப்பா! இவன் எங்கே போவான்? இருட்டாக இருக்கிறதே?"

"டிக்கட்டு இல்லாதவர்களை ரயிலை விட்டு இறக்கிவிடுவார்கள். பெரியவர் களுக்கு ஜெயில்வாசம் உண்டு."

"ஏன் டிக்கெட் எடுக்கவில்லை?"

"அவனிடம் பணம் இல்லை."

"ஏன் பணம் இல்லை?"

"சும்மா வா. தொணதொணக் காதே" என்று எரிந்து விழுந்தார். நட்ட நடு நசியில் அழுதுகொண்டே வாலிபன் இறங்கியபோது அழுதான். இப்போது இவனும் அழுதான். டிக்கெட் பரிசோதகர், "ஏண்டா', தம்பி! உன்னைப் பார்த்தால் நல்லவ னாக இருக்கிறது. டிக்கட் இல்லாது ஏன் வண்டி ஏறினாய்?"

"நான் இறங்கிப் போய் விடு கிறேன். என்னை அடிக்காதீங்க, சார்! அடிக்கமட்டும் செய்யாதீங்க."

பாரதி சங்கம



சென்ற மாதம் ஹைதராபாத் பாரதி சங்கத் தின் ஆதரவில் ராஜாஜியின் எண்பதாவது பிறந்த நினைவிழா வெகு விமரிசையாகக் கொண் டாடப் பட்டது. ராஜாஜியின் உருவப் படத் தைக் கல்வி மந்திரி திரு பட்டாபிராமராவ் திறந்து வைத்தார். ஆந்திரப் பிரதேச சபா நாயகர் திரு காளேஸ்வரராவ், பப்ளிக் சர்வீஸ் கமிஷன் அங்கத்தினர் திரு பாகூர் அலி மிர்ஸா, வலவிலா கோபாலகிருஷ்ணய்யா முதலியோர் ராஜாஜியின் சேவைகளை எடுத்துரைத்தனர்.

டிக்கட் பரிசோதகர் சிரித்தார். பையன் அடிக்குப் பயந்து வண்டிக் குள் வந்திருப்பதை உணர்ந்து கொண் டார். அவனை அடிக்க வேண்டுமென்று திட்டம் இட்ட பிரயாணிகள் பையன் நல்லவனாக இருக்கிறான் என்றும் சொன்னார்கள். அதனால் அடிபடாது பிழைத்தான். டிக்கட் பரிசோதகர் நேரம் போக்குவதற்காக. "எதற்காக எங்கே ஓடுகிறாய்?" என்று கேட்டார்.

"எனக்கு அம்மா அப்பா இல்லை. என் சித்தப்பா ராணுவத்தில் வேலை. என் சித்திக்கு நான் நன்றாகப் படிப் பது பிடிக்கவில்லை. நேற்று சம்பளம் கட்ட வேண்டும், பணம் கொடுக்க மாட்டேன் என்று சொல்லிவிட்டாள். மத்தியானம் பள்ளிக்குப் போனேன். என்னுடைய வகுப்பு ஆசிரியர், 'டேய் உலகநாதா! நீ நன்றாகப் படிப்பதால் பள்ளிக்கூடச் சம்பளம் கட்ட வேண் டாம். இனி உனக்கே சர்க்கார் பணம் தருவார்கள்' என்றார். இதைச் சாயங் காலம் சித்தியிடம் சொன்னேன். அவளுக்குக் கோபம் இன்னும் அதிக மாகிவிட்டது. அவள் பிள்ளை பொன்னு ரங்கம் ஒரே வகுப்பில் வாசித்துக் கொண்டிருந்தான். நான் சம்பளம் இல்லாது படிக்கப் போவதா என்று ஆங்காரப்பட்டாள். இரவு முழுக்கப்

பட்டினி. காலையிலும் எனக்கு ஒன்றும் சாப்பாடு போடவில்லை. நான் புத்தகத்தை எடுத்துக் கொண்டு கிளம்பினேன்.

"'புத்தகம் எடுத்தால் அடி கிடைக்கும். ஏதாவது கடைகண்ணிக்குப் போய் வேலை தேடி வா. அதுதான் உனக்குக் கதி. இனிமேல் பள்ளிக்கூடத்தை மறந்துவிடு. மறந்துவிடு' என்று கூறினான்.

"எனக்கு அழுகை வந்தது. சித்தியிடம் கெஞ்சினேன். சித்தி கேட்கவில்லை. அவள் பிடிவாதமாக இருந்தாள். புத்தகமும் கொடுக்கமாட்டேன் என்றாள். என்னை அடிக்க வந்தாள். எனக்குப் பிறர் அடிப்பது மட்டும் பிடிக்காது. நான் தப்பிக் கொண்டு தெருவுக்கு வந்தேன். தெருக்கோடியிலே ஒரு புளியமரம். அதன் அடியிலே போய் உட்கார்ந்து விட்டேன். நேரமும் வெய்யிலும் அதிகமாகிக் கொண்டு வந்தன. என் சித்தியின் சின்னப்பயல் சீனு மிகவும் நல்லவன்; உத்தம குணம் உள்ள சிறுவன். அவன் எனக்குத் திருட்டுத்தனமாக இட்டிலி கொண்டு வந்தான். இதை எப்படியோ துப்புக் கண்டுபிடித்துச் சீனுவின் அண்ணன் பொன்னு வந்தான். அந்த எமன் என்னைப் பிடித்து விட்டான். அவனிடம் தப்பிக் கொண்டு ஓடி வந்தேன். ரயில் குறுக்கிட்டது. பிளாட்பாரத்தில் ஓடி வந்தேன். இவர் உள்ளே இழுத்து விட்டார். ஏறிவிட்டேன். என்னை அடிக்க வேண்டாம், டிக்கெட் பரிசோதகர் ஐயா!" என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டான்.

வண்டியும் கோட்டை நிலையத்துக்குள் வந்து நின்றது.

"இறங்கு கீழே. போய் உன்னுடைய சித்தியிடம் மன்னிப்பு கேள். நல்ல பிள்ளையாகப் போய்ச் சேர். படித்து முன்னுக்கு வா. இப்படி ரயிலுக்குள் ஏறி உதைபட்டுச் சாகாதே. உன்னைப் போல் ஓடுகிறவர்கள் பட்டினி கிடப்பார்கள்; உடுத்த உடை கிடையாது; கெட்ட பழக்கம்வரும். போ நடந்து" என்று அவனைக் கொண்டுவந்து வெளியே விட்டார். உலகநாதன் அடிபடாமல் வெளியே வந்து நின்றான். அவன் அந்தப் பகுதிக்குப் புதியவன். தொலைவில் தெரிந்தது கோட்டை; மாதா கோவில் உச்சிக் கோபுரம்; அதற்கு அப்பால் தெரிந்த உச்சிப் பிள்ளையார் கோவில், இரண்டையும் சுற்றிப் பார்க்க அந்தப் பிஞ்சு உள்ளத்துள்ளே ஆசை பிறந்தது. பசி மறந்தது; தனது சித்தியையும் பள்ளிக்கூடத்தையும் மறந்தான்.

ஆகாயத்தைப் பார்த்தபடியே நடந்தான். வானம் மப்புமந்தாரமாக மேகப் பொதிகள் நகர்ந்து கொண்டிருந்தன. வெய்யில் சுள்ளென்று உரைக்காத நேரம். ஆகவே மனத்துக்குக் குதூகலமாக இருந்தது. அந்த வேளையில் ஒரு முரட்டுக் குரல். "டேய் கூலி?" என்று கத்தினார். உலகநாதன் திரும்பிப் பார்த்தான்; ஆனால் நகரவில்லை. "கூலி!" என்ற குரல் கேட்டு வில்லை போட்ட போர்ட்டர்கள் ஓடி வந்தார்கள். கூப்பிட்டவரோ ரயிலுக்குள்ளிருந்து தமது படுக்கையைச் சுமந்து வந்தவர். போர்ட்டர் கூலி அதிகமாகக் கேட்பான் என்பதால் வெளியே வந்தார். ரயிலுக்கு வெளியே கூலிக்காரப் பையன்கள் நிற்பார்கள். உலகநாதன் அவர்களில் ஒருவன் என்று நினைத்தார். ஆகவே சின்னப் பையனை இருந்த உலகநாதனைக் கூலியென்று கூப்பிட்டார். அவனுடைய சட்டையும் பழசு; அதோடு கிழிசல். அதனால் அவர் கண்ணிலே கூலிக்காரப் பையனாகப் பட்டது. அவனும் பசியை எண்ணி அந்தச் சுமையைத் தூக்கிவர இசைந்தான்.


இதனாலே கடவுள் ஒரு பிரயாணியை அனுப்பித் தனக்குக் காசு கொடுக்கிறார் என்று எண்ணிக் கொண்டு நடந்தான். அவன் உள்ளத்துள்ளே உழைக்காமல் நாம் சாப்பிட முடியாது என்ற எண்ணம் விழுந்தது. ஆகவே பதில் பேசாது அவர் பின்னே நடந்தான். சுமை அழுத்தி உச்சி வலித்தது; கழுத்து இறுகியது; கால்கள் பின்னித் தள்ளாடித் தூக்க முடியாமல் கஷ்டப்பட்டு அவர் பின்னால் போய்க் கொண்டிருந்தான்.

கூலியை மிச்சம் பிடிக்க எண்ணி அவன் தலையில் வைத்தார்; உலகநாதனின் கஷ்டத்தை அறிந்தார். சின்னப் பயல் தலையில் சுமத்தி விட்டோமே என்ற இரக்கம் வந்து. "ஏண்டா கனக்கிறதா?" என்று கேட்டார் பரிவோடு.

"இல்லை, சார்! கனக்கவில்லை" என்றான். வாய் அவ்வாறு கூறியதே தவிர, அவன் கால்கள் வளைந்து கொடுத்தன. உச்சியில் நெருப்புப் பிடித்தது போல் வலி.

"ஏண்டா, சோதாப்பயலே! காலையிலே 'நாஷ்டா' பண்ணலையா?"

உலகநாதனுக்கு இதற்கு அர்த்தம் புரியவில்லை. (தொடரும்)





திருவெண்காடு கல்கி ஏஜண்ட் திரு கே. பி. ரங்கநாத நாயுடுவின் புதல்வி சௌ. ஜயலக்ஷ்மிக்கும் திரு மோகனரங்கனுக்கும் திருமணம் நடந்தது.

பம்பாய் அக்கௌண்டெண்ட் ஜெனரல் காரியாலய சூப்பரேண்டு திரு பி. பி. வெங்கடேசுவரனுக்கும் சௌ. விஜயலக்ஷ்மிக்கும் விவாகம் நடைபெற்றது.

வாழ்க மணமக்கள்





மேலப்பாலையூர் திரு எம். எஸ். வைத்தியநாதய்யரின் புதல்வி சௌ. கமலாம்பாளுக்கும் திரு பிச்சுவுக்கும் செம்மங்குடியில் திருமணம் நடந்தது.

திரு வி. ரகுபதி அய்யர் அவர்களின் குமாரர் திரு ஆர். கிருஷ்ணமூர்த்திக்கும் சௌ. பார்வதிக்கும் கல்யாணம் அதி விமரிசையாக நடைபெற்றது.





சப்-இன்ஸ்பெக்டர் திரு ரங்கசாமி அவர்களின் புதல்வர் திரு எஸ். ஆர். துரைராஜுவுக்கும் சௌ. தாராபாய்க்கும் சிறப்பாகத் திருமணம் நடந்தது.

திரு பரமசாமி செட்டியார் அவர்களின் புதல்வர் திரு சிதம்பரநாதனுக்கும் சௌ. ராஜலட்சுமிக்கும் கொழும்பில் விவாகம் விமரிசையாக நடைபெற்றது.


வசீகரத்திற்கும்
வனப்பிற்கும்...
TALC
Powder
Musk
Soap
சந்திரகாந்தா
டிராலி
டால்க் பவுடர்
மஸ்க் சோப்
AVRA-588

ஒளி பெற்ற கண்கள்

வாசவன்

"தாத்தா!..."

சாமா கண்ணிமைகளைத் திறக்க முயன்றார். அத்தனை சுலபமாக முடியவில்லை. இழுத்துப் பசை போட்டு ஒட்டி வைத்தது போன்ற இறுக்கம். நாலைந்து தடவைகள் அப்படியும் இப்படியுமாகக் கண்களை உருட்டி விட்டதும் இமைகள் ஒரு வழியாகத் திறந்து கொண்டன.


எதிரே சற்றுத் தூரத்தில் மருள விழித்தபடி நின்று கொண்டிருந்தாள் ஏழு வயது கமலி. தலையிலிருந்து நீர் சொட்டுச் சொட்டாக வடிந்து கொண்டிருந்தது. கவுன் ஒரே தெப்பக்காடு. உடம்பில் நடுக்கமான நடுக்கம்.

சாமா வெளியே நோக்கினார். மழை கொட்டிக்கொண்டிருந்தது. மரங்களும், செடிகளும் 'உஸ்'ஸென்ற ஒலியுடன் தலையைச் சுற்றி ஆடிக் கொண்டிருந்தன. 'இந்தக் கொட்டும் மழையில் கமலி பங்களாவிலிருந்து கிளம்பிப் பின் பக்கம் இருக்கும் இந்தக் கொட்டகைக்கு ஓடி வந்திருக்கிறாளே!'

பொங்கி வந்த அன்பால் சாமாவின் கண்கள் நனைந்தன.

"கமலி! ஜுரத்தோடு இந்த மழையில் வரலாமா?" - வின்னென்று பாறையாகக் கட்டிப்போயிருந்த தொண்டையைப் பிரயாசையோடு திறந்து கேட்டார் சாமா. ஆனாலும் அவர் குரலிலே அன்பு இழையோடியது.

"மழை விடுகிறவரைக்கும் காத்திருந்தால் எல்லோரும் விழித்துக் கொண்டு விடுவார்களே! அப்புறம் என்னை இங்கே வர விடுவார்களா?" அந்தக் களங்கமற்ற முகத்தில் ஒரு பெரிய சாதனையைச் செய்துவிட்டது போன்ற மலர்ச்சி மின்னியது.



சாமாவின் நாபியை உடைத்துக் கொண்டு ஓர் இருமல் வெளிக் கிளம்பித் தொண்டையில் தெறித்தது. வாய் நிறைந்து விட்டது கோழை. அதை உமிழ்வதற்காகப் பக்கத்தில் இருந்த பளிங்குக் கிண்ணத்தை எடுக்கக் கையைத் தூக்கினார். வீங்கி வழிந்திருந்த கை, தன் கனத்தையே தாங்க

முடியாமல் 'பொத்'தென்று நழுவிக் கீழே விழுந்தது. உச்சியில் நெருப்பை வைத்துச் சுட்டதைப் போல் வேதனை. அதை அனுபவிக்கவாவது உடம்பு இடம் கொடுக்கிறதா? கை, கால், வயிறு இப்படி எங்கெங்கெல்லாமோ வீக்கம். அந்தச் சமயத்தில் கையில் 'நறுக்'கென்று கடித்தது ஒரு சிற்றெறும்பு. கையைச் சிறிது அசைத்தார். அவருடைய பலவீனத்தை அது நன்கு உணர்ந்ததைப் போல், நெஞ்சழுத்தத்துடன் மேலும் மேலும் கடித்துக் கொண்டிருந்தது.

வாயில் கோழை; கையில் எறும்பின் தாக்குதல். மிக மிகச் சிறிய அவஸ்தையைக் கூடப் போக்கிக் கொள்ள முடியவில்லை அவரால். "'இந்தக் குடும்பத்தில் நான் இல்லாவிட்டால் இவர்களால் ஒரு நாளைக்குச் சமாளிக்க முடியுமா?' என்று பெருமைப்பட்டுக் கொண்டு திரிந்தாயே, இப்பொழுது பார்த்தாயா, உன்னையே உன்னால் சமாளித்துக் கொள்ள முடியவில்லை!" என்று தம்மைத்தாமே கேட்டு விட்டு, ஒரு பாட்டம் அழவேண்டும் போலிருந்தது சாமாவுக்கு.

அறியாக் குழந்தையான கமலி இதையெல்லாம் பார்த்துக் கொண்டு சும்மா நிற்கவில்லை. எல்லாம் அறிந்த பராசக்தியைப் போல் சாமாவை நோக்கி ஓடினாள். ஒதுங்கியிருந்த பளிங்குக் கிண்ணத்தை எடுத்து அவர் அருகில் கொண்டு போய் வைத்து, "துப்பு, தாத்தா!" என்றாள்.

உலகம் தெரிந்த வீட்டு மனிதர்களெல்லாம் இந்தக் கிண்ணத்தைக் கையில் எடுக்க அருவருப்பு கொள்கிறார்கள். அவர் ரத்தத்தில் நேரடிச் சம்பந்தப்பட்டவர்களான விசுவநாதன், அருணாசலம், சாம்பசிவம் முதலியவர்களே அந்தச் சமயத்தில் முகத்தைத் திருப்பிக் கொண்டு விடுவார்கள். மற்றவர்களைப் பற்றியோ, வேலைக்காரர்களைப் பற்றியோ கேட்கவே வேண்டாம். இந்தக் குழந்தை மட்டும் ஏன் அப்படியிருக்கவில்லை? ஒரு வேளை உலகம் தெரியாததுதான் காரணமோ!

சாமாவுக்கு அதைத் தெரிந்து கொள்ள வேண்டும் போல் ஓர் ஆசை. "கமலி! என் வியாதியைப் பற்றி உனக்குத் தெரியுமோ?"

"தெரியுமே!"

"இந்த வியாதி என்ன செய்யும், தெரியுமோ?" என்றார் சாமா.

"ஊம்! உன்னை நெருங்கினால் எனக்கும் ஒட்டிக் கொள்ளும்!"

"அது தெரிந்துமா என்னிடம் நெருங்கினாய்? எச்சில் கிண்ணத்தை எடுத்தாய்?"

"தெரிந்துதான் எடுத்தேன். ஏன் தாத்தா, உன்னோடு ஒட்டி இந்தக் குடும்பம் வளரலாம்; உன் பணத்தையொட்டி எல்லோரும் சௌகரியமா யிருக்கலாம். ஆனால் உன் வியாதியிலே மட்டும் ஒட்டிக்காமல் ஒதுங்க வேணுமா? அத்தனையும் நன்றிகெட்ட ஜன்மங்கள், தாத்தா! எனக்கு மட்டும் இதிலே எத்தனை வருத்தம் தெரியுமா? எல்லாருமாகக் கூடி உன்னை ஒதுக்குகிறார்கள் தாத்தா. நானும் உன்னை ஒதுக்கினால் உனக்கு யார் இருக்கிறார்கள்? பாட்டி கூட இல்லையே!"

கமலி எல்லோரையும்விட உலகம் தெரிந்தவள். 'நீ அவல் கொண்டு வா, நான் உமி கொண்டு வருகிறேன்!' என்று கூறும் காரியவாத உலகத்தையும் தெரிந்து கொண்டிருக்கிறாள். சாமாவின் சுருங்கிய நேத்திரம் ஈரத்துக் கண்டது. அவளை அப்படியே வாரி அணைத்துக் கொள்ள அவர் மனம் துடித்தது.

கமலி தன் பிஞ்சுக் கையால் அவர் கண்களைத் துடைத்தாள். சாமா தம் அறுபது வயது வாழ்க்கையிலே எத்தனையோ பேர்களது கண்களைத் துடைத்திருக்கிறார். அவருக்கு எதிரில் தெரியாத நபர் கண்களைக் கசக்கிக் கொண்டு நின்றாலும் பார்த்துக் கொண்டிருக்க மாட்டார். அவர்களுக்கு வேண்டிய ஒன்றைச் செய்து மலர்ச்சியைக் கண்டு மகிழ்வதில் அவருக்கு ஓர் ஆத்ம திருப்தி. கீழே அவர் கட்டையைக் கிடத்தும் வரை தம் கண்ணைத் துடைத்துவிட வேறு யாருக்கும் ஒரு சந்தர்ப்பமாவது கொடுத்தவர் இல்லை. அப்புறம் நிற்காமல் வழியத் தொடங்கிய கண்ணீரைத் தம் மக்கள் துடைப்பார்கள் என்று எதிர்பார்த்தார், பைத்தியக்கார மனிதர்!

ஒவ்வொருவருக்கும் எத்தனையோ வேலைகள்! பெரியவன் விசுவநாதனுக்கு ஒரு வெள்ளைக்காரன் கம்பெனியில் பெரிய மானேஜர் வேலை. இரண்டாயிரம் ரூபாய் சம்பளம். ஐயாயிரம் வேலைக்காரர்களை மேய்ப்பதற்கே அவனுக்குப் பொழுது போதவில்லையாம். அவனுக்குக் கிழத்தின் கண்ணீரைத் துடைக்க எங்கே நேரம்! என்னவோ, இவன் தன்னைச் சர்வேச்வரனாக எண்ணியிருக்கிறான். சொல்லப் போனால் ரூபாய் இரண்டாயிரம் அல்லவா இவனை மேய்த்துக் கொண்டிருக்கிறது?

அடுத்தவன் அருணாசலம் மின்சார இலாகாவில் ஒரு பெரிய இன்ஜினீயர். அவனுக்குத் தான் இல்லாவிட்டால் இந்த உலகமே இருள் அடைந்து விடும் என்ற நினைப்பு. சதா தன்னை ஒளிக் கடவுள் என்று எண்ணி ஊர் சுற்றிக் கொண்டிருக்கிறான். வீட்டுக்கும் வருவதுண்டு. மனைவி மக்களோடு கொஞ்சவும், இன்னும் வருஷத்தை மறந்து விடாமல் குழந்தை பெற வைக்கவும் மறப்பதில்லை அவன். இத்தனை செய்கிறவனுக்குக் கொட்டகைப் பக்கம் திரும்பிப் பார்க்க நேரம் இருப்பதில்லை. அப்படிப் பார்ப்பதென்றாலும் அதற்கு ஒரு நேரம், காலம்.....

இளையவன் சாம்பசிவத்தைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். அவன் பார்க்கிற குமாஸ்தா வேலையைப் பற்றித் தலையில் அத்தனை செருக்கு. இவன் நீட்டிய இடத்தில் முதலாளி கையெழுத்துப் போடுவானாம். இந்தப் பதுமை இல்லாவிட்டால் முதலாளிக் கோபுரம் சரிந்து விடும் என்று மனைவியிடம் பெருமை பேசத் தெரியும். அவளை அலங்கரித்து முன்னால் விட்டுக் கடற்கரைக்குப் போகத் தெரியும். இந்தப் பக்கம் எட்டிப் பார்ப்பதென்றால் 'தலைவிதியே' தான்!

இந்த மூவரையும் சுற்றி இருபது நபர்களுள்ள ஒரு பெரும் ஆலமரமாக வளர்ந்து இணைத்து விட்டது குடும்பம். அங்குள்ளவர்கள் சாமாவிடம் அக்கறை காட்ட வேண்டும் என்று எதிர்பார்க்க முடியாது. எதிர்பார்க்கவும் இல்லை அவர். மனித இதயமற்ற அந்தக் கூட்டத்தில் ஓர் ஒளிச்சுடர் போலக் கமலி இருந்தாள். விசுவநாதனுக்குப் பிறந்து விட்டு இப்படி அன்பு இதயத்தை வைத்துக் கொண்டிருக்கலாமோ?

வாழ்க்கையிலேயே முதன் முறையாகக் கண்ணீரைத் துடைத்து விட்டுக் கொண்டிருந்த கமலியைத் தடுக்க விரும்பவில்லை சாமா. காலம் கடந்து கிடைத்திருக்கும் அந்த ஆறுதலை அத்தனை சீக்கிரம் கலைக்கப் பிரியப்படாமல், தன் துக்கத்தையெல்லாம் பிழிந்து நீராக்கிக்கொண்டிருந்தார்.

"தாத்தா! நீ ஏன் அழறே?" என்று கேட்டு விட்டு அவளும் அழுதாள். அணை போட முடியாத பெரும் வெள்ளத்தைப் போலக் கண்ணீர் புரண்டு வந்தது.

சாமா பதறிப் போனார். 'துடைத்து விட்டவளின் கண்ணீரைத் துடைக்க முடியாதபடி கைகள் அசைக்க இயலாத பாறையாகக் கிடந்தன. யார் யாருக்கெல்லாமோ கண்ணீரைத் துடைத்து விட்டவர் தமக்காகக் கண்ணீர் விடுபவளைப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டுமா? அப்படியே பூமி பிளந்து அவரை விழுங்கிவிடக் கூடாதா?'

"நீ மட்டும் ஏன் அழுகிறாய் கமலி?" குரலோடு கோழையும் வந்தது.

"உன் நிலையை நினைத்தால் உயிரையே விட்டு விடலாம் என்று தோன்றுகிறது. தாத்தா! எப்போதும் உன் பக்கத்திலேயே இருந்து வேண்டியதைச் செய்யவேணும் என்று ஆசைப்படுகிறேன். ஆனால் என்னை யாரும் இங்கே வரவிடாமல் அடிக்கிறா. எனக்கும் உன் வியாதி வரக்கூடாதா என்று சாமியை வேண்டிக் கொண்டிருக்கிறேன். அப்படி வந்தால் என்னையும் இங்கே தூக்கிக்கொண்டு வந்து போட்டு விடுவா. அப்போ யாரும் உன்னிடத்திலேயிருந்து என்னைப் பிரிக்க மாட்டா! அதனாலே எனக்கும்..."

"வேண்டாம், கமலி! உனக்கு வரவேண்டாம். நீ என்னிடம் வராதே! போய் விடு. என்னிடத்திலே அன்பு காட்டாதே! மற்றவர்களைப் போல் நீயும் பிழைத்துக் கொள்!" என்று அலறினார் சாமா.

அதே சமயத்தில் கொட்டகையின் தாழ்வாரத்திலிருந்து கடுகடுத்து வந்தது ஒரு குரல். "நாயே! அங்கே என்ன இழைந்து கொண்டிருக்கிறாய்? இங்கே வா பீடை!"

சாமா திரும்பிப் பார்த்தார். கோபத்தால் பெருமூச்செறிந்தபடி நின்றிருந்தாள் தர்மு. அவளைப் பார்த்ததும் கமலி நடுநடுங்கினாள்.

"இன்னும் என்னடி செய்கிறாய் அங்கே? வா. நொறுக்கித் தீர்க்கிறேன்!" அந்த நெருப்புக் குரலைக் கேட்டதும் வானமும் பயந்து வாய் மூடிக் கொண்டதோ? அழவில்லையே மழை?

கமலி அம்மாவைப் பார்த்தாள்; தாத்தாவைப் பார்த்தாள். கோபமும், வேதனையும் ஒருசேரக் கண்ணீராக வடிந்தன. எழுந்தாள். வதங்கிய மலர்க் கொடியைப் போலச் சோர்ந்தபடி நடந்தாள். நாலு எட்டுத்தான் போயிருப்பாள். அதற்காகக் காத்துக்கொண்டிருந்தவள் போல் லபக்கென்று கமலியின் மேல் பாய்ந்து அவளைப் பரபரவென்று இழுத்துக் கொண்டு வெளியேறினாள் தர்மு.

சிறிது நேரத்தில் 'பளார், பளார்' என்று சாடும் ஓசை கேட்டது. "இனிமேல் இல்லேம்மா!.... தாத்தாவண்டே போகமாட்டேம்மா!....அடிக்காதே, அம்மா!" என்று துடித்து அலறும் கமலியின் குரலும் கேட்டது.

"ஆற்றில் குளிக்கப் போய்க் கடிகாரத்தை ஆற்றில் போட்டு விட்டேன்! ஒரு மாதம் கழித்துத்தான் அகப்பட்டது. அப்பவும் ஓடிண்டு இருந்தது!"

"பொய்! அவ்வளவு நாள் அது ஓடவே ஓடாது!"

"அடே! நீங்க ஒண்ணு. நான் கடிகாரத்தைச் சொல்லவில்லை. ஆறு தான் ஓடிக் கொண்டிருந்தது!"

சாமாவுக்கு உடம்பெல்லாம் பதறியது! இந்தச் சனியன் பிடித்த உடல் சொன்னபடி கேட்பதாக இருந்திருந்தால் இந் நேரம் கமலியை அடித்த கையை வெட்டி விருப்பார்!

சாமாவை வாழ்விக்க வரவில்லை மங்களம். ஐந்தாறு மாதந்தான் நடமாடித் திரிந்தாள். அப்புறம் ஏதாவது ஒரு நோய் எப்பொழுதும் அவளோடு உறவாடிக் கொண்டிருந்தது. வைத்தியமும் பத்தியமுமாக நாட்கள் வேகமாக ஓடின.

நோய் விழுந்த பயிரானாலும் பலன் இல்லாமல் போய் விடுவதில்லை. இது இயற்கை. மங்களமும் இந்த இயற்கைக்கு மூன்று முறை ஆளானாள். முதலில் விளைந்தவன் விசுவநாதன். அடுத்த கன்றுமுதல் அருணாசலம். கடைசிக் கந்தாயம் சாம்பசிவம். நாலாவதாக ஓர் அரைகுறை. அதோடு பெண்மை முழுவதையும் தாய்மையாக வடித்து விட்டுப் படுத்தவள்தான். மறுபடியும் அவள் எழுந்திருக்கவே இல்லை.

நன்றும், சின்றுமாக மூன்றை வைத்துக் கொண்டு தனிமனிதரானபோதுதான் உலகம் ஒரு பயங்கரச் சூன்ய வெளியாய்த் தகித்தது சாமாவின் மனத்தை. வழக்கம்போல் நாலு பெரிய மனிதர்கள் வந்தார்கள். வழக்கம் போல் மறுமணத்தைப் பற்றிப் பிரஸ்தாபித்தார்கள். "முன்னால் ஒரு மங்களம் இருந்தாள். இப்பொழுது மூன்று மங்களம் இருக்கிறார்கள். இந்தக் குழந்தைகள் இல்லாவிட்டால் அவளை இறந்தவள் என்று சொல்லலாம். அவள் மூன்று உயிராகி என்னைச் சுற்றிக் கொண்டிருக்கிறாளே!" என்று சொல்லி விட்டார்.

நிலபுலன்களைக் கவனித்துக் கொள்ள வேண்டும். தாளிக் குழந்தையிலிருந்து தளர்நடை போடும் குழந்தை வரை காப்பாற்ற வேண்டும். கதைகளில் வேண்டுமானால் இந்தத் துன்பம் ஒற்றை வரியில் ஓடிவிடலாம். நிஜ வாழ்க்கையில் நெருக்கும் போதல்லவா தெரியும், கொடுமையான கொடுமைகளைப் பற்றி?

எப்படியோ கட்டிப் புரண்டு காலத்தை ஓட்டி விட்டார். குழந்தைகள் பள்ளிக்குப் போய்க் கொண்டிருந்தன. சாம்பசிவம் எப்பொழுதும் நகநகத்தவன். தாய்ப்பால் இல்லாமல் வளர்ந்தவனல்லவா! அடிக்கடி நோய் பிடுங்கி எடுக்கும். நாலு நாட்கள் பள்ளிக்குச் சென்றால் பத்து நாட்கள் 'சிக் லீவ்'தான்.

பையன்கள் உயர்தரப் பள்ளிப் படிப்பை முடித்துக்கொண்டு விட்டனர். "நாங்களும்

உங்களுக்கு ஒத்தாசையாக இருந்து விடுகிறோம்'' என்றார்கள். ''யார் எனக்கு ஒத்தாசையாக இருக்க வேண்டுமோ, அவனே இல்லாமல் போய்விட்டான். நீங்கள் எனக்கு என்ன ஒத்தாசை செய்வது? அதுமட்டும் இல்லே, பயல்களா! இந்தக் கட்டை இதுவரை யாருடைய ஒத்தாசையையும் எதிர்பார்த்து இருந்ததில்லே. பேசாமல் கல்லூரிக்குப் போங்கள்'' என்று சொன்னதோடு, இருந்த நில புலன்களையெல்லாம் விற்றுப் பணமாக்கிக் கொண்டு, ''ஏறுங்கள், வண்டியிலே!'' என்று சென்னைக்கு இழுத்து வந்து சேர்ந்து விட்டார்.

பிறந்த ஊரை விட்டாலும் கைச்சமையலை மட்டும் அவர் விட்டுவிடவில்லை. ''என் கை அமுதை உண்ணுவிட்டால் உங்களால் ஒருநாள் பொழுதைக் கூடக் கழிக்க முடியாது. என்னைப் போல் வேப்பம்பூ ரசம் வைத்துப் போடுவானு ஓட்டல்காரன்!'' என்று பையன்களிடம் தம் பெருமையை வெளியிட்டுக் கொள்வார். அதிலே அவருக்கு ஒரு தனி மகிழ்ச்சி.

விசுவநாதன் சர்வகலாசாலையிலிருந்து பட்டத்தோடு திரும்பினான். அருணாசலம் பொறியியல் கல்லூரியிலிருந்து ராஜதானியிலேயே முதல்வனாக வெளியே வந்தான். சாம்பசிவம் கல்லூரி வாசலை மிதித்ததோடு சரி. உள்ளே போக இருந்தவனை நோய் வெளியே பிடித்துத் தள்ளிவிட்டது.

எங்கெங்கோ ஓடினார். யார் காலையெல்லாமோ பிடித்தார். விசுவநாதனை ஒரு வெள்ளைக்காரன் கம்பெனியில் உதவி மானேசராகக் கொண்டு போய் வைத்தார். அருணாசலத்தை அரசாங்க மின்சார இலாகாவில் உதவி இன்ஜினியராகச் சேர்த்து விட்டார். சாம்பசிவத்தை ஒரு குமாஸ்தாவாகத்தான் கொண்டு வைக்க முடிந்தது. அவன் படிப்பு அந்த மட்டுக்குமே உதவி செய்தது.

பெரிய இடங்களில் சம்பந்தம் செய்து கொண்டார். மாளிகையென்றும், கார் என்றும் வசதிகள் பெருகின.

ஆண்டுகள் உருண்டு கொண்டிருந்தன. திடீரென்று சாமாவின் தொண்டையில் இருமலும், கபமும் புரளத் தொடங்கின. ஆரம்பச் சிகிச்சைகள் பயனளிக்கவில்லை. 'எக்ஸ்ரே' எடுத்துப் பார்த்ததில் தெரிய வந்தது காச நோயென்று.

அதற்கு அப்புறம் குடும்பத்திலேயே பெரும் மாறுதல். சாமாவை யாரும் நெருங்குவதில்லை. எல்லாம் தூரத்தில் நின்றபடி நிமிஷ நேர விசாரணையோடு சரி. எந்த விஷயமும் அவரிடம் வராமலே தீர்ந்துகொண்டிருந்தன.

இந்தக் குருட்டுச் சாமாவுக்கு உலக நடப்பு என்ன தெரியும்? மனைவியைச் சாகக் கொடுக்கத் தெரியும். மூன்று குழந்தைகளை மாரடித்து வளர்த்துப் பெரிய மனிதர்களாக்கத் தெரியும். வசதியான மருமக்களைக் கொண்டு வரத் தெரியும். சிறிதைப் பெரிதாக்கத் தெரியும். மனித உணர்ச்சிகளின் வர்ணங்களைப் புரிந்துகொள்ளத் தெரியுமா?

அதையும் அறிந்து கொள்ளும் சந்தர்ப்பம் அவருக்கு அன்று கிடைத்தது. இரவு உணவுக்குப் பின் கொட்டாங்கச்சியும் கையுமாய் இருமலோடு போராடிக் கொண்டிருந்தார்.

அப்பொழுது விசுவநாதன் பத்தடிக்கு அப்பால் வந்து நின்று கொண்டான்.

''அப்பா! உங்களுக்கு வரவர இருமல் அதிகமாகிக்கொண்டு வருகிறதல்லவா?''

''வரட்டுமே! நான் இன்னும் இருந்து எதைப் பார்க்க வேண்டும்? எல்லாவற்றையும் பார்த்தாயிற்று. போக வேண்டிய கட்டை தானே!'' நிஜமாகவே அவர் விரக்தியுடன் கூறவில்லை. பிள்ளையினுடைய அகத்தை அறிய விட்ட தோட்டம்தான் அது.

''உண்மைதான்!''

அப்படிச் சொல்வான் என்று சாமா எதிர்பார்க்கவில்லை.

'இத்தனை அன்பற்ற சோற்றுக் கவர்களை எழுப்பி விடவா வாழ்நாளையே ஒரு துக்கக் காடாக்கி யிருந்தோம்?' என்று மனம் அலறியபோது, அந்த வீட்டிலுள்ளவர்களின் முகக் கோணங்களினுடைய அர்த்தம் புரிந்தது. அப்படியே குன்றிக் குறுகி உட்கார்ந்து விட்டார் நெடுநேரம். அதிகத் துன்பம் வந்தபோது கண்ணீர் தலைநீட்டுவதில்லை. காரணம் சொல்ல முடியாத ஒரு வெறி சூழ்ந்து விடும். சாமாவும் ஒருவகை வெறியில் இருந்தார். பின்னர், குரல் காத்திரமாக ஒலித்தது. ''அதனால் போவதற்கு நானே எண்ணிக் கொண்டிருக்கிறேன்!''

''அதற்குத் தோட்டத்தில் இருக்கும் கொட்டகை சௌகரியம். இந்தச் சனி, இருமலுக்கு இயற்கைச் சூழ்நிலை வேண்டும். அதற்கு அது உதவியாக இருக்கும்.''


சாமாவுக்கு உள்ளேயே நெருப்பை வைத்துக் கொண்டிருக்க முடியவில்லை. கக்கியே விட்டார். ''ஏன், அதை விடப் பச்சையாகச் சொல்லி விடுவதுதானே? 'நீ காச நோய்க்காரன். எங்களுக்கு நடுவில் நீ இருந்தால் எங்களுக்கும் ஒட்டிக் கொண்டுவிடும். தகரக் குவளையும், சாக்கும் தருகிறேன். கொட்டகைக்குப் போ' என்று.''

''நீங்கள் பெரியவர்கள். தெரிந்துகொண்டு விட்டீர்கள். நானெக்கு அங்கே போய்விடுகிறீர்களா?''

சாமாவுக்கு உயிர்நிலையே கலங்கிப் போய் விட்டது. முழங்காலை மடித்துக் கொண்டு உட்கார்ந்தவர்தான்! தம்முடைய சுக துக்கங்களை யெல்லாம் விலக்கி வாழ்ந்து விட்ட அறுபது வருட வாழ்க்கை, இப்படிச் செல்லரித்துச் சாயும் என்பதை அவர் எண்ணிப் பார்த்ததே இல்லை.

விடிந்தது. 'அப்பாவைக் காணோம், அப்பாவைக் காணோம்' என்று வீட்டில் ஒரே ரகளை. அது ஏதோ சினிமாவில் உணர்ச்சியற்றுக் கூடும் கூட்டத்தின் இரைச்சல்போல் இருந்ததே தவிர, 'தங்கள் நலன் ஒன்றை இழந்து விட்டோம்' என்ற பரிதவிப்பாக இல்லை.

ஏதோ வேலையாகத் தோட்டத்துக்கு வந்த விசுவநாதன் கொட்டகையை நெருங்கிய போது திகைப்பால் திணறினான். அங்கே சாமா உட்கார்ந்துகொண்டிருந்தார். அவருக்குப் பக்கத்திலே ஒரு சமுக்காளம், ஒரு சயத்தம்ளர், ஒரு கொட்டாங்கச்சி முதலியவை இருந்தன.



முன்னறிவிப்பு...
புதிய மர்பி ரேடியோ மாடல் 0724 மற்ற இதர ரேடியோக்களை விட மிகவும் போற்றப்படும். ஏனெனில்,
மிக அழகிய பெட்டியில் அமைக்கப்பட்டுள்ளது.
பல்லாண்டுகளுக்கு மிகச் சிறந்த முறையில் சேவை அளிக்கும்.
0724
மாடல் 0724
6 - வால்வ்
ஆல் - வேவ்
8 பாண்ட், முழுதும் பாண்ட்ஸ்பிரெட்
ஏஸி அல்லது ஏஸி/டிஸி (இரு மாடல்கள்)
நிகர விலை ரூ 495/-: உள்ளூர் வரிகள் தனி
murphy radio
பல ஆண்டுகளுக்கு உங்களை மகிழ்விக்கும்!
தென் இந்தியாவுக்கு சோல் டிஸ்ட்ரிபியூட்டர்கள்
முகமது இப்ராஹீம் & கோ. பிரைவேட் லிட்., சென்னை-பெங்களூர்-ஹைதராபாத்

"அப்பா! இங்கேயா இருக்கிறீர்கள்?"

"ம்.........".

"ஒரு வார்த்தை சொல்லி விட்டு வரக்கூடாதோ?"

"எனக்கு என்று யாரும் இல்லை. சொல்லி வர வேண்டிய அவசியமில்லை. எல்லோரும் என்னை உதைத்துத் தள்ளி விட்டார்கள். இந்த நிலையிலே உங்கள் வீட்டில் கையேந்திக் கொண்டிருக்கமாட்டேன் நான். இந்தச் சாமா மானத்தை விடவேண்டி வந்தால் அதற்கு முன்னால் உயிரையே விட்டுவிடுவான். அப்படிப் பட்ட மானஸ்தன் சாமா, ஏன் இன்னும் உங்கள் வீட்டில் இருக்கிறான் தெரியுமா? உங்கள் மானத்தைக் காப்பாற்ற. 'வயதான காலத்திலே அப்பனை அடித்துத் துரத்திய சண்டாளர்கள்' என்று உலகம் உங்களைக் காறி உமிழுமே, அதிலிருந்து உங்களை மீட்க. என் குழந்தைகளை அப்படி உலகம் தூற்றவா தந்தைக்குத் தந்தையாகவும், தாய்க்குத் தாயாகவும் இருந்து வளர்த்தேன்!"

மனப்பாறை உடைந்தது. விகவநாதனும் மனிதன்தானே! அவன்கூடக் கண்ணீர் விடுகிறானே!

"விச்சு! என் தலைவிதியை யாரும் கண்ணீர் விட்டு அழிக்க வேண்டாம்! போய்விடு. இங்கே என்னைப் பார்க்க யாரும் வர வேண்டாம். எல்லோரும் சௌகரியமாக இருங்கள். டாக்டரை இங்கே அனுப்பாதே! எனக்கென்று எந்தச் சௌகரியமும் செய்ய வேண்டாம். ஏனென்றால் எனக்காக நான் இங்கே இருக்கவில்லை. எல்லாவற்றையும் தன்னுடையதாக நினைத்து ஏமாந்த சாமா நேற்றிரவே செத்து விட்டான். இப்பொழுது இருக்கும் சாமா உங்கள் மானத்தைப் பிழைக்க வைக்கத் தோட்டத்தில் கிடக்கும் ஒரு மரக்கட்டைதான். நிற்காதே. போ!"

அவருடைய குரல் சக்தி வாய்ந்த ஒரு சூலாயுதத்தைப் போல் அவன் மனத்தைக் குத்திக் கொண்டிருந்தது.

இருமிக்கொண்டு பறந்த நாட்கள் சாமாவின் வியாதியை முற்ற வைத்து விட்டன. ஒரு தடவை டாக்டர் வந்தார். அவரை விரட்டி விட்டார் சாமா. ஆகாரங்களில் அவருக்கு அக்கறை இருக்கவில்லை.

"அப்பா...!"

நினைவிலிருந்து நெஞ்சைப் பிடுங்கி, இமைகளிலிருந்து பலவந்தமாகக் கண்களைப் பறித்துப் பார்த்தார்.

ஆவி பறக்கும் காப்பித் தம்ளரை ஏந்தியபடியே நின்று கொண்டிருந்தான் ராஜும். அவன் சாம்பசிவத்தின் மனைவி. இந்தக் குடும்பத்துக்குள்ளேயே அவரிடம் அனுதாபத்துடன் பழகுபவன் அவன் ஒருத்திதான்.

"காப்பி சாப்பிடுங்கள்" என்று கூறியபடி சாமாவின் தம்ளரில் காப்பியை ஊற்றி அவரிடம் நீட்டினான்.

"ஏன், ராஜும்! கமலி இப்பொழுது நன்றாக அடி வாங்குகிறாளா!"



'' அடியும் வாங்கினான். படுக்கையிலும் படுத்துவிட்டான். ஜுரம் நெருப்பாக எரித்து கொண்டிருக்கிறது. ராக்ஷஸி! குழந்தையைப் பொரித்து எடுத்து விட்டாள்!''

சாமாவுக்கும் தீய்த்துக் கொண்டிருப்பது போன்ற ஓர் அனற் புகை உள்ளத்தே ஊடுருவியது. கண்கள் இறுக ஒட்டிக் கொண்டன.

பலகாரம் வந்தது; சாப்பாடு வந்தது. ஒன்றையுமே அவர் தொடவில்லை. 'கமலியின் நாக்கில் எதுவுமே பட்டிருக்காது. இங்கே மட்டும் ஏன் பட வேண்டும்?'

மாலைக் காப்பியும் வந்தது. கொண்டு வந்தவள் தர்மு.

காலையில் தம்ளரில் ஊற்றி வைத்த காப்பி அப்படியே இருந்தது. ''கொண்டு வந்த காப்பியை எதிலே ஊற்றுவது?'' என்று படபடத்தாள் தர்மு.

'' இடமா இல்லை? தோட்டத்தில் எவ்வளவோ இடம் இருக்கிறதே!''

தர்மு முகத்தை ஒடித்து நீட்டி விட்டு நடையைக் கட்டினாள்.

சாமாவின் குரல் அவளை இழுத்து நிறுத்தியது. ''தர்மு, கமலி எப்படி இருக்கிறான்?''

'' எப்படியோ இருக்கிறான்?''

'' நான் அவனைப் பார்க்க வேண்டும். தயவு செய்து அவனைத் தூக்கி வருகிறாயா?''

'' உங்கள் பார்வையிலே விழுந்து அவன் கருகுவதற்கா! பேசாமல் கிடங்கள்!''

அடுத்த நிமிஷம் தர்மு அங்கே இருக்கவில்லை. அவள் பாய்ச்சி விட்டுப் போன அம்புக்கு இலக்கான சாமா மட்டும் 'பேசாமல் கிடந்து' துடித்தார்.

அந்தி மயங்கும் நேரம். தோட்டத்தில் உதிர்ந்து கிடந்த மகிழம் பூவைப் பொறுக்கிக் கொண்டிருந்தான் ராஜும். அவனைத்தான் ரொம்ப நேரமாக எதிர்பார்த்துக் கொண்டிருந்தார் சாமா. ''இங்கே கொஞ்சம் வருகிறாயா, ராஜும்?''

ராஜும் வந்தான்.

'' எனக்கு ஓர் உதவி செய்வாயா?''

'' சொல்லுங்கள்.''

'' படுக்கப் போகும்பொழுது பங்களாப் பின் கதவைத் திறந்து வைக்கிறாயா?''

'' ஏன்?''

'' கேட்காதே! இந்தச் செத்துக் கொண்டிருக்கிற கட்டையின் விருப்பத்தை நீ நிறைவேற்றுவாயா?''

'' ஊம்,......!''

பாதி ஜாமம் இருக்கும். ஆரவம் ஒடுங்கிச் சூன்யம் சூழ்ந்து கொண்டிருந்தது.

சாமா எதிர்பார்த்துக் கொண்டிருந்த நேரம் அதுதான். படுக்கையை விட்டு எழுந்திருக்கமுயன்றார். 'பொத்'தென்றுவிழுந்தார். வீக்கம் கண்ட இடங்களெல்லாம் வலி எடுத்தது. எழுந்து நடப்பதென்பது ஆகக் கூடிய காரியமல்ல. குப்புறத் திரும்பிப் படுத்தார். ஒரு புஜத்தைத் தரையில் வைத்து அழுத்தி உந்தினார். ஓர் அடி முன்னால் போயிருந்தார். வயிற்றை உப்பி மற்றொரு புஜத்தால் உந்தி இன்னும் ஒரு அடி நகர்த்தார்.

இப்படிக் கொட்டகையை விட்டு, தோட்டத்தைக் கடந்து, பங்களா வாசற்படியில் ஏறி நகர்ந்தபோது அவர் உடல் கலகலத்து விட்டது. அவர்வும், வேதனையும் சொல்லிமாளவில்லை. மீண்டும் முயற்சியைத் தொடர்ந்தார். ராஜும் தாழ்போடாமல்தான் விட்டிருந்தான். கதவுகளைத் தள்ளிக் கொண்டு அவர் விட்டினுள்ளே ஊர்ந்தார்.

கமலி படுத்திருந்த அறைக் கதவைத்திறந்து கொண்டு உள்ளே ஊர்ந்தார். மங்கிய மின் விளக்கின் அடியில் விசுவநாதன் நெஞ்சை மலர்த்தியபடி நெடுங் குறட்டை விட்டுக் கொண்டிருந்தான். கமலி காய்ந்த மலர்ச் செண்டைப் போல் வதங்கிக் கிடந்தான்.

சாமாவின் பார்வை சற்றுத் திரும்பியது. அது என்ன? 'கமலியின் எதிரே ஒரு பாம்பு படம் எடுத்துக்கொண்டு நிற்கிறதே? குழந்தை கொஞ்சம் அசைந்தாலும் போதுமே. அதைக் கொத்திப் பிடுங்க?''

அவர் உடம்பில் முடங்கிய தெம்பெல்லாம் முனைப்புடன் திரும்பிவிட்டது. ஓர் எம்பு எம்பினார். அவரால் இப்பொழுது கலபமாக எழுந்து நிற்க முடிந்தது. ஓடவில்லை; மெதுவாக நடந்தார். கமலியின்மேல் பொத்தென்று விழுந்தார். அதைத் தவிர வேறு வழியேயில்லை. மூர்க்கம் கொண்டிருந்த பாம்பு ஆக்கிரம் தீர அவர் உடலைக் கொத்தித் தீர்த்தது. பிறகு படத்தைச் சுருட்டிக் கொண்டு ஜன்னல் பக்கம் ஊர்ந்து சென்றது.

'' ஐயோ!'' என்று அலறினார் சாமா. அவருடைய கனத்தைத் தாங்க முடியாமல் கமலியும் வீறிட்டான்.

கொஞ்ச நேரத்தில் வீடே அங்கு கூடி விட்டது. ''என்ன, என்ன?'' என்று ஏக காலத்தில் பல குரல்கள் வந்தன. சாமா கைகளை ஜன்னல் பக்கம் காட்டினார். பாம்பு அப்பொழுதுதான் ஜன்னலுக்கு வெளியே இறங்கிக் கொண்டிருந்தது.

சிறிது நேரம் அதிர்ச்சி எல்லோரின் வாயையும் இழுத்துப் பூட்டியிருந்தது. விசுவநாதன் தான் முதலில் தெளிந்தான். சாமாவைப் பார்த்தான். அவருடைய மார்பில் ஆழக் காயங்கள்; அதிலிருந்து பீறிட்டது ரத்தம். ''நீங்கள் எப்படி இங்கே வந்தீர்கள்?'' என்றான் வியப்புக் கலந்த குரலில்.

'' அது பெரிய காரியமல்ல. தர்மு ஒரு நல்ல காரியத்தைச் செய்திருக்கிறாள். அதற்காக எல்லோரும் சந்தோஷப்படுங்கள்'' என்று பயங்கரமாகச் சிரித்தார் சாமா. அது எல்லோரையும் பீதியில் வளைத்துக் கட்டியது.

'' ஆமாம்: அவள் நல்லதைச் செய்து விட்டாள். இன்று நான் ஜுரத்தில் துடித்த கமலியைக் காணத் தவித்தேன். அவன் முகத்தை எனக்கு ஒரேயொரு முறை காட்டும்படி தர்முவிடம் மன்றாடினேன். அவள் மறுத்து விட்டாள். அவள் மறுத்திரா விட்டால் கமலியைப் பார்க்க இந்தப் பாதி ஜாமத்தில் இங்கே வந்திருப்பேனா? இங்கே வந்திருக்காவிட்டால்...'' பேச முடியவில்லை. விஷம் தலைக்கு ஏறிவிட்டது. சாமா அவன் கையால் உடலை முறித்தார்.

சாமாவின் தலை சாய்ந்தது. கூடியிருந்தவர் தலைகளும் தாழ்ந்தன.

சாமாவின் இரண்டு கண்கள் மூடிய அதே நேரத்தில் அந்தக் குடும்பத்தில் பல ஜோடிக் குருட்டுக் கண்கள் விழிப்பைப் பெற்றன.

அவனுடைய உலகம்

ராஜம் கிருஷ்ணன்

நான்கைந்து மாதங்களாய் மேகச் செவிலியின் அன்பான அரவணைப்பிலே, அமுதூட்டத்திலே, குளிர்ந்து நிறைந்த மலைப் பிராந்தியம் முழுவதும் பசுமை தளதளக்கப் புதுப் பொலிவு பெற்று விளங்கியது. மண்ணின் இந்த எழிலுக் கேற்பத் தானும் விளங்க வேண்டும் என்றுதானோ என்னவோ, எளியோனின் கந்தல்களைப் போல் ஆங்காங்கு மறைக்கும் மேகங்களைக் களைந்துவிட்டுப் 'பளிச்' என்ற நீல வண்ணத்தைக் காட்டித் தகத்தகாயமாக ஒளி நகை செய்தது வானம். தண்ணென்ற குளுமையும், இங்கிதமான வெம்மையும் ஒன்றோடொன்று கலந்து, ஒரு புதியதோர் இனிமையை உருவாக்கிக் கொண்டிருந்தன.

மண்ணுலகிய காதலியைப் புகழ்ந்து விண் கீதம் இசைத்துக் கொண்டிருந்தது போலும்! அந்த இன்ப கீதத்தின் போதையில் அரைக்கண் செருகி மண் அமிழ்ந்து கிடந்ததோ?

அந்தப் பிற்பகல் வேளையில், குன்றுகள் சூழ்ந்த அந்தப் பள்ளத்துக் குடியிருப்பு அமைதியும், நிறைவும் கூடிய உலகாகத் திகழ்ந்தது. புற்சரிவுகளில் மாடுகள் அச்சமில்லாமல் இளம் புல்லை மேய்ந்து கொண்டிருந்தன. மாடு மேய்க்கும் ஆயச் சிறுவர்கள், புற் படுக்கையிலோ, மரத்தடிகளிலோ மோனத்துள் மூழ்கியவர்களாயிருந்தனர்.

பள்ளத்திலே காணப்பட்ட வீடுகள் மங்கலப் பெண்களின் அணிகலன்களைப் போல், அப்பிரதேசத்தின் உயிர் இயக்கத்துக்கே ஆதாரமானவைகளாகத் திகழ்ந்தன. முன் வரிசையின் முதல் வீட்டு வாயிலின் புல்வெளியிலே எப்போதும் போல் மாதி உட்கார்ந்திருந்தான். அந்த இனிய சூழ்நிலையிலே மூழ்கிய மனமுடன் அவன் இளைப்பாற அமர்ந்திருக்கவில்லை. கடந்த எட்டு மாத காலமாக அவன் இப்படித்தான் பித்துப் பிடித்தவன் போல் அந்த மண்ணை எண்ணிப் பெருமூச்செறிந்து கொண்டிருக்கிறான்.

'எட்டு மாதங்களுக்கு முன் அவனைப் பார்த்தவர்களால் இப்போது அவனை அடையாளம் கண்டுகொள்வது கூடக் கஷ்டமாயிருக்கும்படி மாறிவிட்டானே?

'வெய்யிலும், பனியும், உழைப்பும், உரமும் அவன் கன்னங்களில் கருஞ்சிவப்பை ஏற்றியிருக்குமே? அந்தக் கைகள் சோர்ந்து வலுவிழந்து போனாற்போல் ஆகிவிட்டனவே? இடையிலே அவன் உடுத்தியிருந்த முண்டும், தலையை மூடியிருந்த குட்டையும், அவன் மண்ணில் வேலை செய்த நாட்களில் கூட இப்படித் தூய்மை குலைந்திருக்காதே? எட்டு மாதங்களுக்கு முன், பத்தாண்டுகள் குறைந்து மதிக்கக் கூடிய உடற் கட்டு, இன்று இயல்பான நிலையையும் தாண்டி, இன்னும் பத்தாண்டுகள் கூடிவிட்ட தளர்ச்சியையும், சோர்வையும் எய்தி விட்டாற் போல் தோற்றுகிறானே?

'அந்தக் கண்கள் வானவெளியில் எதை நினைத்து, நிலைத்து நின்றனவோ? காற்றோடு கலந்த சோகப் பெருமூச்சுக்களின் இழைகள் மண்ணிலே படிந்த போது, எந்தப் பூரணமாகாத கனவைப் பற்றிய நினைவு அலைகளை எதிரொலித்தனவோ?

'வானமும் பூமியும் ஒரு நிறைவுள்ள நிலையில் இணைந்து பண் இசைக்கும் இம்மாதிரியான நாட்களிலே, அவன் மனம், அந்த நிறைவோடு ஒன்றிக் கிடக்குமே? அவன் உற்சாகம், உறுதியெல்லாம் எங்கே போயின? தூரத்தே தெரியும் மலைகளும், சரிவுகளில் பொட்டு வைத்த ரத்தினக் கம்பளங்கள்போல் விரிந்து கிடக்கும் தேயிலைத் தோட்டங்களிலே இலைகள் வெள்ளி முலாம் பூசப் பெற்றாற்போல் மினுமினுக்க, மரங்களும் அவனைக் கண்டு தான் கண் சிமிட்டி நகைக்கின்றனவோ?

'எதிரே மேட்டில் பூத்துக்கிடக்கும் மஞ்சள் வாடாமல்லி மலர்கள் அவன் வெற்றுத் தனிமரமாகிவிட்ட நிலையைப் பற்றித்தான் கூடி இரகசியம் பேசுகின்றனவோ?"

சுற்றுமுற்றும் அலைந்த மாதியின் கண்கள் சூனியத்திலேயே லயித்தன

துடிப்பும், இளமையுமாக அவள் அரண் போல் மறைக்கும் மேட்டுக்கு அப்பால் உள்ள அந்த மண்ணோடு குலவியவள். ஆண்பிள்ளைக்குரிய உரத்தோடு முன் பிடித்து, நிலத்தைக் கீறி அவள் வித்திட்டால், மண்ணுலகிய மங்கை, பொற்கிழங்குகள் மடி நிறையக் குலுங்கச் சிரிப்பாள்.

இருபதாண்டுகளுக்கு முன் இதே போன்ற ஒரு நாளில்தான் அவள் வாழ்வில் கொண்டவனுக்கு முழுமையைத் தராதவள் என்ற குறையோடு, பிறந்த இடத்துக்குத் திரும்பி வந்தாள்.

ஆறு ஆண்டுகள் அவள் அந்தப் புகுந்த இடத்தைச் சொந்தமாக்கிக் கொள்ள, பெரியவரைப் போற்றி, வீட்டு நெருட்டைக் காத்து, மாடு கன்றுகளை பே

லாம் பேணி, அவளுக்குரிய கடமைகளை நிறைவேற்றினாள். ஆனால், அந்த இடம் அவளுக்கு ஒட்டவில்லை. அவளை ஒட்ட வைக்கும் பேற்றை இறைவன் அவ ளுக்கு அருளவில்லை.

அவர்கள் வழக்கப்படி, பரிசுப் பணத் தைப் பெற்றுக்கொண்டு, அவள் கணவன் அவளை வீட்டுக்கு அனுப்பிவிட்டான்.

மாதிக்கு அப்போது ஏமாற்றம் தெரிய வில்லை; துயரம் உறைக்கவில்லை; வந்த மறுநாளே, மண்ணை வாழ்வாகக் கருதி உழைப்பில் ஒன்றிவிட்டாள். ஒரு சதுரம். மலைச் சரிவில் அழகாகப் பீடம் அமைத் தாற்போல் அமைந்த சதுரம். கீழே பள்ளம்; மேலே மேடு. குத்தகைக்கு எடுத்திருந்த அந்தச் சதுரத்தை, அவ ளுடைய தகப்பன் இருநூறு ரூபாய்கள் கொடுத்துச் சொந்தமாக ஆக்கிவைத் தான். ஆகா! அந்த இடம்தான் எவ் வளவு அழகாக இருக்கும்?

அழகு மட்டுமா?

கீழ்ப்பள்ளத்துக்கு அப்பால் மடிப்பு மடிப்பாக நீலக் குன்றுகள் யானை மந்தை போல் காட்சி தரும். எல்லா மலைகளுக் கும் அப்பால், அடிவானை வகிர்ந்து கொண்டு தனியாக ஒரு சிகரம் தெரியும்.

இளைப்பாறும் வேளைகளில் மாதி அந் தச் சிகரத்தையே பரவசத்துடன் பார்ப் பாள். அந்த நோக்கில், 'மாதேசுவரா' என்ற உயிர்ப்பு அவளுள் உண்டாகும். வரிசையாக அந்தச் சிகரத்தில் தெரியும் கோபுர மரங்கள், கூச்சுக் கூச்சாக இறை வனுக்கிடுவதற்குத் தொடுத்த மாலை போல் விளங்கும். சில தினங்களில் மாலை வேளைகளில் கற்றைச் சடைகளிலே பிறை யணிந்த பிரானாகவே அவளுக்கு அந்தச் சிகரம் உண்மைத் தோற்றம் தரும். தன்னையுமறியாமல் அவள் சிரம் தாழும்; கரங்கள் குவியும்.

எல்லாம் பழங்கதையாகி விட்டனவே?

அந்த மண், அவள் உற்சாகம், துடிப்பு, வாழ்வு எல்லாம் போய் விட்டனவே?

அந்த மண்ணுக்கும், அவளுக்கும், சாதாரணப் பந்தமா இருந்தது? துயரத்தின் ஊற்றுக் கண் எட்டு மாதங்களாகியும் தூர்ந்துவிட வில்லை. நினைத்தாலும் பொங்கித்தான் வந்தது.

"வெய்யில் போகுதே? தானியத்தை உலர்த்தியிருக்கக் கூடாதா?"

தோட்டத்தில் சுமந்து வந்த மொச் சைக் காயைக் கீழே கொட்டி விட்டு, அவளைக் கடுகடுப்புடன் பார்த்துக் கொண்டே வீட்டுக்குள் சென்ற நஞ் சம்மை அவளுடைய அண்ணன் மனைவி.

உழைக்காமலே உட்கார்ந்து உட் கார்ந்து பொழுதைப் போக்கும் அவளை எப்படி அன்புடன் கொண்டாடுவாள் அவள் அண்ணி?

சற்றுப் போனால் பள்ளிக்கூடம் போயிருக்கும் குழந்தைகள் வந்து விடு வார்கள், ஒத்தைக்குப் போயிருக்கும் வீட்டுத் தலைவனுக்கு வீடு வரும்போதே உபசாரணைகள் தயக்கமின்றி நடக்க வேண்டும், மேயச் சென்ற மாடுகள் வந்துவிடும், மாவரைக்கவில்லை, துணிகள் துவைக்கவில்லை.......

வீடென்றால் எத்தனை வேலை?

நஞ்சம்மையின் முணுமுணுப்பும், கடு கடுப்பும் மாதிக்கு உறைக்கவே இல்லை.

கோதுமையை முன்புறம் ஒடிக்கொண் டிருந்த வெய்யிலில் சாக்கில் பரத்தி விட்டு அவள் பின்புறம் முற்றத்தில் துணிகளை நனைத்துத் துவைக்கலானாள்.

'பட் பட்'டென்று அவள் துணிகளை அறைந்த ஓசையில், "இவளை எத்தனை நாட்கள் குந்த வைத்துச் சோறு போட வேண்டுமோ? அந்த மண் போனால் உல கமே முழுகி விட்டதா?" என்ற பொரு மல் ஒலித்தது.

மாதியின் துயர் அவளுக்கு எப்படிப் புரியும்?

பொருளுக்காகவா அவள் அந்த மண் ணுடன் தொடர்பு கொண்டிருந்தாள்?

அவள் முழுமையடையாதவள் என்று கொண்டவனும் பிறரும் கட்டித் தனிமை யாக்கிவிட்டார்கள் என்ற ரோசத்தில், விருப்பில், தன் படைப்புத் திறனை உல குக்கு விள்ளுவதே போல் அல்லவோ மண்ணுடன் தொடர்பு கொண்டிருந் தாள்? ஒரு தடவையேனும் அவள் முயற்சி சோடை போனது உண்டா? ஒன்றுக்கு ஒன்பது தருவாள் நிலமங்கை. அந்த வெற்றியை[illegible] பிடுங்கிக்



கொண்டு, அவளை அமைதியாயிரு என்று கூறுகிறார்கள்?

இதற்காகவேதான் அங்கே இப்படி ஒரு புரட்சி வந்ததா?

மேழ ஈரம் வற்றுமல் வான் பொழியும்; மண் கொழிக்கும்; மரங்கள் தழைக்கும். அத்தகைய இடங்களில் எப்படி மாற்றம் வந்தது?

புரட்சி திடுமென்று வரவில்லை. மெள்ள மெள்ளத்தான் வந்தது.

அவள் சதுர மண்ணில் களைக்கொட்டும் கையுமாக வேலை செய்கையிலே மருட்சியுடன் திரும்பிப் பார்க்கும்படி; அமைதியைக் குலைக்கும் ஜீப்புக்கள், லாரிகள் உருவில், புதிதான நடை உடை பாவனைகளை உடைய மக்கள் உருவில் புரட்சி அந்தச் சூழ்நிலைக்கு வந்தது.

காடுகள் அழிந்தன; மேடுகள் சமைந்தன. கட்டடங்கள், கொட்டகைகள் உருவாயின; இரும்பும், சிமிட்டியும் வந்து குவிந்தன. இயற்கையன்னை கம்பீரமாகக் கொலுவிருக்கும் சோலை, எச்சிலும், துப்பலும் அழுக்கும், இரைச்சலும் மலிந்த சந்தைக் கடையாக மாறியதைப் பார்த்தபோது அவளுக்கு நெஞ்சு கனத்தது. நாளுக்கு நாள் இனந் தெரியாத பீதி அவளைக் கவ்விக் கொண்டது.

புரட்டாசி மாசத்து மாலை. மழை பெய்து ஓய்ந்து மண்ணெல்லாம் குளிர்ந்து நிறைவில் அமிழ்ந்திருந்தது. வட்டத்தாமரைகள் போல், முத்துக்கள் இதழ்களை அலங்கரிக்க, அவள் சதுர மண்ணில் கோசுகள் பூத்திருந்தன. வானிலே அன்று வண்ண வில் தோன்றியது.

இக் கோடிக்கு அக்கோடி, எழில் மிகுந்த நீண்ட வான வில்.

ஆகா! அந்த ஒற்றைச் சிகரத்தில் அந்த வில்லின் நடு வளைவு தொட்டுக் கொண்டிருந்த காட்சியை அவளால் எப்படி மறக்க முடியும்?

எழில் மிகு வண்ணமாலை அடிவானில் மறைய மறைய, இறைவனுக்கு வண்ணக் கிரீடம் வைத்து, வண்ண ஒளிகளால் முழுக்காட்டினுற் போன்று தோன்றிய காட்சியை அவள் அன்றுபோல் ஒரு நாளும் கண்டிருக்கவில்லை.

அவள் தன்னை மறந்து அந்தக் காட்சியில் ஒன்றியிருந்த வேளையிலே ஜோட் டொலிகள் அவள் கவனத்தைத் கலைத்தன.

இன்பத்தினூடே துன்பம் பாய்ந்து வந்து விட்டதன் அறிகுறியை அவள் அப்போதே உணர்ந்து விட்டாள்.

அந்நியர் என்ற உணர்வின் மருட்சியுடன் அவள் இரவுக் காவலுக்குப் போடப்பட்டிருந்த குடிசைக்குள் போய் நின்று கொண்டாள்.

அவளுடைய அம்மை சித்தப்பன் மகன் ஜோகி, பெரியம்மை மகன் ரங்கன் இவர்களுடன் இன்னும் இரண்டு சராய்க்காரர்கள் இருந்தனர். ஆள் ஒருவன் நில அளவைச் சங்கிலியுடன் தயாராக நின்றுன். மாதிக்குப் புரியாத மொழியில் ஜோகி அந்த அந்நியர்களுடன் பேசினுன்.

அவர்களுடைய 'ஹட்டி'*யில் கல்விப் புரட்சியும் நாகரிகப் புரட்சியும் உண்டாகி விட்டதற்கு எடுத்துக் காட்டாக உயர் கல்வி கற்று வெளிநாட்டு அநுபவம் பெற்று வந்த இளைஞர்களில் ஒருவன் ஜோகி. அந்தச் சதுரத்தை அவர்கள் அளந்தார்கள்.

அன்றிரவு அண்ணன், அவளிடம் அந்தச் செய்தியை உடைத்தான்.

எத்தனையோ தேயிலைத் தோட்டங்களும், பசுமை குலுங்கும் மரங்களும் அழிந்தாற்போல், அவளுடைய தோல்வியை வெற்றியாக்கிய அந்த மண்ணின் உயிர்த்தன்மை அழிந்து போகும்; அவளிடமிருந்து அதைப் பறித்து, உயிர்த் தன்மையை அழித்து விடுவார்கள்.

இதை நினைக்கத்தான் அவளால் தாள முடியவில்லை.

அண்ணன் என்னென்னவோ சமாதானம் சொல்லிப் பார்த்தான்.

முதன்முதலாக அந்தப் பிரதேசத்தில் இயந்திரயுகத்தின் முன்னேடியாக வந்து தெருக்களிலும், வீடுகளிலும், குடிசைகளிலும், தேயிலைத் தொழிற்சாலைகளிலும் ஒளி கூட்டும் மின்விசையின் பெருமைகளை அவன் பலப்பல கோணங்களில் அவளுக்கு எடுத்துரைத்தான். அந்த மாபெரும் சக்தியின் உதவியால், அவள் அறியாத வெளி உலகம் எப்படியெல்லாம் முன்னேறி யிருக்கிறது என்று விளக்கினுன். அந்தச் சக்தியின் உதவியால் உற்பத்திக்கு வேண்டி, அவள் அந்த அற்பத் தியாகம் செய்தே தீர வேண்டும் என்று அறிவுறுத்தினுன்.

வட்டில் சோற்றைத் தட்டிப் பறித்து விட்டு, நாளைக்கு அமுதம் பொழியும் என்று அவன் தேறுதல் சொன்னுற் போலிருந்தது அவளுக்கு.

"நானூறு ரூபாய் வரும் தங்கச்சி!" என்றுன் அண்ணன், பிரமை பிடித்து உட்கார்ந்திருந்த அவளிடம்.

நானூறு ரூபாய்! எத்தனை ரூபாய்கள் வந்தாலும் அந்த மண் பறி போன துயரத்தை நிறைவாக்க முடியுமா?

"நான் மாட்டேன்......மாட்டேன், நானூறு ரூபாயில் அந்த உயிர்ப்பு உண்டா?" என்று அவள் உள்ளம் துடித்தது; கதறியது.

---

* ஹட்டி: நீலகிரிவாழ் படுக மக்களின் குடியிருப்பு

இப்போது தமிழிலும் கிடைக்கும்

மஹாத்மா காந்தி

காந்திஜி வாழ்க்கைப் படங்களின் கோவை

உலகெங்கிலுமிருந்து திரட்டிய சுமார் 300 போட்டோக்களின் தொகுப்பு, ராஜாஜியின் எழுத்தோவியத்துடன்

ஆர்ட் காகிதம் 14" × 9½" சைஸ்

விலை ரூ. 10.00 – ரிஜிஸ்தர் தபால் கூலி ரூ. 2.25

பப்ளிகேஷன்ஸ் டிவிஷன்

தபால் பெட்டி 2011 :: டில்லி-8

DA 58-378



மரக்கறிக் கூட்டு

சமைத்துப் பாருங்கள்

6 பெரிய உருளைக் கிழங்குகள், 1 முள்ளங்கி, கையளவு பிரஞ்சு பீன்ஸ், 2 மேஜைக் கரண்டி அளவு ரெக்ஸ் ஸலாட் ஆயில், 5 அல்லது 6 கறிவேப்பிலை, அருமையாக அரிந்த ஒரு வெங்காயம், ஒரு கப் உரித்த பச்சைப் பட்டாணி, அளவுக்கு உப்பு, ஒரு மேஜைக் கரண்டியளவு கறி பௌடர், ஒரு தேக்கரண்டியளவு ப்ரௌன் அண்டு போல்ஸன் கார்ன்ப்ளவர்—½ கப் பாலில் கலந்தது.

காய்கறிகளை சுத்தம் செய்து, நறுக்கி, பட்டாணியுடன் சேர்த்து பாத்திரத்தில் போட்டு, ½ கப் தண்ணீர் சேர்க்கவும். கறி பௌடரையும், கறிவேப்பிலையும் இதோடு கலக்கவும். ருசிக்குத் தகுந்தவாறு உப்பு சேர்த்து நன்றாக வேகவைக்கவும். இன்னொரு பாத்திரத்தில் ரெக்ஸ் ஸலாட் ஆயிலை ஊற்றி, நறுக்கிய வெங்காயத்தை சிவக்கும் வரை வதக்கவும். முதலில் வெந்த கறிகளை இதில் கொட்டி, பாலும் சேர்த்து வேகமாகக் கலக்கி, 10 நிமிட நேரம் நன்றாக மூடி வைக்கவும். பிற்பாடு இதைச் சப்பாத்திகளுடன் பரிமாறி சாப்பிடவும்.

இந்தியாவில் ஏஜெண்டுகள் : பாரி அண்டு கோ. லிட்.

ப்ரௌன் அண்டு போல்ஸன் கார்ன்ப்ளவர் பேட்டன்ட் ஆக அங்கீகரிக்கப்பட்டது.

இதன் பரிசுத்தத் தன்மைக்கு இப்பரீக்ஷையைச் செய்து பாருங்கள் :-

இரண்டு மேஜைக் கரண்டியளவு ப்ரௌன் அண்டு போல்ஸன் பேட்டன்ட் கார்ன்ப்ளவரை கொதித்து ஆற வைத்து குளிர்ந்த ஜலத்தில் நன்றாகக் கலக்குங்கள். 24 மணி நேரம் இவ்விதம் வைத்த பிற்பாடுங்கூட கெட்ட வாசனை உண்டாகாமல், வாசத்ததாகவும், பெக்டீரியா முதலிய அசுத்த அணுக்களால் சேதப்படாமலும் இருப்பதைக் காண்பீர்கள். மற்ற ப்ரௌன் அண்டு போல்ஸனின் உயர்தர சாதனங்கள் என்னவென்றால்: ரெய்ஸ்னி, கஸ்டர்ட் பௌடர், ப்ளேவர்ட் கார்ன்ப்ளவர்.

இங்கிலீஷ், ஹிந்தி, அல்லது தமிழ் பாஷைகளில் பிரசுரிக்கப்பட்ட அழகிய சமையல் புஸ்தகம் இலவசமாக வேண்டுவோர் இங்குள்ள கூப்பனை பூர்த்தி செய்து அனுப்பவும். (வேண்டாத பாஷையை அடித்து விடவும்)



தபால் செலவிற்காக 15 நயா பைசா விலையுள்ள தபால் ஸ்டாம்பு நான் இதோடு அனுப்புகிறேன்.

ஸ்ரீ/ஸ்ரீமதி/செல..

....

விலாசம்..

டிபார்ட்மெண்ட் ? ...

கார்ன் ப்ராடெக்ட்ஸ் கோ.
(இந்தியா) ப்ரைவேட் லிமிடெட்
தபால் பெட்டி : 994, பம்பாய் 1

பயனில்லை. புலி வருமோ வருமோ என்ற அச்சமில்லை. வந்து விழுங்கியே விட்டது. கண்களில் நீர் சோர, அந்த மண்ணைப் பிரிந்து அவள் வந்தபோது, வரப் போகும் அபாயத்தைப் புரிந்து கொள்ளாமல் அறியாக் குழந்தைகள் புன்னகை செய்தாற்போல் அந்த இலைக் கோசுச் செடிகள் அவளுக்குத் தோற்றம் தந்தன. இதுவே கடைசி!...இனி இந்த மண், உயிரற்று....வெறும் மண்ணாகிக் கட்டிக் கட்டாந்தரையாகக் கிடக்கும்!

அவள் வாழ்வும் கட்டாந்தரையாகத் தான் ஆயிற்று!

இந்த எட்டு மாதத்தில், அந்த மேட்டைத் தாண்டி, அந்த இடத்தைப் போய்ப் பார்க்க வேண்டும் என்ற ஆதாரம் அவளுக்கு இல்லாமல் இல்லை. அவளுடைய 'மாதேகவர'ரின் எண்ணம் அவளைத் தூண்டாமல் இல்லை.

ஆனால்....உயிர்க்களையற்ற, அந்த உயிரான மண்ணை அவள் எப்படிப் பார்த்துச் சகிப்பாள்? கட்டாந்தரையாய்க் கல்லும் சிமிட்டியும் தாங்குகிறதோ? அல்லது கறுப்புத் தாரைக் கொட்டி மெழுகி,உயிர்த் துடிப்பையே அமுக்கிச் சாலையாக வளைத்து விட்டார்களோ? அவள் கண்முன் பசிய இடங்கள் அழிந்து பாம்புபோல் வளையும் சாலை உருவாக வில்லையா?

ஆதவன் மேற்கே சாய்ந்து கொண்டிருந்தான். மாடுகளை ஓட்டிக் கொண்டு சிறுவர்கள் வீடு திரும்பி விட்டார்கள். பள்ளிக்கூடம் விட்டுக் குழந்தைகள் ஓடி வருகிறார்கள். உள்ளே நஞ்சம்மை மாவரைத்துக் கொண்டிருக்கிறாள்.

'அட.....! இந்த மாடு மேய்க்கும் பெட்டன் ஏன் இப்படி ஓடி வருகிறான்?'

அவளை நோக்கித்தான் அவன் வேகமாக ஓடிவந்தான்.

மாதி சட்டென்று எழுந்து நின்றாள். "என்ன?" என்று கேட்டாள்.

"ராம கௌண்டரை லாரி மோதிட்டது. காயம். கும்பல் கூடிக் கிடக்குது. சேதி சொல்ல ஓடியாந்தேன்..." பையன் மூச்சிரைக்கச் சேதியை அவிழ்த்தான்.

பதறித் துடித்தவளாக அண்ணி விரைவாக ஓடிவந்தாள்.


"என்ன? என்ன?"

"லாரி மோதித் தள்ளிட்டது. ஆசுபத்திரிக்குத் தூக்கிப் போறாக, கௌடரை."

சேதி அந்தக் குடியிருப்பையே வெளியில் கூட்டிவிட்டது.

சேலை உடுத்தப் பழகினாலும், தலையில் மறைப்பின்றி வெளிக்கிளம்பாத நஞ்சம்மை, போட்டது போட்டபடி கிடக்கத் தலைத் துண்டை மறந்து மேட்டில் ஏறி ஓடினாள்.

மாதிக்கு வயிற்றைக் கலக்கியது. நெஞ்சு பதறியது. அவளுக்கு ஆறுதலாகப் பாசம் ஒட்டிய தான் அவன் ஒருவன்தானே? அவன்,.....அவனுமா? கால்கள் விரைந்து மேட்டைக் கடந்து அவளைத் தள்ளிப் போயின. அவள் எட்டு



மாசங்களாக வரத்துணியாத மறுஉலகம். நகரத்துச் சந்தடியின் ஒரு துணுக்குச் சிதறி வந்து விழுந்தாற் போன்ற சாலைச் சந்தியைக் கடந்து, வளைந்து, வளைந்து அவள் விரைந்தாள்.

மேடு பள்ளங்களைத் தாண்டி வந்து பாட்டு ஒலிக்கும் சினிமாக் கொட்டகையைச் சரிவில் இப்போதுதான் அவள் பார்க்கிறாள். அங்கேதான் லாரி நசுங்கி நிற்கிறது; கூட்டம்; நீலக்கம்பளிச் சராய் தரித்த போலீசுக்காரர் நிற்கிறார்... நஞ்சம்மை அந்தக் கும்பலுக்குள் புகுந்து விட்டாள்......

'அட!......'

'சிரித்துக் கொண்டு வருபவர் அண்ணனு! அண்ணனேதான்......'

'' ஒரு இழையிலே தப்பி விட்டேன். தூக்கிப் போட்டு விட்டது.''

அண்ணன் சிரிக்கிறார்.

'' ஆசுபத்திரிக்கு இட்டுப் போறாகன்னு எப்படிப் பயங்காட்டிட்டான் அந்தப் பய?'' என்று நஞ்சம்மை கேட்டாள்.

'' டிரைவருக்கு மட்டும் நெற்றியிலே காயம். லாரியின் முன்பாகம்தான் சேதம். செலவு வேறே...கஷ்டம்....''

மாதியை அவள் ஓரமாக நிற்கப் பார்த்தபோது, வியப்பு மேலோங்கியிருந்தது. சாலைச் சந்தடியில் அவளுக்குப் பேச்செழவில்லை.

அபாயமில்லை என்றதும் நஞ்சம்மை வீடு நோக்கி விரைந்தாள்.

மாதி திரும்பவில்லை.

எல்லாம் இரண்டு நிமிஷப் பதைபதைப்பு. ஆஸ்பத்திரி என்ற பொய் காட்டி, அவளை அங்கு எது தள்ளிவந்தது? ஏன் தள்ளி வந்தது? எதற்காக் என்ற கேள்வி அவளுக்குப் புரியாத சிக்கலாக இல்லை.

அந்தச் சிகரம் அவளை 'வா'வென்று அழைத்தது. 'நீயாக வரவில்லை, நானாக அழைக்கிறேன் வா'வென்று அழைத்தது.

அவள் நீள நடந்தாள்.

எட்டு மாசங்களில் காடெல்லாம் நாடாகி விட்டதே? வரிசை வரிசையாக வீடுகள்; விளக்குகள்; முற்றங்கள் தோறும் கோலங்கள்; வண்ண வண்ணச் சேலையுடுத்த பெண்கள்.

அதோ... சதுரம்... அவள் இடம்! அவள் விழிகள் நிலைத்தன. 'சோ' என்று மரக்கிளைகள் உராயும் ஒலியும், நரிகளின் ஓலமுமே கேட்கும் அந்த வேளையிலே, எத்தனை இன்ப ஒலிகள்!

சதுரம் சதுரமாகவே இருந்தது. ஓரங்களெல்லாம் வண்ணப் பூஞ்செடிகள். நடுவே .... அத்தனையும் பூமுகங்கள், மகிழ்ச்சி கொந்தளிக்கும், சுவடுபடியாத அழகு வடிவங்கள். வண்ண வண்ணக் கம்பளிச் சட்டைகள் தரித்த குழந்தைகள் ஒருவரா, இருவரா? முப்பது பேர்களுக்கு மேல் பனி விழும் வேளையையும் பொருட்படுத்தாமல் அந்தச் சதுரத்தில் ஓடி ஆடிக்கொண்டிருக்கிறார்கள். சதுரத்தை ஒட்டிச் சுவரில் புதிதாக ஒரு கட்டடம் முளைத்திருக்கிறது. அதில் எழுதியிருந்ததை மாதிக்குப் படிக்கத் தெரியாவிட்டாலும், அதன் குழந்தைகளின் மழலைமாறாக் குரல்கள் ஒலிக்கும் பள்ளிக்கூடம் என்பது புரிகிறது. அலையலையாகப் பாயும் சிரிப்பொலி அவள் செவிகளில் இன்பத் தேனை நிரப்பி உள்ளத்தைச் சிலிர்க்கச் செய்தது.

அவள் கற்பனைக்கும், காணும் காட்சிக்கும் எத்தனை வித்தியாசம்? அந்த மண் அவள் நினைத்தாற் போல் கட்டாந்தரையாகி விடவில்லை. எத்தனை பிஞ்சுக் கால்கள், அந்த மண்ணைச் சிலிர்க்கச் செய்ய! அந்த மகிழ்ச்சி ஆரவார ஒலியில் தினமும் முழுகி எழுந்திருக்கும் அந்த இடம் முன்னெப்போதையும் விட அழகுள்ளதாக அவளுக்குத் தோன்றியது. அவள் நிலைத்த பார்வையுடன் நிற்கையிலே, குழந்தைகள் விளையாட்டு முடிந்து வீடுகளுக்குச் சென்று விட்டார்கள்.

அழகான பாத்திகளில் சிவப்பும் மஞ்சளுமாய்ப் பூஞ்செடிகள்.

நடுவே அத்தனை பிஞ்சுக்கால்களும் பதித்த முத்திரைகள். ஓரிடத்தில் அவர்கள் கீறியிருக்கும் கோடும், நட்டிருக்கும் குச்சியும், நாளை அவர்கள் வருவார்கள் என்ற நம்பிக்கையளித்துக் கொண்டு நிற்கின்றன. ஏதோ புனித பூமியைத் தொடுவதுபோல் கால்கள் கூச, அவள் அங்கு வந்து நின்றாள். சுற்றும் முற்றும் பார்த்தாள்.

ஆம்! அதுபோல் குழந்தைகள் விளையாட வசதியாக, ஒரு சரிவில்கூட நிலம் பரந்திருக்கவில்லை.

துருவெடுத்த துயரக்கேணியில் பால் பொங்கி வந்தாற்போல் உளம் நிறைந்தது. எதிரே அவள் ஒரு தடவை நிமிர்ந்து பார்த்தாள்.

அந்தச் சிகரம்.....இறைவனின் திருக்கோலமாகவே காட்சியளித்தது. பின்னே உதயமாகிக் கொண்டிருந்த பூரண சந்திரன், மேகக் கற்றைகளில் மறைந்து, பிறையணிந்த பிரானையே அவள் கண்முன் காட்டினன். விழிகள் பனிக்க, மாதியின் கரங்கள் தன்னையறியாமல் குவிந்தன. அவள் எதிரே அவளுடைய உலகம் பரந்து விரிந்து கிடந்தது.

Printed and Published by R. Ananthanarayanan for the Proprietors Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press, Kilpauk, Madras 10
Managing Editor: T. Sadasivam



வெற்றியோ தோல்வியோ
அக்கறையில்லை
—அங்கே நம்மை
உற்சாக மூட்டுவதற்கு
டீ இருக்கும் வரை!
நான்தான் டீ
ஆடுபவர்களுக்கும் பார்ப்பவர்களுக்கும் நான் சேவை செய்கிறேன்
TEA BOARD INDIA

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon